பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 07 வெள்ளிக்கிழமை (23.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 027



14

அடிமைகளைத்தான் அரசு விரும்புகிறது



21

தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியது உண்மை தான்



25

மீண்டும் வாய்ப்பு

# காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குத் தர முடியாது

## அரசு நேற்றுத் திட்டவட்டமாக அறிவிப்பு
## அப்படி ஒரு தீர்வே வேண்டாம்: கூட்டமைப்பு

கொழும்பு, டிசெம்பர் 23

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களைத் தரமுடியாது என்று அரசு நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அந்த அதிகாரங்களை வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதில் பயன் ஏதும் இல்லை என்றும் அரசு தெரிவித்துள்ளது. அந்த அதிகாரங்கள் தரப்படாவிட்டால் அப்படியொரு தீர்வே வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

''பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது; ஒருபோதும் வழங்கவும் மாட்டோம்'' என்று அடித்துக் குறிப்பிட்டார் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று அரச திணைக்களத்தில் நடைபெற்றது.

அரசுடனான பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கோருகின்றது என்றும் அரசு அவற்றை வழங்க ஒருபோதும் முன்வராது என்பதால் தொடர்ந்தும் பேச்சு நடத்துவது காலத்தைக் கடத்தும் செயல் என்றும் கெஹலிய தெரிவித்தார்.

இந்தியாவில் சோனியாவுக்கு நடந்த சம்பவத்தை இதற்கான உதாரணமாக அவர் குறிப்பிட்டார். ''தனது சொந்த மாநிலத்துக்குச் செல்லச் சோனியா அம்மையார் அனுமதி பெறவேண்டி இருக்கிறது. முன்னாள் முதல்

பக். 27

## கடும் மழை தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ.23

வடக்கு - கிழக்குப் பருவப் பெயர்ச்சி காலநிலை காரணமாக இன்றும் கடும் மழை பெய்யும் அதேவேளை பலத்த காற்றும் வீசும் எனவும், ஆழ் கடல் கடும் கொந்தளிப்பாக இருக்குமென்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நேற்று மதியம் 12 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இன்று வெள்ளிக்கிழமை இரவு வரை இந்த காலநிலை தொடரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்குப் பருவப் பெயர்ச்சி காலநிலையினால் கடும் மழை தொடர்வதுடன் பலத்த காற்றும் வீசும். வடக்கு

பக். 27

## அதிகாரமற்ற தீர்வை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

கொழும்பு, டிசெ. 23

அரசியல் தீர்வுத்திட்டத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த அதிகாரங்கள் இன்றி வெறுமனே வழங்கப்படும் தீர்வை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் - என்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாக இனப்பிரச்சினைக்

பக். 04

## ஆணைக்குழு பரிந்துரைகளில் உள்ள சட்டச் சிக்கல்களை ஆராய்கிறது அரசு

### அபிப்பிராயம் அறிய சட்டமா அதிபரின் உதவி நாடப்படுகிறது

கொழும்பு, டிசெ.23

நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சட்டச்சிக்கல்கள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அரசு அவசர அபிப்பிராயத்தைக் கோரியுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாதக - பாதகத் தன்மை, தேசிய பாதுகாப்பு உட்பட முக்கியமான சில காரணிகளைக் கருத்திற்கொண்டே அரசு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை கோருவதற்குத் தீர்மானித்துள்ளது என நம்பகரமாகத் தெரியவருகிறது.

அரசின் இந்தக் கோரிக்கையை அடுத்து, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுபவம் வாய்ந்த இரு பிரதி சொலிசிட்டர்கள் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டச்சிக்கல்கள் குறித்து தீவிரமாக ஆராய்ந்த பின்னர், சட்டமா அதிபர் திணைக்களம் தமது

பக். 27

## படையினரின் தவறுகளைக் குற்றஞ்சாட்டாது நழுவியுள்ளது நல்லிணக்க ஆணைக்குழு

### 'இந்து' நாளிதழ் விமர்சனம்

புதுடில்லி, டிசெ.23


இறுதிக்கட்டப்போரில் ஏற்பட்ட சிவிலியன் பாதிப்புகள், சிவிலியன் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள் தொடர்பில் இராணுவத்தின் தவறுகளைக் குற்றஞ்சாட்டாது நழுவியுள்ளது நல்லிணக்க ஆணைக்குழு.

- இவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து 'இந்து' பத்திரிகை விமர்சித்துள்ளது.

இதுதொடர்பில் தமிழகத்தில் இருந்து வெளியாகும், வலது சாரி, தமிழர் விரோதப் பார்ப்பன கருத்தியலைக் கொண்ட பத்திரிகையான 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இலங்கை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது புலிகள் இயக்கம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டதுடன், முடிவடைந்த இலங்கை இராணுவத்தின் இறுதிக்

பக். 27



தமிழர்களுக்கு பிரச்சினை ஒன்றும் இல்லையே! நீங்கள் எப்படி நலமாக இருக்கிறீர்களா என்று கேட்கிறார் ஜனாதிபதி?

2012 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் மீதான வாசிப்பு நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்த நிலையில், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இரவு விருந்துபசார நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கைலாகு கொடுத்து உரையாடுகிறார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன்.

## வடக்கில் அதிகரிக்கும் பிரச்சினைகள்: தீர்வுகாண சமூக மட்டத்திலான குழு

### யாழ். வந்த ரஜீவ விஜேயசிங்க ஆலோசனை

யாழ்ப்பாணம், டிசெ.23

பொலிஸ் நிலையங்களில் உள்ள சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் தனியே பொலிஸ் உத்தியோகத்தர்களை மாத்திரம் கொண்டிராமல் சமூக மட்ட மதத் தலைவர்களையும் உள்ளடக்கியதாகக் குழு ஒன்று அமைப்பதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைக் குறைக்க முடியும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுக்கான ஆலோசகருமான பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்க தெரிவித்தார்.

யாழ். மாவட்ட இணக்கப்பாட்டுக் கூட்டம், யாழ். பொது நூலக கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

பக். 04

## அரசு மீதான நம்பிக்கை தகர்கிறது

கொழும்பு, டிசெ.23

பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லை, இராணுவ முகாம்கள் வாபஸ் இல்லை, என்ற ஜனாதிபதியின் அறிவிப்புகள் புதிய ஆண்டில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையைத் தகர்த்து விட்டுள்ளன. புலிகளை அழித்து, போரை முடித்து வைத்து விட்டு சமாதானத்தை வாங்கித்தருகிறோம் என இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்திய, அமெரிக்க, ஐரோப்

பக். 04

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை திரித்துக் கூறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அமைச்சர் நியோமல் பெரேரா அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 23

வன்னி இறுதிச்சமரில் இடம் பெற்றவை எனக்கூறப்படும் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் பிழையான கருத்துகளை வெளியிட்டு அதனை விமர்சனம் செய்யும் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

பக். 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது.

# திருமலையில் தமிழ் ஆசிரியையை படுகொலை செய்த பாதகன் கைது

திருகோணமலை, டிசெ. 23

திருமலை, மூதூர் பாட்டாளிபுரம் பகுதியில் ஆசிரியை படுகொலை தொடர்பில் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் பாலசிங்கம் நகுலேஸ்வரன் (வயது-38). இவர் சந்தோசபுரம், சம்பூர் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் 24 ஆம் திகதி பாட்டாளிபுரம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற்கு சென்று கொண்டிருந்த குருகுலசிங்கம் சிறிவதனி (வயது-33) என்ற இளம் ஆசிரியையை கோடரியால் அடித்துக்கொன்றுவிட்டு தங்க ஆபரணங்களைச் சூரையாடியவர்களைக் கைது செய்தவேளை முதல் சந்தேக நபரான நகுலேஸ்வரன் கொலை செய்யப்பட்ட தினத்திலிருந்து காட்டில் மறைந்திருந்தார் என்ற தகவல் கிடைத்தது.

காட்டுப் பகுதியில் மறைந்திருந்த இவர், விறகு வெட்டிச் செல்லும் மக்களைப் பயமுறுத்தி அவர்களிடம் உணவுகளைப் பெற்றுச் சாப்பிட்டு வந்துள்ளார்.



இதனைக் காரணமாக வைத்துப் பொலிஸாரும் நேற்று முன்தினம் விறகு வெட்டுபவர்கள் போல் அப் பகுதிக்குச் சென்று சந்ததேக நபரைச் சுட்டுப் பிடித்துள்ளனர்.

பின்னர் பின்தொடர்ந்த பொலிஸாருக்கு கத்தியால் வெட்ட முற்பட்ட வேளை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். இதன்போது அவருக்கு இடது கையிலும், வலது காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆசிரியை கொல்லப்பட்ட தினம் முதல் இச்சந்தேக நபர் கிராமவாசிகளாலும் தேடப்பட்டு வந்தார் என்றும் தெரியவருகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பாலசிங்கம் நகுலேஸ்வரன் தற்போது திருகோணமலை அரசினர் பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பூர் பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

# படையினரைக் காட்டிக் கொடுக்கும் அறிக்கை

## பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.23

யுத்த வெற்றியைக் குறைத்து எடைபோட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு, இராணுவத்தையும் காட்டிக்கொடுத்துள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டபோதே வைத்தியசாலை வளாகத்தில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத்தை அரசு உரிய வகையில் அனுசரிப்பதில்லை. பொலிஸாருக்கும் இதே நிலைமைதான்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு எனக் கூறப்படும் குழுவொன்றை அமைத்து அரசு எமது யுத்த வெற்றியைக் குறைத்து மதிப்பிட்டுள்ளது.

இராணுவத்தினர் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனர். நான் இருக்கும்வரை இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பதற்கு இடமளிக்கமாட்டேன் - என்றார். (ஒ-சி)

# 'லிப்ற்' அமைக்க பொறியியலாளர் குழு வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிகளுக்கு 'லிப்ற்' பொருத்துவது தொடர்பாக ஆராய்வதற்குப் பொறியியலாளர் குழு ஒன்று நேற்றுக் கொழும்பில் இருந்து யாழ். வந்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வைத்திய விடுதிகளுக்கு 'லிப்ற்' பொருத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாமதமாகிவருகின்றன. இது தொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டிப்பட்டிருந்தது.

'லிப்ற்' வசதி இன்மையால் நோயாளர்களை விடுதிகளுக்குக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்ட வருகின்றன.

'லிப்ற்' பொருத்தும் பணிகள் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டதுடன் அதற்கான முற்பணமும் வழங்கப்பட்டுள்ளதாக போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தன. இந்த நிலையில் 'லிப்ற்' பொருத்தும் பணிகளை ஆராய்வதற்கு பொறியியலாளர் குழு ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து அது பற்றி ஆராய்ந்துள்ளது. (த-26)

# பரீட்சைத் திணைக்களத்துக்கு புதிய ஆணையாளர் நாயகம்

கொழும்பு, டிசெ.23

பரீட்சைகள் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக டபிள்யூ. எம்.ஜே. புஷ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் தற்போதைய ஆணையாளரான அநுர எதிரிசிங்க டிசெம்பர் 31 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார். அதனால் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய ஆணையாளராக டபிள்யூ. எம்.ஜே. புஷ்பகுமாரவை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ங-சி)

# ஆளுங்கட்சிக்கு எதிராகச் செயற்படும் உள்ளூராட்சி உறுப்பினர் மீது நடவடிக்கை

கொழும்பு, டிசெ.23

ஆளும் கட்சிக்கு எதிராக செயற்படும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை சுதந்திரக் கட்சித் தலைமையகம் எச்சரித்துள்ளது.

குறிப்பாக பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் மாநாகர சபைகளுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளை தோற்கடிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக இத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன என்று இலங்கை சுதந்திரக் கட்சி தலைமையகம் அறிவித்துள்ளனது.

இந்த நிலையில், ஆளும் கட்சியால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்ட யோசனையை எதிர்க்கும் ஆளும் கட்சி பிரதிநிதிகளின் உறுப்பினர் பதவியை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் இவ்வாறு வாக்களிக்கும் பிரதிநிதிகள் கட்சியின் உறுப்புரிமையையும் இழக்க நேரிடும் என்றும் கட்சியின் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் அலரி மாளிகையில் இது தொடர்பான கூட்டம் அண்மை யில் நடைபெற்றபோதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (ங-சி)

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக ஆணைக்குழு உரிய விசாரணை செய்யவில்லை

## கனடா உயர்ஸ்தானிகர் குற்றச்சாட்டு

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முக்கியமான குற்றச்சாட்டுக்கள் குறித்து உரிய விசாரணை முடிவுகள் தரப்படவில்லை என்று கனடா தெரிவித்துள்ளது. எனினும் ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் லெவி தெரிவித்துள்ளார்.

- இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதிப்போரின் போது இடம்பெற்றதாக சர்வதேச நாடுகள் இலங்கை மீது சுமத்தி வரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஆணைக் குழுவின் அறிக்கையில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. அது அறிக்கையின் பாரியகுறைபாடாக உள்ளது.

எனவே குறித்த சம்பவங்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் பரிந்துரைகளை மேற்கொண்டிருக்க முடியும்.

உண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, இலங்கையின் நல்லிணக்கத்துக்கு வழிவகுத்திருக்கவேண்டும். எனினும் அறிக்கையை பார்க்கும் போது இலங்கைப் படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது புலனாகிறது.

முக்கிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் ஆணைக் குழு உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதனை வெளிப்படுத்தும் போதே இலங்கையில் நீண்டகால சமாதானத்துக்கு அது அத்திபாரமாக அமையும் - என்றும் புரூஸ் லெவி சுட்டிக் காட்டியுள்ளார். (ங-சி)

# நிகழ்வுகள்

ஒளிவிழா

யாழ். வலயக் கல்வி அலுவலத்தின் ஒளிவிழா நிகழ்வு காலை 9.45 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். வலயக் கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் என். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுண்டுக்குழி யோவான் ஆலயப் பங்குத் தந்தை அருள்பணி எஸ்.ஜே.கியூ. ஜெயரஞ்சன் கலந்து கொள்வார். (ம-311)

★ ★ ★

உடுவில் மல்வம் திருக்குடும்ப ஆலய பங்கு மக்கள் நடத்தும் ஒளிவிழா மாலை 5 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக அருட்தந்தை பீற்றர் அடிகளார் கலந்துகொள்வார். (ம-313)

★ ★ ★

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஒளி விழா நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-51-313)

கலந்துரையாடல்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் காலை 8.30 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (ம- 207)

★ ★ ★

யாழ். மாநகர சபை நடத்தும் ஜே/85 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம- 313)

கருத்தரங்கு

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தர தமிழ்ப்பாட மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

# புத்தாண்டிலாவது பொது மன்னிப்பு வழங்குங்கள் அரசியல் கைதிகளின் உறவுகள் ஜனாதிபதிக்கு மனு

கொழும்பு, டிசெ.23

நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது உறவுகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விரைவில் விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், பெற்றோர் ஆகியோர் கூட்டாக இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மகஜரொன்றைக் கையளிக்கவுள்ளனர்.

சிறைவைக்கப்பட்டுள்ள சுமார் 850 தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் கையொப்பமிட்டு மேற்படி மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கவுள்ளனர்.

தொண்டர் நிறுவனமொன்று இந்த விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்கின்றது என்றும், டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மன்னிப்புக் கோரும் இந்த மகஜர் ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெறும் என்றும் நம்பகரமாக அறிய முடிகின்றது.

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பார்கள். எனவே, எதிர்வரும் தை மாதத்திலாவது எமது உறவுகளுக்கு புதுவழியொன்று பிறக்கும் என்ற நம்பிக்கையிலேயே பொதுமன்னிப்பு வழங்குமாறு கோரி நிற்கின்றோம் என தமிழ்க் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

''நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மூலமாவது எனது மகனுக்கு விடிவு கிட்டும் என எதிர்பார்த்தேன். ஆனால், சோகம் தான் தொடர்கின்றது. இதனால் தான் தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் ஆகியோர் கலந்தாலோசித்து ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்ப தீர்மானித்தோம்.''

- இவ்வாறு மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதியொருவரின் தாய் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் இவர் சாட்சியம் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினோம். வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தோம். ஆனால், இவை எதுவும் நடைபெறவில்லை. எனவேதான் எமது உறவுகள் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கோரும் நிலைக்கு வந்துள்ளனர் என தமிழ்க் கைதிகள் கூறினர் என்று அவர்களை பார்வையிடுவதற்குச் சென்று திரும்பிய பிரமுகரொருவர் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தி அவர்களை விடுதலைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற போதிலும் அது குறித்து இலங்கை அரசு கவனம் செலுத்தவில்லை என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக சிறைச்சாலைகளில் உள்ள எமது உறவுகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவிட்டனர். கருணை உள்ளம் படைத்த ஜனாதிபதி பிறக்கின்ற புத்தாண்டிலாவது எமது உறவுகளுக்கு விடிவைத் தருவார் என நம்புகிறோம் என்று கைதிகளின் உறவினர்கள் மிகவும் உருக்கமான முறையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் மகஜரின் பிரதியொன்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ஒ-சி)

# விஷப் பாம்புகளுடன் வாழ்ந்துவரும் மன்னாரிலுள்ள சன்னார் கிராம மக்கள்

வன்னி யுத்தத்தின் பின் மீள் குடியமர்வு செய்யப்பட்ட மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராம மக்கள், தற்போது விஷப்பாம்புகளுடன் வாழ்ந்து வருவதாக தெரிவிக் கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் சன்னார் கிராம மக்கள் கருத் துத் தெரிவிக்கையில்;

யுத்தத்தின் பின் மீண்டும் சன்னார் கிராமத்தில் நாங்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்டோம். தற்போது 145 குடும்பங்களைச் சேர்ந்த 850 பேர் இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம்.

எமது வீடுகளைச் சுற்றி அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. நாங்கள் அடர்ந்த காடுகளுக்கு மத்தியிலே வாழ்ந்து வருகின்றோம்.

தற்போது மழை பெய்து வருகின்றது. இதனால் காடுகளுக்குள் உள்ள பாம்புகளும் விஷப்பூச்சிகளும் எமது குடிசைகளை நோக்கிப் படை எடுக்கத் தொடங்கியுள்ளன. எமது வீடுகள் ஓலைக்குடிசைகளாகவே காணப்படுகின்றன.

எமது கிராமத்தில் அதிக சிறுவர்கள் வசிக்கிறார்கள். அண்மையில் படுத்த படுக்கையில் வைத்து விஷப்பாம்பு தீண்டி 14 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடரும் என்ற அச்சத்தில் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம்.

இரவு நேரத்தில் நித்திரை கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். இரவாகியவுடன் அச்சத்தில் இருக்கின்றோம்.

வீட்டை விட்டு வெளியில் செல்ல முடியவில்லை. நாம் தொடர்ந்தும் முடக்கி வைக்கப்பட்ட அகதிகளாக வாழ்ந்து வருகின்றோம்.

எமக்குப் பின்னர் மீள் குடியமர்ந்தவர்களுக்கு அரசாங்கம் சகல விதமான உதவிகளையும் செய்துள்ளது. ஆனால் எமக்கு எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை. எமக்கு வரும் உதவிகளை இங்குள்ள சிலர் தடுத்து நிறுத்துகின்றனர்.

மாந்தை மேற்குப் பிரதேசச் செயலாளர், அரச அதிபர், சன்னார் கிராம அலுவலர் ஆகியோர் மனம் வைத்தால் எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-601)

# சிறிகொத்தா மீதான தாக்குதல்; கைதான 16 பேர் விடுவிப்பு



சிறிகொத்தா மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினரான மைத்திரி குணரட்ன, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிரால் லக்திலக்க உட்பட 16 பேர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நிர்வாக பதவிகளுக்கான தேர்தல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கட்சியின் தலைவராகத் தெரிவானார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட கரு ஜயசூரியவுக்கு குறைந்தளவான ஆதரவே கிடைத்தது. இதனையடுத்து கரு ஜயசூரிய மற்றும் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு ஆதரவானவர்கள் சிறிகொத்தா மீது தாக்குதலை நடத்தினர்.

இதனால் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டது. இந்தக்குற்றச்சாட்டின் பேரிலேயே மைத்திரி குணரட்ன உட்பட்ட 16 பேர் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே. (ஒ-சி)

# கிளிநொச்சி வர்த்தக நிலையங்களில் தொடர்ந்தும் திருடர்கள் கைவரிசை

## புதன் இரவும் 3 கடைகள் உடைத்துத் திருட்டு

கிளிநொச்சி, டிசெ.23

கிளிநொச்சியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மீது இரவில் திருடர்கள் தொடர்ச்சியாகத் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். கடைகளின் கூரைகளைப் பிரித்துப் பொருள்கள், பணம் என்பவற்றைச் சூறையாடுவதில் திருடர்கள் தொடர்ந்து துணிகரமாக ஈடுபட்டு வருவதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் மூன்று வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருள்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அருகில் உள்ள இரண்டு வணிக நிலையங்களும், நகரின் மையப்பகுதியில் உள்ள இலத்திரனியல் விற்பனை நிலையம் ஒன்றும் நேற்று முன்தினம் புதன் இரவு உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள் என.

கிளிநொச்சி நகரின் மையப் பகுதியில் உள்ள இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் பொருள்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இதேபோன்று, கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு, 14 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒயில் கான்கள் களவாடப்பட்டுள்ளன. இதற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு 6 ஆயிரத்து 500 ரூபா பணம் மற்றும் ஒரு தொகுதிப் பொருள்கள் என்பனவும் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து சகலவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் வங்கியில் கடன்களைப் பெற்று வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வன்னி வர்த்தகர்களின் கடைகள் கிளிநொச்சி, பரந்தன் போன்ற இடங்களில் அடிக்கடி உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டு வருகின்றபோதும் இதனைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என வர்த்தகர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

# வடமாகாண கல்வித் திணைக்களம் முன் ஆசிரியர்கள் நேற்று மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.23

வன்னி மாவட்ட ஆசிரியர்கள் நேற்று வட மாகாண கல் வித்திணைக்களத்தின் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். வன்னி மாவட்டத்தில் ஆசிரியர்களாக கடமையாற்றி ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கான இடமாற்றப் பட்டியல் வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் கடந்த மாதம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கும் வன்னி மாவட்டத்திற்கான இடமாற்றத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் உரிய முறையில் இடமாற்றத்திற்கான ஆசிரியர்களின் பட்டியல்களை தயார் செய்யாத நிலையில் வன்னி மாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களின் இடத்திற்கு புதிய ஆசிரியர்கள் செல்ல முடியாதுள்ளது. இந்த நிலையில் வட மாகாண ஆளுநர் குறிப்பிட்ட இடமாற்றங்களை மார்ச் மாதம் வரை ஒத்தி வைத்து, உரிய ஆசிரியர்களை வன்னிக்கு அனுப்புவதற்காக வன்னியில் இருப்பவர்களின் இடமாற்றத்தை மேற்கொள்ளும்படி அறிவித்துள்ளார்.

இதனைக் கண்டித்தும் தமது இடமாற்றத்தை தை மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டுவரும்படி கூறியும் நேற்று பகல் இந்த மறியல் போராட்டத்தை வன்னி மாவட்ட ஆசிரியர்கள் நடத்தினர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் மருதனார் மடத்தில் கூடிய ஆசிரியர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளைத் தாங்கி மாகாண கல்வித்திணைக்களத்தின் மேல் மாடிக்குச் செல்லும் படிகளில் அமர்ந்திருந்து போராட்டத்தை நடத்திவிட்டு திணைக்களத்தில் உரிய உயர் அதிகாரிகள் எவருமற்ற நிலையில் அலுவலகத்தின் நிர்வாக அலுவலரிடம் தமது மகஜரைக் கையளித்துவிட்டு கலைந்து சென்றுள்ளார்கள்.

குறிப்பிட்ட மகஜருக்கான பதிலை நாளை தருவதாகக் நிர்வாக அலுவலர் கூறியதாகவும் உரிய பதில் கிடைக்கவிட்டால் தொடர்ந்து திங்கட்கிழமை தாம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளார்கள். (ங-86)



படியேறிய மறியல் போராட்டம்




முல்லைத்தீவு ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலய ஆசிரியை திருமதி அன்னலட்சுமி கதிர்மகன் தரம் 5 மாணவர்களுக்கான மதிப்பளிப்பின்போது கௌரவிக்கப்பட்டார். (எ-410)

# ஆனைவிழுந்தானில் மீளக்குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்

## ஒருநாள் உணவுக்கே கஷ்டப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமக்கான அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள ஆனைவிழுந்தான் கிராமத்தில் 375 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இதில் 91 குடும்பங்கள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாகவும், 30 வரையான குடும்பங்கள் அங்கவீனமுற்ற குடும்பங்களாகவும் காணப்படுகின்றன.

இந்தக் குடும்பங்கள் தங்களுக்கு தொழில் வாய்ப்புக் கள் எவையும் இல்லையென் றும், வாழ்வாதார உதவிகள் சரியாக கிடைக்கவில்லை யென்றும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தப் பகுதியில் உள்ள விதவைக் குடும்பங்கள் தமக்குப் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவாக நூறு அல்லது நூற்றி ஐம்பது ரூபா மட்டுமே கிடைப்பதாகவும் இதைவிட நிவாரண உதவிகள் எவையும் கிடைப்பதில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

தொழில் வாய்ப்புக்கள் இன்மையால் நாளாந்தம் மூன்று நேர உணவையும் உண்ண முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தவிடயத்தில் அக்கறை எடுத்த உதவி செய்யுமாறு அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (எ-6)

# அழிவிலிருந்து மீளாத தகட்டு வைரவர் ஆலயம்

முல்லை மாவட்டத்தில் கற்சிலைமடு என்னும் பழம்பெரும் கிராமம் பண்டாரவன்னியனின் வரலாற்றைப் பறைசாற்றி நிற்கின்ற வரலாற்றுக் கிராமம். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் சிறந்த விவசாயிகள், சிறந்த உழைப்பாளிகள். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்' என்பதற்கிணங்க முழுநேர விவசாயிகளாகச் செயற்பட்டு வந்தனர். அவர்களுக்கு என்னதான் உழைப்பு இருந்தாலும் மழலை மொழிகளைக் கேட்பதற்கு இறைவன் அருள் கொடுக்கவில்லை. பிறக்கும் குழந்தைகள் எல்லாமே இறந்துவிடும். அதுமட்டுமல்ல கால்நடைகள் கூட அழிந்து கொண்டிருந்தன. விவசாயத்தில் கூட நல்ல வருவாயைப் பெற முடியாத நிலை. ஒட்டு மொத்தமாக இந்தக் கிராமம் செழிப்பற்றுச் சோபை இழந்த கிராமமாகக் காட்சியளித்தது. குழந்தை இரவு பிறந்தது என்றால், காலையிலோ அல்லது மாலையிலோ இறந்துவிடும். இதனால் இங்கு வாழ்ந்த மக்களைக் குழந்தைகள் இல்லையே என்ற பெருங் கவலை வதைத்துக் கொண்டிருந்தது.

மருந்துத் தேவைக்குத் தாய்ப்பால் தேவையென்றால் கூட மூன்று அல்லது நான்கு மைல் தொலைவுக்குச் சென்று வர வேண்டும். அதுமட்டுமல்ல யாராவது இறந்தால் அந்த வீட்டில் இரவில் மக்கள் படுத்துறங்க முடியாத நிலை. இதனால் யாரும் இறந்தால் இங்கிருந்து 10 கிலோமீற்றர் தூரம் சென்று அங்குள்ள ஒரு பூசகரிடம் நூல் வேண்டி வந்து வீட்டு வாசலில் காஞ்சூரம் கட்டை இறுக்கி அதில் கொண்டு வந்த நூலைக் கட்ட வேண்டும். அதுவும் நூலைப் பெற்று நேரே வீட்டுக்கு வரவேண்டும். எங்குமே செல்லக்கூடாது அதன்பின்பு வீட்டில் எவ்வித அசம்பாவிதமும் நிகழாது. இப்படியாகப் பல இடர்களை அனுபவித்து வருகின்றபோது இந்தவூர்க் கிராம வாசியான முருகுப்பிள்ளை என்பவர் இவைகளையெல்லாம் பார்க்கச் சகிக்காது. பல இடங்களில் பல பட்டம் பெற்ற குருக்கள்மாரையும் பல அறிவாளிகளையும் மாந்திரீகர்களையும் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றனர். இந்தக் கிராமத்தில் அப்போது போக்குவரத்து வசதிகள் இல்லை. மாட்டுவண்டி தான் அவர்களின் முக்கியமான போக்குவரத்துச் சாதனம். அதனால் இங்கிருந்து திருகோணமலைக்கு கால்நடையாகவே சென்று (இது உண்மையான கதை) அங்கிருந்த அனுபவம் நிறைந்த முதியவரான பல பட்டங்களைப் பெற்ற குருக்கள் ஐயா அவர்களிடம் கிராம நிலையை எடுத்துக்கூறி எம்மவர்க்குச் சந்ததியே இல்லாமல் போகின்றது. இதற்கு ஒரு நல்ல வழியைக் காட்டுங்கள் எனக் கேட்டனர்.

அதற்குக் குருக்கள் ஐயா; நான் தகடு ஒன்றை மந்திரம் ஜெபிக்கப்பட்டுப் பூசையில் வைத்துத் தருகிறேன். அதனைக் கொண்டு சென்று உங்களது கிராம எல்லைகளை (அதாவது நான்கு பக்கமும் அடங்கலாக இந்தவூரை மட்டும்) மேளதாள வாத்தியத்துடன் எடுத்துச் சுற்றிச் சென்று உங்களது கிராமத்து மையக்காணி ஒன்றில் வைத்துப் பூஜிக்க வேண்டும். இதற்குப் பூசை செய்பவர் ஒழுக்க சீலராகவும், மாமிச வகைகள் உண்ணாதவராகவும் இருத்தல் வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் சிறப்பான பூசைகள் நடைபெற வேண்டும். நீங்கள் இவற்றைச் செய்யும் போது நானும் வரவேண்டும். இவற்றுக்கு அதிக செலவு ஏற்படும். அவற்றை நீங்கள் ஈடுசெய்வீர்களா எனக் கேட்டார்.



அங்கு சென்றவர்கள் எவ்வளவு செலவானாலும் நாம் ஈடு செய்வோம் எனக் கூறினர். மேலும் குருக்கள் தாம் வரும் போது காரிலே வருவதாகவும் அதற்குரிய செலவும் தர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மேலும் தகட்டை 21 நாள்கள் பூசையில் வைத்து உச்சாடனம் செய்ய வேண்டும். அதனால் நீ சென்று நான் கூறியபடி நடைபெறுவதற்கான எல்லா ஆயத்தங்களையும் செய்து விட்டு 21 நாள்களுக்குப் பின்பு வெள்ளிக்கிழமைகளில் தகட்டைக் கொண்டு போகக்கூடியதாக வருமாறு மேலும் முருகுப்பிள்ளையிடம் கூறினார். முருகுப்பிள்ளை மீண்டும் கால்நடையாகவே இந்தக் கிராமத்துக்கு வந்து மக்களுக்கு நடந்தவற்றைக் கூறினார். ஊர்காவல் தகட்டினை வைப்பதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலையிலிருந்து குருக்களின் அறிவிப்பு கிடைக்கப்பெற்றதும், முருகுப்பிள்ளை அளவிலா ஆனந்தம் கொண்டார். எமது மக்களுக்கெல்லாம் விடிவு கிடைக்கப்போகிறது எனப் பெருமிதம் கொண்டார். (அமரராகிவிட்டபோதும் இன்று கூட அவரை நினைவு கூர வேண்டும்) அவர் அடுத்த நாளே கால்நடையாகப் புறப்பட்டார். திருகோணமலை சென்றடைந்தார். குருக்கள் வெள்ளிக்கிழமையாக ஒரு நாளைப்பார்த்து தகட்டுடன் அவரையும் கூட்டிக் கொண்டு அவருக்குச் சொந்தமான காரிலே இவ்விடம் வந்து சேர்ந்தார். இதற்குமுன் மக்கள் எல்லோரும் அதற்கான எல்லா ஒழுங்குகளையும் மேற் கொண்டிருந்தனர். குருக்கள் வந்ததும் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மேற்கொண்டு தகடு மேளதாள வாத்தியங்களுடன் ஊரைச் சுற்றி வந்து கிராமத்தின் மத்தியிலே வைக்கப்பட்டது. அதில் பூசைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றிலிருந்து உங்களது கிராமம் சீரும் சிறப்புமாக மிகவும் செழிப்பாக வளர்ந்து வந்தாரை வாழ வைக்கும் வன்னிக் கிராமமாக மிளிரும். இதற்குப் பின்பும் ஏதாவது சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டால் என்னிடம் கூறுங்கள் எனக்கூறியதுடன் மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்து அதுவும் கால்நடையாக எவ்வளவோ துன்பங்களை எதிர்கொண்டு வந்த இந்தக் கிராம வாசியான முருகுப்பிள்ளை என்பவரைப் பூசகராகவும் நியமித்தனர். *(தொடரும்)*

**இராஜ் தனபால்**

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் போது, யாழ். மாவட்டத்தில் சமூகக் குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும், அது தொடர்பில் ஆராய்ந்து தமது கருத்துக்களை முன்வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளில் இந்தக் கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டு விட்டது. இந்த மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன என்று கூறினார்.

கல்விச் சமூகத்தின் சார்பில் கருத்து தெரிவித்த பாடசாலை அதிபர்கள், மாணவர்களின் செயற்பாடுகள் மற்றும் பிழையான நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டனர்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய வடமாகாண கல்வித் திணைக்களத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன், முன்னைய காலங்களில் பாடசாலை அதிபர்களே சகல முடிவுகளையும் எடுக்கும் தன்மை காணப்பட்டது. இப்போது அது மாற்றமடைந்து விட்டது. பாடசாலை அதிபர்கள், கோட்டம், வலயம், மாகாணம் என்று தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதுவும் மாணவர்களின் பிழையான நடத்தைக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்தார்.

கைத்தொழில் மன்றத்தை சேர்ந்த க.பூரணசந்திரன் தெரிவிக்கையில்,

மக்களுக்கும் அரசுக்கும் இடையில் வெளி ஒன்று காணப் படுகின்றது. அது இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்று குறிப் பிட்டார்.

வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் கூறுகையில்,

அரசு அபிவிருத்திகளைச் செய்வதாகக் குறிப்பிடுகின்றது. அபிவிருத்தி வேலைகள் ஓரளவு நடைபெற்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனாலும் இன்றும் மீளக்குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி அல்லல் படுகின்றனர். மக்கள் வெள்ளத்தினால் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்திய வீட்டுத்திட்டம் கிடைக்கும் என்று மக்களுக்குச் சொல்லி ஒரு வருடத்துக்கு மேலாகியும் இதுவரையில் எந்த வீட்டுத்திட்டமும் கிடைக்கவில்லை. மேலும் தமிழ் மக்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் காரணமாக இடம்பெயர்ந்து அல்லல்படுகின்றனர்.

தமிழ் பொலிஸாரின் எண்ணிக்கை தமிழர் பிரதேசங்களில் குறைவாக உள்ளது. இதனால் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மேலும் அரச சேவை நிர்வாகப் பரீட்சையில் கூட இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் எமக்கான அனுமதிகள் கிடைப்பதில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, அரசு 30 வருட வேலையைச் செய்து வருகின்றது. இரண்டரை வருடத்தில் விரைவாக செய்து முடிக்க முடியாது. இருப்பினும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (த -15)

## அதிகாரமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தீர்வை காணமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது எந்தவகையிலும் சாத்தியமில்லை என அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அரசியல் தீர்வுத் விடயத்தில் அரசின் இந்த நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடும் போதே சித்தார்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் உதயனுக்கு மேலும் கூறியவை வருமாறு -

பொலிஸ், காணி அதிகாரங்கள் கட்டாயம் தேவை. ஆனால் அவற்றை வழங்கமாட்டோம் என அரசு கூறுகின்றது. பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளடக்கப்படாத தீர்வுப் பொதியானது இனப்பிரச்சினை விவகாரத்துக்கு முழுமை பெறாது.

அத்துடன், மேற்கூறப்பட்ட அதிகாரங்கள் இன்றி திணிக்கப்படும் தீர்வை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாக இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வை எட்டிமுடியாது. கடந்தகால வரலாறுகள் இதனை எமக்கு நன்கு உணர்த்துகின்றன.

ஜாதிக ஹெல உறுமய போன்ற கடும்போக்குடைய கட்சிகள் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதால் அவை அதிகாரப்பகிர்வுக்கு விருப்பம் தெரிவிக்காது. மாறாக கடும் எதிர்ப்பையே வெளியிடும் - என்றார்.

## அரசு மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிய அரசுகள் உறுதி வழங்கியிருந்தன.

இன்று எல்லோரும் கூட்டுச் சேர்ந்து எம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்ற அதிர்ச்சியுடன் தமிழ் மக்கள் புதிய ஆண்டை எதிர்நோக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இனி நியாயம் வேண்டி சாத்வீக மக்கள் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டியதுதான் புதிய ஆண்டு தமிழர்களுக்கு காட்டும் வழி. - இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

(த-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாடாளுமன்ற நாகரிகம் கட்டிக் காக்கப்படுமா?

எமது நாடாளுமன்ற நிகழ்வுகளை அவதானிக்க வருகை தருவதை வெளிநாடுகளின் தூதுவர்களும் ஏனைய ராஜதந்திரிகளும் தவிர்த்து வருகின்றனர்.

இதனைச் சுட்டிக்காட்டிக் கவலை தெரிவித்திருக்கிறார் மூத்த அமைச்சரும் இடது சாரித் தலைவர்களில் ஒருவருமான டியு குணசேகர.

நாடாளுமன்ற விவாதங்களின் போது ஒரு தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் மீது அநாகரிமான, அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வது முன்னரைவிட அதிகரித்து வருகின்றது. நாடாளுமன்றத்துக்கு உரிய நாகரிக நடைமுறைகள் அருகி வருவதால் நாடாளுமன்ற அமர்வுகளை அவதானிக்க வருவதை குறிப்பிட்ட தரப்பினர் தவிர்த்து வருவதாக அமைச்சர் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தின் மதிப்பையும் மாண்பையும் உடைத்தெறியும் விதத்தில், வாய்த் தர்க்கங்கள் மற்றும் முஷ்டி முறுக்குதல் போன்ற 'சண்டித்தன'ச் சம்பவங்கள் அங்கு அடிக்கடி அரங்கேறுகின்றன.

ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற வகையில் சபையில் உரையாற்றிய வேளை அரச தரப்பினர் எதிர்க்கட்சி வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கித் தண்ணீர்ப் போத்தல்களை எறிந்த சம்பவம், அரச நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடங்காப் பிடாரித் தனத்துக்கு ஓர் உதாரணமாகும். அது குறித்து விசாரணைகள் நடத்துவதற்குச் சபாநாயகர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்பது வேறு.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில், நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களும், ஒழுங்கு முறையை மிஞ்சிய சம்பவங்களும் இப்போதே அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

நாட்டு மக்களின் நலன்களை முன்னிறுத்தி செயற்படும் பொருட்டு, அவர்களின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றுத் தேர்தெடுக்கப்பட்டவர்களே நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களைக் கொண்ட சபை, வேறெந்த வகையான நிறுவனங்களையும் விட உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுவது உலகளாவிய மரபும் வழக்கமும் ஆகும்.

எந்த நிறுவனத்துக்கும் அவற்றில் பணிபுரிபவர்களுக்கெனத் தனித்தனியே ஒழுக்கக் கோவைகள் வகுக்கப்படுவது தவிர்க்க முடியாத வரையறை ஆக்கப்பட்டுள்ளது. அதே போன்று, நாடாளுமன்றச் செயற்பாடுகளின் இயக்கத்துக்கான வரன்முறைகளும், உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவைகளும் ஜனநாயக ஆட்சி நிலவும் எல்லா நாடுகளிலும் உண்டு.

பொதுவான நாடாளுமன்ற ஒழுங்கு விதிகளின் பிரகாரம் , ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு உள்ள சகல உரிமைகள் எதிர்க்கட்சிகளின் அங்கத்தவர்களுக்கும் உண்டு. இரு சாராரினது உரிமைகளிலும் பாகுபாடு காட்டாது சபையை விதிமுறைகளின் பிரகாரம் கட்டிக்காத்து, பாரபட்சமின்றி அதன் செயற்பாடுகளை நிர்வகிப்பவர் சபாநாயகர். அவரின் உத்தரவுகளுக்குப் பணிந்து நடப்பது அங்கத்தவர்களின் தட்டிக்கழிக்க முடியாத கடமையும் ஒரு வகையில் நியதியுமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபாநாயகரின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள். அவரது அனுமதியுடனேயே அங்கத்தவர்கள் தமது நடவடிக்கைகளைச் சபையில் மேற்கொள்ள வேண்டும்; மேற்கொள்ள முடியும்.

இப்போதெல்லாம் சபைக்கும், ஏன் சில சந்தர்ப்பங்களில் சபாநாயகருக்குங்கூட, மதிப்போ, கௌரவமோ அளிக்காமல் உறுப்பினர்கள், பல தடவைகளில் ஆளும்கட்சி உறுப்பினர்களே, செயற்பட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்படும், சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் மக்களுக்குத் தேவையானவை; அவசியமானவையும் கூட. ஆனால் இப்போதெல்லாம் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட விடயத்துக்கு அப்பாற்பட்ட, அல்லது தொடர்பில்லாத விடயங்களை முன்வைத்து அரச தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் வேண்டாத வாதப் பிரதி வாதங்களில் ஈடுபடுவது அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

நாடாளுமன்றில் இடம்பெறும் விவாதங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. எனினும் இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த விவாதங்களின் போது சேறு பூசும் பேச்சுக்களே அதிகரித்திருக்கின்றன. குறித்த விடயங்கள் தொடர்புடைய கருத்துக்களை முன்வைப்பது, கருத்துகளை வெளியிடுவது போன்ற தன்மைகள் இல்லாது போயுள்ள அதேவேளை, சேறு பூசுதல்கள் மாத்திரமே அதிகரித்துள்ளன. இது விடயத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுவதுடன் நான் இணங்குகிறேன் -

இத்தகைய சேறு பூசுதல்கள் மாத்திரமே நாடாளுமன்றில் அதிகரித்துக் காணப்படுவதால், வெளிநாட்டுத் தூதுவர்கள் முக்கிய அமைச்சுகள் மீதான விவாதங்கள் நடைபெறும்போது சபைக்குப் பார்வையாளர்களாக வருவதில்லை. குறிப்பாக வெளிவிவகார அமைச்சு மீதான விவாதங்கள் நடைபெறும் வேளைகளில் வருவதில்லை. இந்த நிலைமையில் மாற்றம் தேவை என்று அமைச்சர் டியு குணசேகரா கருத்து வெளிப்படுத்தி உள்ளமை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையின் மதிப்பையும், தமது கௌரவத்தையும் பேணுவதில் அக்கறை கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாக உள்ளது.

அரசியல் கட்சிகள், அதன் தலைமைத்துவங்கள் தமது, கட்சியின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு செயற்படுவதற்கு மேலதிகமாக, நாடாளுமன்றுக்குரிய பண்புகளைப் பாதுகாப்பதில் தகுதி உள்ளவர்கள் என்பதனை உறுதி செய்து கொண்டே, தனது வேட்பாளர்களை இனங்கண்டு தேர்தலில் நிறுத்த வேண்டும்.

ஒருவரை வேட்பாளராக நியமிக்கும் போது, குறிப்பிட்ட தொகுதியில் அவருக்கு உள்ள மக்கள் ஆதரவு, மற்றும் வகைச் செல்வாக்குகளை மட்டும் அடிப்படைப் பிரமாணங்களாகக் கொள்ளாமல் அவரது தனிப்பட்ட நடத்தைகள் குணாம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தீய வழிகளால் பணம் தேடியவர்கள், சண்டித்தனத்தால் மக்களை -வாக்காளர்களைத் - தமது பக்கத்துக்கு ஈர்த்துக் கொடுக்க வல்லமையுள்ளவர்கள் என்ற தகுதிகளைக் கணக்குப்போட்டு, கட்சிகளின் உயர் பீடங்கள் வேட்பாளர்களைத் தெரிவு செய்வது இப்போதைய அரசியல் நாகரிகமாக மாறி வருகிறது. அதுவே இப்போதைய மேற் கூறப்பட்ட எதிர்மறையான விளைவுகளைத் தருகிறது. அந்த ஒவ்வாத போக்கை அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்கள் ஒதுக்கித் தள்ளாவிடில் -தொடர்ந்தால் -நாடாளுமன்ற நாகரிகம் இந்த நாட்டில் மேன்மேலும் கீழ் நோக்கியே செல்லும்.

# ஹோட்டல்கள், விடுதிகள் முறைப்படி அனுமதி பெறாவிடில் நடவடிக்கை

## நேற்றைய கலந்துரையாடலில் மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் தொழில் முயற்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதால் மனிதாபிமான அடிப்படையில் ஹோட்டல்கள், தங்கு விடுதிகள் குறித்து நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டதில்லை. எதிர்காலத்திலும் இந்த நிலை தொடரும் என்று நினைக்க வேண்டாம்.

ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள் உரிய முறைப்படி அமைக்கப்பட்டு மாநகர சபையின் அனுமதியைப் பெறாதவிடத்து மாநகர சபை உரிய நடவடிக்கையை எடுக்கும் என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

ஹோட்டல்கள் தங்குமிட விடுதிகள் குறித்து நாவலர் கலாசார மண்டபத்தில் உரிமையாளர்கள், முகாமையாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

ஒப்பீட்டளவில் யாழ்ப்பாணம் சீர்குலைந்துள்ள தாகக் காட்டப்படுகின்றது.

நீங்கள் இந்த விடயத்தில் முழுக் கவனம் எடுக்க வேண்டும். எமது சமுதாயம் குறித்த தகவல்கள் சரியாகவோ பிழையாகவோ இருக்கலாம். நீங்கள் இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

கூட்டத்தில் மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன், நகர அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் எஸ்.இராசநாயகம், மாநகர பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ஜீவநாதன், ஹோட்டல்கள், விடுதிகளின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-7)

# கடும் போக்கில் தமிழ்த் தலைமைகள் இனவாதம் பேசுவோரைக் கைது செய்க!

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, டிசெ.23

தமிழ் மக்களின் மனங்களை அரசு கவர்ந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாக கடும் போக்குடைய தமிழ்த் தலைமைகள் இனவாத அரசியல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன. இனவாதம் பேசுபவர்களை அரசு உடன் கைதுசெய்யவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை பொலிஸ் சேவை என்ற ஒன்றே நாட்டில் இருக்கவேண்டும். மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் தேவையில்லை.

வடக்கு, கிழக்கு மண்ணில் தமிழர்கள் நிம்மதியாகவே வாழ்கின்றனர். எனவே, காணி அதிகாரமும் தேவையில்லை என்றும் ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேத்தானந்த தேரர் கூறியவை வருமாறு:-

கொடூர யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்து தமிழ் மக்களுக்கு நாம் சாந்தியையும், சமாதானத்தையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஐக்கியமாக வாழ்வதற்கு அனைவரும் முயல வேண்டும்.

அரசுக்கு எதிராகச் செயற்பட்டால்தான் தங்களது அரசியல் இருப்புகளைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நினைக்கின்றனர்.

அதனால்தான் தமிழர்களைத் தவறான வழியில் அழைத்துச்சென்று மீண்டும் இருண்ட யுகத்துக்குள் தள்ளிவிட முயற்சிக்கின்றனர்.

நாட்டில் இனவாதம் பேசுவதால் பழைய நிலைமை ஏற்படுமே தவிர, புதிய இலக்குகளை அமைத்துக்கொள்ள முடியாது என்பதைப் புரிந்து தமிழ்த் தலைமைகள் செயற்படவேண்டும். இனவாதம் பேசுபவர்களை அரசு உடன் கைதுசெய்யவேண்டும்.

வடக்கு, கிழக்கை எவருக்கும் எழுதி வைக்கவில்லை. எனவே, யார் வேண்டுமானாலும் எங்கும் வாழலாம்.


உடைந்த விகாரைகளையே நாம் புனரமைத்து வருகின்றோம். புதிய விகாரைகளை வடக்கு, கிழக்கில் அமைக்கவில்லை. அவ்வாறு அமைத்தாலும் என்ன தவறு உள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரங்கள் ஆகியவற்றை வழங்கமாட்டோம் என அரசு உறுதியாகக் கூறியுள்ளது. அரசு தனது நிலைப்பாட்டை தளர்த்தினால் அதற்கு எதிராக நாம் செயற்படுவோம் - என்றார்.

(ஒ-சி)

# தியானம்

எல்லோரும் தியானம் செய் என்று சொல்கிறார்களே. தியானம் என்றால் நினைப்பது ஒன்றைத் தொடர்ந்து இடைவிடாது நினைப்பது. நீ எந்த ஒன்றை ஆழமாகச் சிந்தித்தாயோ அதனால் வரும் நன்மை தீமைகளை அடைவாய். நன்மை, தீமை அற்ற ஒன்று தெய்வீகம் - சுகம் துக்கம் அற்றதைத் தியானிக்கும் படி (உறுதியாக நினைக்கும் படி) பெரியோர்கள் சொல்கிறார்கள்.




ஆகையால் ஊனக் கண்ணால் காணாததைப் பற்றிக் காண, அறிய வேண்டுமானால் தியானம் செய். இடைவெளி இல்லாது நினை. அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுக்கும் தியானம் என்பது இதுவே ஆகும்.

*நன்றி : ஞானச்சுடர்*

# நாளை

மார்கழி 08, சனிக்கிழமை 24.12.2011
திதி: அமாவாசை பி.இ. 12.13 வரை
நட்சத்திரம் : கேட்டை மு.ப. 9.41 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம்: 3.26 - 4.56 வரை, ராகு காலம்: 9.26 - 10.56 வரை

# குடாநாட்டில் உள்ள ஹோட்டல்கள், விடுதிகள் மார்ச் மாதத்துக்கு முன் பதியப்படவேண்டும்

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் உள்ள ஹோட்டல்கள் தங்குமிட விடுதிகள் அனைத்தும் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் சகல விடுதிகள், ஹோட்டல்கள் மீது திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என யாழ். பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஹோட்டல்கள், தங்குமிட விடுதிகள் உரிமையாளர்கள், முகாமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜா தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது கணிப்பின் படி இங்கு 89 ஹோட்டல்கள் தங்குமிட விடுதிகள் உள்ளன. இவற்றில் 38 விடுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மக்கள் சமாதானமாகவும் சகோதரத்துவமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகவே நாங்கள் பணியாற்றுகின்றோம். கலாசார சீரழிவுகள் இடம் பெறுவது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.- என்று மேலும் தெரிவித்தார். (ம-7)

## கிளாலி மக்களுக்கு இலவச உலர் உணவு

யாழ்ப்பாணம், டிசெ.23

கிளாலிப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவுப் பொருள்கள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் கிளாலிப் பாடசாலைக்க அருகில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாகப் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு அறிவித்துள்ளார். (ம-207)

## சைக்கிள் திருடன் அகப்பட்டான்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ். நகரில் சைக்கிள் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட திருடன் ஒருவன் வகையாக மாட்டிக் கொண்டான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட திருடன் நகரில் உள்ள வியாபார நிலையத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள் ஒன்றை தந்திரமாக திருடி எடுத்துச் சென்ற சமயம் அதை அவதானித்த மக்கள் ஒருவாறு துரத்தி சைக்கிளுடன் திருடனை பிடித்தனர்.

பின்னர் இந்தத் திருடனை நகரில் உள்ள பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் இந்தத் திருடனை விசாரணைக்காக கூட்டிச் சென்றனர்.

சம்பந்தப்பட்ட திருடன் நுவரெலியாவை சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-26)

## வீதிகளில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் சிரமம்

நவாலி, டிசெ.23

நவாலிப் பகுதியில் சில முக்கிய இடங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படுவதுடன் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

நவாலி சங்கையரின் வீதியில் இக் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அவற்றைக் காகங்கள், நாய்கள் கிளறி வீதிகளில் சிதறி விடுகின்றன.


இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதுடன் அவற்றினிடையே வெள்ளம் நின்று டெங்கு போன்ற கொடிய நோய்கள் பரவுவதற்கும் ஏதுவாகின்றன.

இதேபோன்று நவாலி பிரதான வீதியுடன் இணைந்த சேர்ச் வீதியில் மூடைகளில் கழிவுப் பொருள்களை சிலர் கட்டி வைத்து விட்டுச் செல்கின்றனர். இந்தப் பகுதிகளில் வெறுமனேயும் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படுவதுடன் மழை பெய்தவுடன் வெள்ளம் ஓடுவதற்கு தடையாகவும் உள்ளது.

இவ்வீதி உலக பிரசித்தி பெற்ற சென்.பீற்றஸ் ஆலயத்துக்கு செல்கின்றது. இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கழிவுகளை இந்தப் பகுதிகளில் கொட்டாது வேறு இடங்களில் கொட்டுவதற்கு உரிய அதிகாரிகள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-100)



வடமாகாண கால்நடை சுகாதார திணைக்களத்தால் நவீன வசதிகளுடன் நாற்பது லட்சம் ரூபா செலவில் புதிதாக புனரமைக்கப்பட்டு வரும் கால்நடை வைத்தியசாலை. (130)

## கேரதீவு- சங்குப்பிட்டி பாலத்தை பாதுகாப்பதற்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 23

கேரதீவு, சங்குப்பிட்டி பாலத்தை சீரமைத்துப் பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்கு அதற்குரிய உபகரணங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

வருடா வருடம் இந்தப் பாலத்தை வர்ணம் பூசியும் மற்றும் இதர பணிகளை மேற்கொண்டு பாலத்தை பாதுகாப்பான முறையில் பேணுவதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாலத்தை கழுவுதற்கும் அதில் துருப்பிடிப்புக்கள் எதுவும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பான முறையில் பேணுவதற்குமுரிய உபகரணங்களின் ஒரு தொகுதியே வந்து சேர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)


## கூரை பிரித்து திருட்டு

வடமராட்சி, டிசெ.23

புலோலி தெற்கு முறாவில் பிள்ளையார் கோயில் மடப்பள்ளியின் கூரை பிரிக்கப்பட்டு நீரிறைக்கும் மோட்டார் உட்பட 30 ஆயிரம் ரூபா பொருள்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளை கூரையைப் பிரித்துக் கொண்டு உள் இறங்கிய திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் மோட்டார் இயந்திரம் உள்ளிட்ட மடப்பள்ளிப் பாவனைப் பொருள்களையும் திருடிக் கொண்டு மடப்பள்ளியின் கதவை உள் பக்கமாகத் திறந்து சென்றுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து ஆலய பரிபாலகர்களால் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-236)

## கட்டாக்காலிகளைப் பிடிக்கும் பணி துரிதம்



யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் கட்டாக் காலியாக நடமாடும் கால்நடைகளைப் பிடிக்கும் பணியில் மாநகர சபை துரித நடவடிக்கை மேற்கொண்டது.

முற்றவெளி மற்றும் நகரப் பகுதியில் கட்டாக் காலியாக நடமாடும் கால்நடைகள் பிடிக்கும் பணியில் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

ஒரு சில மாடுகள் தொழிலாளர்களின் பிடியில் இருந்த சாதுரியமாக தப்பிக் கொண்டன. தப்பி ஓடிய மாடுகளைக் கூட தொழிலாளர்கள் துரத்திப் பிடிக்க முற்பட்ட போதும் அவை மிக வேகமாக ஓடித் தப்பி விட்டன. எஞ்சிய சில கால்நடைகள் அவர்களின் பிடியில் சிக்கிக் கொண்டது.

இதேவேளை நகரில் இரவில் கூட இந்த கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

அநேகமான கால்நடைகள், யாழ். பஸ்தரிப்பிடச் சுற்றாடல், மரக்கறிச் சந்தை போன்ற இடங்களில் கூட்டமாகக் காணப்படுகின்றன.

இந்த கால்நடைகளால் போக்குவரத்துக்ச் சிரமம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-26)

## வடிகால் அமைப்பு

தென்மராட்சி, டிசெ.23

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடக்கம் பிரதேச செயலகம் வரையிலான பகுதியில் மழை வெள்ள வடிகால் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் உள்ள வீதி சேதமடைந்திருந்ததால் கடந்த வருடம் அதிகார சபையால் புனரமைக்கப்பட்டது. இதனால் மழை வெள்ளம் வீதிகளில் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனையடுத்து அதிகார சபையினர் வடிகாலை அமைக்கும் பணியை தொடங்கியுள்ளனர்.

பிரதேச செயலகத்திலிருந்து சந்தை வரையுமான பகுதிக்கு சாவகச்சேரி நகர சபையினால் ஏற்கனவே வடிகால் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

## திண்மக் கழிவகற்றல் கருத்தமர்வு



வலி. வடக்கு, வலி தெற்கு உடுவில் பிரதேச சபையால் திண்மக் கழிவுகளை அகற்றுதல் அதனை தரம் பிரித்தல் அதனால் ஏற்படும் நன்மை, தீமைகள் சம்பந்தமான கருத்தரங்கு தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலை மாணவர்களுக்கு சபையின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் சபையின் தலைவர் தி.பிரகாஸ் மற்றும் பெது சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட பலர் கருத்துரைகள் வழங்கினர். அத்துடன் திண்மக் கழிவுகளை தரம் பிரித்தல் சம்பந்தமான செயல் முறையுடன் கூடிய விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜனா வித்தியாலயமும் கலந்துகொண்டன. (ம-86)

# கடலுணவுகள் தாராளமாகக் கிடைத்தும் விலைகளில் சற்றும் சரிவு ஏற்படவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.23

தற்போது பெய்து வரும் மழையை அடுத்து கடலுணவுகள் தாராளமாகக் கிடைத்து வருகின்ற போது அதன் விலைகள் குறையவில்லை என்று நுகர்வோர் தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாள்களாகக் குடாக்கடலில் மீனவர்களால் பிடிக்கப்படும் கடலுணவுகளின் தொகை பெருமளவில் அதிகரித்தே காணப்படுகின்றது.

பாரை, ஒட்டி, ஓரா, விளை மீன் போன்ற கடலுணவுகள் தாராளமாகச் சந்தைக்கு வந்து சேர்கின்றன.

குருநகர், பாஷையூர், கொட்டடி போன்ற மீன்சந்தைகளில் இந்தக் கடலுணவுகள் அதிகளவில் வந்து சேர்ந்தாலும் கூட அவற்றின் விலைகள் அதிகரித்தே காணப்படுகின்றன.

இந்த கடலுணவுகள் கிலோ 300 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் வலையில் 250 கிலோவுக்கு மேற்பட்ட பாரை மீன்கள் சிக்கிக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்கக் கடந்த இரண்டு மூன்று நாள்களாக கடலுணவுகளின் வருகை அதிகரித்தே காணப்படுகின்றது.

தீவுப் பகுதிக் கடலில் பெருமளவான மீன்கள் தினமும் பிடிக்கப்படுவதாக யாழ். கடல் தொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இந்த கடலுணவுகளின் பெரும் பகுதி தென்பகுதிக்கு அனுப்பப்படுகின்றன.

இவ்வாறு வெளியில் செல்வதால் மீனவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று அவர் மேலும்தெரிவித்தார். (ம-26)

# வங்கியில் எடுத்துச் சென்ற பணம் ரூ.1 லட்சம் இடைவழியில் பறிபோனது!

வலி வடக்கு டிசெ 23.

வங்கியில் இருந்து பணம் எடுத்துக் கொண்டு வந்த பெண்ணைத் தொடர்ந்து வந்த இளைஞர் ஒருவர் குறிப்பிட்ட பெண்ணிடம் இருந்த ஒரு லட்சம் ரூபா பணத்தை பறித்துக் கொண்டு சென்ற சம்பவம் நேற்று பிற்பகல் மல்லாகத்தில் இடம் பெற்றது.

மல்லாகம் சந்தியில் உள்ள வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக் கொண்டு சைக்கிளில் வந்த இளம் பெண்ணைத் தொடர்ந்து இளைஞர் ஒருவர் சைக்கிளில் சென்றுள்ளார்.

குறித்த பெண் ஆள்கள் நடமாட்டம் குறைந்த பாதையைக் கடக்க முற்பட்ட நிலையில் இளைஞர் விரைவாக சென்று பெண்ணிடம் இருந்த கைப்பையைப் பறித்துக் கொண்டு சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட பெண் சத்தமிட்ட போதிலும் அப்பகுதியில் ஆள் நடமாட்டம் மிகவும் குறைவடைந்திருந்தமையால் குறித்த நபர் தப்பிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-86)

# இந்திய வீட்டுத் திட்டத்தில் 3 வீடுகள் மட்டுமே நிறைவு

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்திய அரசின் நிதியுதவியில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னோடி வீட்டுத் திட்டத்தில் 3 வீடுகள் மட்டுமே முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 150 முன்னோடி வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

இருப்பினும் வீட்டுத் திட்ட வேலைகள் அதன் பின்பு 6 மாத காலமாக இடம்பெறவில்லை.

தொடர்ந்து வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இதுவரையில் பூர்த்தி செய்யப்படாமல் இழுபறி நிலையிலேயே உள்ளது.

தற்போது 3 வீடுகள் முற்று முழுதாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாக வீட்டுத் திட்டத்தை மேற்கொண்டுவரும் எச்.பி.எல். நிறுவனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

எஞ்சிய வீடுகளையும் கட்டி முடிக்கும் வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் பெரும்பாலும் பெப்ரவரி மாதக் கடைசியில் முழுவதும் அமைத்து முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இந்திய அரசின் நிதியுதவியில் கட்டப்பட்ட ஒரு தொகுதி வீடுகளை மக்களிடம் கையளிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-15)



யாழ்.முற்றவெளியில் தேங்கிக் காணப்படும் வெள்ளத்தை அகற்றும் முகமாக கிறவல் மண் கொட்டப்பட்டு கனரக வாகனம் மூலம் சீர் செய்யப்படுகிறது. (ம-26)

# கதவுகளைத் திருடியவர்கள் சிக்கிக் கொண்டனர்

வலி. வடக்கு டிசெ 23.

இரவு வேளை வீட்டின் கதவைத் திருடிக் கொண்டு வந்தவர்கள் உடுவில் பிரதேச சபைத் தலைவர் மற்றும் ஊழியர்களிடம் வகையாக மாட்டிக் கொண்ட சம்பவம் புதன் கிழமை இரவு உடுவில் பகுதியில் இடம் பெற்றது.

உடுவில் பிரதேசத்தில் திண்மக்கழிவுகள் அகற்றுவது சம்பந்தமாக இரவு வேளையில் பிரதேச சபைத் தலைவரும் ஊழியர்களும் ஒலி பெருக்கி மூலம் பிரசாரம் செய்வதில் ஈடுபட்டு இருந்தனர்.

இந்த நேரத்தில் லாண்ட் மாஸ்ரரில் கதவுகளை ஏற்றிக் கொண்டு சிலர் வந்துள்ளனர்.

இந்த லாண்ட்மாஸ்ரருடன் சைக்கிளில் வந்த சிறுவன் ஒருவன் மோதுப்பட்டு வீதியில் வீழ்ந்த போதிலும் அதனையும் கருத்தில் கொள்ளாது லாண்ட் மாஸ்டர் அந்த இடத்தில் இருந்து தப்பிச்செல்வதை அவதானித்த குறிப்பிட்ட ஊழியர்கள் அவர்களை மறித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களில் மூவர் தப்பி ஓட வாகனச் சாரதி வகையாக மாட்டிக் கொண்டார். (ம-86)

# மின் கட்டணம் செலுத்துவதற்கு வரிசையில் காத்திருந்த மக்கள்

மின்சாரம் துண்டிக்கப்படும் என அஞ்சி நிலுவையில் இருந்த மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நேற்றைய தினம் பெருந்திரளான மக்கள் வங்கிகளில் வரிசையில் காத்திருந்து கட்டணங்களைச் செலுத்துவதைக் காணக் கூடியதாக இருந்தது.

யாழ்.குடாநாடு முழுவதுமான மின்பாவனையாளர்களுக்கு இலங்கை மின்சார சபை நிலுவையில் உள்ள மின் கட்டணங்களை நேற்றைய தினத்துக்கு இடையில் செலுத்துமாறு காலக்கெடு விதித்திருந்தது.

இதற்கமைய மின் பாவனையாளர்கள் மின்சாரம் துண்டிக்கப்படும் என அஞ்சிய நிலையில் நேற்றைய தினம் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு முண்டியடித்துக் கொண்டு வங்கிகளில் பற்றுச்சீட்டுக்களுடன் காத்திருந்தனர்.

மின்சாரசபையினரின் இந்தத் திடீர் அறிவித்தலால் அதிர்ச்சியடைந்த மக்கள் கட்டணங்களை உடனடியாகச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் பாதிப்படைந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த தினத்தில் மின்கட்டணம் செலுத்தத் தவறின் உடனடியாக மின்சாரம் இடை நிறுத்தப்படும் எனவும் மீள இணைப்புப் பெறும் போது 800 ரூபா செலுத்த வேண்டும் எனவும் மின்சார சபை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் மின்பாவனையாளர் அதிகளவானோர் நிலுவைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டி இருப்பதால் குறிப்பிட்ட காலத்தைப் பிற்போடுவது சிறந்தது எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

## யாழ். அரச அதிபர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்.மாவட்டத்தில் தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒரு வருட காலத்துக்குள் 600 பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதுடன் இவற்றில் 253 பெண்கள் இளவயதில் கர்ப்பம் தரிக்கும் சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

பெண்கள் வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகமும் பால்நிலை வன்முறைக்கெதிரான செயற்பாட்டுக் குழுவும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு நாவலர் வீதி தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து உரை நிகழ்த்தும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இந்த வன்முறைச் சம்பவங்களில் 50 வீதமானவை குடும்பவன்முறைகளாகவே உள்ளன.

எனவே பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் தொடர்பாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் வெகுவிரைவில் அதற்கான இடத்தை அமைக்க வேண்டிய தேவையுள்ளது.

பெற்றோர்கள், பிள்ளைகளை அவதானிப்புடன் வளர்க்க வேண்டும். வன்முறைக்கு உட்படுத்தப்படுபவர்கள் பரிதாபத் துக்குரியவர்கள். இவற்றில் குடும்பவன்முறையே உச்சக் கட்டமாக உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது இன்னொரு பிரச்சினை உருவாகியுள்ளது. வன்னியில் யுத்தக் கொடுமையை அனுபவித்த குடும்பங்கள் மீள வேறு பிரதேசங்களில் குடியமர வரும்போது போராளிக் குடும்பங்கள் என கிராம சேவகர்களால் அவர்களுக்கான அடிப்படை உதவிகள் வழங்குவதற்கு மறுக்கப்படுகின்றன.

எனவே கலாசாரம் சீரழிகின்றது என பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. வன்னி யுத்தத்தால் 29 ஆயிரம் விதவைகள் தமது அன்றாட குடும்பச் செலவை நிறைவேற்றத் துன்பப்படுகின்றார்கள்.

எனவே சமுதாயத்தை சீர்படுத்த வேண்டும். நாம் என்ன செயற்பாட்டைச் செய்யப் போகின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் உள மருத்துவ நிபுணர் சா.சிவயோகன் யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரானவன்முறைகளும் அதனால் ஏற்படும் உள சமூகப் பிரச்சினைகளும் எனும் தலைப்பிலும் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் செல்வி கோசலை மனோகரன் ''பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஊடகத்துறைகளின் வெளிப்படுத்தலில் சட்ட ரீதியாக கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள்'' எனும் தலைப்பிலும் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் ''பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பதில் ஊடகத்துறையினரது பங்களிப்பு'' எனும் தலைப்பிலும் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ம-313)

## மரண அறிவித்தல்

**கைலைமணி திருமதி அருள் சுவாமிநாதன்**

(அருளம்மா-இடைக்காடு)



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், ஒட்டுசுட்டானை வளர்ப்பிடமாகவும் மற்றும் கொழும்பு, இடைக்காடு ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கைலைமணி திருமதி அருளம்மா சுவாமிநாதன் 22.12.2011 வியாழக்கிழமை நள்ளிரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் இடைக்காட்டைச் சேர்ந்த கைலைமணி வேல் சுவாமிநாதனின் (இளைப்பாறிய மின் அத்தியட்சகர்) ஆருயிர் மனைவியும், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், இடைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, இலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை) மற்றும் பேரம்பலம் (இளைப்பாறிய கிராமசேவகர், ஒட்டுசுட்டான்) ஆகியோரின் சகோதரியும், சுவேந்திரா (பொறியியலாளர் -ஆஸ்திரேலியா), அருளீஸ்வர் (அமெரிக்கா), அருள்வாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், இலியாஸ் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), பகீரதி (அமெரிக்கா), கீதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், அமீரா (ஆஸ்திரேலியா), அரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அம்மம்மாவும், அமர்நாத் (அமெரிக்கா), கேதாரநாத் (அமெரிக்கா), கோபிநாத் (அமெரிக்கா) சுபானா (சுவிஸ்), அனயாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் காலிவீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.12.2011) சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி பி.ப.2 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கொழும்பு. (C/7032)(6-7-8) வே. சுவாமிநாதன்.

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிய எக்ஸ்றே இயந்திரம்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு 'எக்ஸ்றே' இயந்திரம் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளது.

இந்தப் புதிய 'எக்ஸ்றே' இயந்திரத்தை வைத்தியசாலை 'எக்ஸ்றே' பிரிவில் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

ஏற்கனவே பழுதடைந்திருந்த 'எக்ஸ்றே' இயந்திரமும் திருத்தப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

திருத்தியமைக்கப்பட்ட 'எக்ஸ்றே' இயந்திரத்துடன் தற்போது இரு 'எக்ஸ்றே' இயந்திரங்கள் மூலம் படப்பிடிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

போதனா வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களாக நோயாளர்களுக்கான 'எக்ஸ்றே' படப்பிடிப்பில் இருந்து வந்த நெருக்கடி இதன் மூலம் ஓரளவு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வந்துள்ள புதிய 'எக்ஸ்றே' இயந்திரம் பொருத்தப்பட்டதும் 3 'எக்ஸ்றே' இயந்திரங்கள் மூலம் நோயாளர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்க முடியும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவின் சிகிச்சை நிலையங்களுக்கு வரும் நோயாளர்களுக்கான 'எக்ஸ்றே' படப்பிடிப்புகளும் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-26)

மிகபிரபலமான பத்திரிகை நிறுவனமொன்றிற்கு கணக்காய்வு உதவியாளர்கள் (Audit Assistants ) தேவைப்படுகிறார்கள்.

தகைமைகள்

கல்வித்தகைமை: A\L (வர்த்தகத்துறை)
HNDA சித்தி
கணக்காய்வுத்துறையில் முன் அனுபவம்
கணினி அறிவு
ஆங்கில/சிங்கள தேர்ச்சி மேலதிக தகைமையாக கருதப்படும்.
வயது : 25-35
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
சான்றிதழ்களுடன் உடன் வரவு.

தொ.பேசி: 0215677602.

முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கனரக இயந்திர இயக்குநர் - பயிலுநர் பதவி
(Heavy Machinery Operator - Traince)

மேற்படி பதவிக்குக் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை :- 18 - 45 வருடங்கள்
கல்வித் தகைமை :- கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது 02 பாடங்களில் சித்தி.
ஏனைய தகைமைகள் :- 'A' தர மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம்

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை 05.01.2012 இற்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்திற்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பசுபதி சீவரத்தினம், தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
(சி/7134) (2-6-7) கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

கைகயிருப்பு முடியும் வரை அதி விசேட விலைக் கழிவு






Caterpillar
டோசர்
எக்ஸ்கவேடர்
பெகோலோடர்

- அதிசிறந்த நிலையிலுள்ள சில மணித்தியாலங்கள் மட்டுமே பாவிக்கப்பட்ட இயந்திரங்கள்
- கட்டர்பில்லர் அங்கீகாரம்-பெற்ற முகவர்களினால் முழுமையாகப் பராமரிக்கப்பட்டுள்ளது
- தேவையான அளவு உதிரிப் பாகங்கள் மற்றும் இலகு சேவைகள்
- இலங்கையில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் ருவுநு இடமிருந்து மட்டுமே

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டர்பில்லர் D4G LX டோசர் வருடம் 2003 மணித்தியாலம் 2407 | கட்டர்பில்லர் D4G LX (AC) டோசர் வருடம் 2006 மணித்தியாலம் 3715 | கட்டர்பில்லர் 428E பெகோலோடர் வருடம் 2007 மணித்தியாலம் 3320 | கட்டர்பில்லர் 312B எக்ஸ்கவேடர் வருடம் 2000 மணித்தியாலம் 8604 | கடபிலர் 312B எக்ஸ்கவேடர் வருடம் 1997 மணித்தியாலம் 2700 |

UTE CAT
CAT USED

யுனைட்டட் ட்ரெக்டர் எண்ட் இக்விப்மண்ட் தனியார் நிறுவனம்.
இல. 683, நீர்கொழும்பு வீதி, மாபோலை, வத்தளை.
துரித அழைப்பு : 077-2-753-146 (துஷ்யந்தன்)

## விபத்தில் இளைஞர் காயம்

தென்மராட்சி, டிசெ.23

யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்று மின்கம்பத்தோடு உராய்ந்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

மீசாலை, ஐயா கடைக்கும் மடத்தடிக்கும் இடையே நேற்றிரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த ப.பகீரதன் (வயது -24) என்பவரே காயமடைந்தவராவார்.

குறித்த இளைஞர் யாழ் நகரில் இருந்து மீசாலை வருவதற்காக இந்த பஸ்ஸில் ஏறியுள்ளார். அவர் இறங்குவதற்காக பஸ் கதவோரம் நின்றிருந்தபோது, எதிர்பாராத விதமாக குறித்த பஸ் வீதியோரமாகச் சாய்ந்து மின்கம்பத்தோடு உரசியது. இதனால் இளைஞரின் முழங்கையிலும், பாதத்திலும் காயமேற்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உடனேயே அவர் வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ங-207-420)

கற்பகச் சோலை உருவாக்க வாரீர்!

பாலைவனமாக மாறக்கூடிய நிலையில் உள்ள பனைவளமுள்ள பிரதேசங்களை கற்பகச் சோலை ஆக்குவதற்கு வாரீர்!

பனை அபிவிருத்திச் சபையானது இயந்திரம் (EXCAVATOR) மூலமாக பனம் கன்றுகளை அகழ்ந்து புதிய இடங்களில் நடுகை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

எனவே பனங்காணி உரிமையாள்கள் தங்களிடம் உள்ள பனம் கன்றுகளை (வடலிகளை) அழிக்காது எம்முடன் தொடர்பு கொண்டு பொருத்தமான இடங்களில் வடலிகளை நடுகை செய்வதற்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் ,
பனை அபிவிருத்திச் சபை,
தேசியவீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (C/7123)

## மரண அறிவித்தல்

**பொன்னம்பலம் பழனிநாதன்**



விழிசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வாணி பேக்கரிலேன், வடலியடைப்பு, பண்டத்தரிப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பழனிநாதன் 20.12.2011 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அற்புதத்தின் அன்புக் கணவரும், பஞ்சவர் னேஸ்வரன் (கனடா), சர்வேஸ்வரன் (முகாமைத்துவ உதவியாளர், மல்லாகம் பிரதேச சபை), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதா, பத்மா, நிஷாந்தினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற நாகபூசணி மற்றும் சிவகுருநாதன், நீலாம்பிகை, இளையபிள்ளை ஆகியோரின் சகோதரனும், தருமராசா, சரஸ்வதி, அரியபுத்திரன் ஆகியோரின் மைத்துனரும், சனோசன், சஜீபன், சுபாங்கி, புருசோத்மன், அபிராம், டனேசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமைஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாணி பேக்கரிலேன்,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
ப. சர்வேஸ்வரன் (மகன்)

(1878)(6-9-8)

## வியளம் கேட்டீர்களா?

### மத்தளத்துக்கு 2 பக்க இடி; எங்களுக்கு ..........இடி!


ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் எண்ட நிலையிலை மெல்லவும் முடியாத,விழுங்கவும் முடியாத அரசியலை நடத்திறதெண்டது பெரிய கரைச்சல். அந்த நிலைதான் இண்டைக்குக் கூட்டமைப்புக்கு இருக்குது. அரசாங்கத்தோடை பேசு எண்டுது உலக நாடுகள். பேசாதை எண்டினை இஞ்சை இருக்கிற தமிழ் அரசியல்வாதிகள் ஒரு சிலர் பேசியும் பேசாமல் இருக்கிறது எப்பிடி எண்டு ஒரு தந்திரோபாயத்தையல்லோ கூட்டமைப்புக் காண வேண்டிக் கிடக்குது.

இப்ப பல சுற்றுப் பேச்சுக்கள் நடந்திட்டுது. ஒண்டும் நடக்கேல்லைத்தான். இவை சனத்தின்ரை பிரச்சினையளை முன்வைச்சுத் தீர்வு கேட்க, சம்மந்த சம்மந்தமில்லாமல் இவை நிபந்தனையளை விதிக்கினையெண்டு எங்கடை அரசுத் தலைவர் கொதிச்சு எழுந்திருக்கிறார்.

எனக்கு ஒண்டுமாய்ப் புரியேல்லைப் பாருங்கோ. கூட்டமைப்பு 76 இலை கேட்டதை - அதுதான் தமிழீழத்தை கேக்கேல்லை. இந்தியாவின் உதவியோடை இணைச்ச வடக்கு, கிழக்கைப் பிரிச்ச பிறகு உப்புச்சப் பில்லாமல் இருக்கிற மாகாணங்களுக்குக் கொஞ்சம் அதிகாரங்களைத் தாங்கோ எண்டு தானே கேட்டவை. அப்பிடியும் கேக்காட்டில் தங்களைப் பாளிமென்டுக்கு அனுப்பி வைச்ச சனத்துக்கு மறுமொழி சொல்லேலுமே?

இப்பிடிச் சின்ன விசயம் கேட்டதுக்கே பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு எண்டு அரசுத் தலைவர் சீறுகிறார் எண்டால், பாருங்கோவன். வாங்கோ, வந்து இருங்கோ, தேத்தண்ணி குடியுங்கோ, பம்பலாய்க் கதையுங்கோ, எழும்பிப் போங்கோ எண்டு சொல்லுற மாதிரியல்லே கிடக்குது. இவை அப்பிடிப் பேசிறதெண்டால் சனம் சும்மா இருக்குமே? நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விசயங்களைப் பேச்சுமேசைக்குக் கொண்டு வந்து, நிபந்தனையளை விதிச்சுப் புலியளைப் போலை நடக்கினை எண்டும் ஒரு குற்றச்சாட்டு. நடைமுறைக்குச் சாத்தியப்படுமோ, இல்லையோ எண்டது மனத்தைப் பொறுத்தது.

ரண்டு பேர் ஒரு பஸ்ஸிலை போகினை. ஒரு பிச்சைக்காரன் கையேந்துறான்.ரண்டு பேரிட்டையும் காசிருக்குது. ஒருத்தர் சில்லறையைப் போடுறார். மற்றவர் போடேல்லை. மற்றவற்றை நிலைப்பாட்டிலை கண்ட கண்டவனுக்கெல்லாம் காசைக் குடுக்க மன



மில்லை.என்ன செய்யிறது? இலங்கையின்ரை அரசுத் தலைவர் உலகத்திலையே சர்வவல்லமை படைச்சவர். ஜனநாயகம் எண்டது பெரும்பான்மையோரின் சர்வாதிகாரம் எண்டு சும்மாவே சொல்லிச்சினை. இப்ப நாடாளுமன்றத்திலையும் பெரும்பான்மை பலமிருக்குது. இவர் நினைச்சால் இந்தச் சின்ன விசயங்களுக்கெல்லாம் ஈசியாய்த் தீர்வு தரலாம். மூக்குச் சளியாய் இழுபடும் இனப்பிரச்சினையையும் சுலபமாய் அணுகலாம். தீர்வு தந்தால் தானே! இதை விட கிணறு வெட்டப் பூதம் கிளம்பின மாதிரி கூட்டமைப்பை அடிச்சுடைச்சு முடக்கப் போறம் எண்டு ஒரு தரப்பு கச்சையைக் கட்டிக்கொண்டு வெளிக்கிட்டுது.நோர்வேக்காரனை, பிரிட்டனை எல்லாம் அடிச்சு முடிஞ்சுது. இப்ப கூட்டமைப்புக்கு எதிராகச் சிங்கள மக்களைத் தெருவுக்குக் கொண்டு வந்து கூட்டமைப்பின்ரை முதுகெலும்பை உடைக்கப் போகினையாம் தேரோக் கட்சிக்காரர். புத்தர் இதுகளைப் பாத்தாரெண்டால் என்ன செய்திருப்பாரோ!

போற போக்கைப் பாத்தால் 1983 இனக் கலவரம் போலை ஏதேனும் நடக்குமோ எண்டு அஞ்ச வேண்டிக் கிடக்குது. பட்ட காலிலையேபடும்; கெட்ட குடியே கெடும் எண்ட நிலை இன்னும் எங்களுக்கு மாறேல்லைப் போலை கிடக்குது. மத்தளத்துக்கு ரண்டு பக்கந்தான் இடி. எங்களுக்கு எல்லாப் பக்கத்தாலையும் இடியோ? இப்பதான் எல்லாச் சுனாமியும் அடிச்சு ஒய்ஞ்சு கொஞ்சம் தலையை நிமித்தி உலகத்தைப் பாக்கிறம். அதுக்குள்ளை திரும்பவும் அடிச்சு வளத்திறம் எண்டு நிண்டால் நாங்கள் என்ன செய்யிறது?

கூட்டமைப்பு எண்டிறது தனிய ஒரு கட்சியில்லை. அது தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களின்ரை குரல். அது மக்களின்ரை அபிலாசையளைப் பிரதிபலிக்கிறது ஞாயந்தானே! அதைத்தானே சனங்களும் எதிர்பாக்கினை. அந்த எதிர்பார்ப்பை இவை எப்பிடி விட்டுக் குடுக்கிறது பாருங்கோ!

விழிச்சான் குஞ்சு.

# ஆணைக்குழு அறிக்கையை விவாதிக்க எதிர்க்கட்சிகள் கோரினால் பரிசீலிப்போம்

### அமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.23

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் நாடாளுமன்றில் விவாதமொன்றை நடத்த வேண்டுமா என்பது தொடர்பில் எதிர்க்கட்சிகள் விவாதமொன்றைக் கோரினால் அது குறித்து பரிசீலிக்கத் தயார் என அரசு நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

தமிழ்ப் பத்திரிகை ஊடகவியாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோது அரசின் இந்த நிலைப்பாட்டை பொருளாதார அபிவிருத்தி



அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சபையில் விவாதிப்பதா என்பது குறித்து எதிர்கட்சிகள் இதுவரை கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை. அப்படி கோரிக்கை விடுத்தால் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அதுபற்றி தீர்மானிக்க முடியும்.

ஆணைக்குழு அறிக்கையை சபையில் விவாதித்து பின்னர் எப்படி அதன் பரிந்துரைகளை முன்னெடுப்பது என்பது பற்றிப் பேசலாம்.

'ஆனால் விவாதிப்பதற்கான கோரிக்கை எதுவும் இதுவரை விடுக்கப்படவிலை - என்றார்.(ச)

## ஹேமா பிரேமதாஸவிடம் பொலிஸ் விசாரணை

கொழும்பு,டிசெ.23

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸவின் தாயார் ஹேமா பிரேமதாஸ பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா மீது கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று அங்கு கூடியிருந்த ஐ. தே.க ஆதரவாளர்களுக்கு ஹேமா பிரேமதாஸவும் அவரது மகளான துலாஞ்சலி ஜயகொடியும் உணவுப் பார்சல்கள் மற்றும் குடிதண்ணீர் போத்தல்களை வழங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இந்தியப் பிரஜைகள் விமான நிலையத்தில் கைது

கொழும்பு,டிசெ.23

சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்படவிருந்த ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்களுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இரு இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை இந்த இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் இலங்கையிருந்து சென்னை நோக்கிச் செல்லவிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து 20 லட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## இந்த ஆண்டு டெங்கு நோய் தாக்கம் 24 சதவீதத்தால் குறைவடைந்தது

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,டிசெ.23

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோய் தாக்கம் 24 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தை விட ஏனைய மாவட்டங்களில் டெங்கு நோய் தாக்கம் மிகவும் குறைவாக பதிவாகியுள்ளது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடம் நாட்டில் 33,871 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாகவும் இந்த ஆண்டு இதுவரை 25,647 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கடந்த வருடம் 5,867 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதோடு இவ்வருடம் அத்தொகை 9,358 ஆக அதிகரித்துள்ளது என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## புதிய காணி உத்தரவுப் பத்திரம்

அரசின் புதிய காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்வத்தைக் கிராமத்தைச் சேர்ந்த 123 குடும்பங்களுக்கு புதிய காணி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ச)

## ஊழியர் சேமலாப நிதியத் தொகையை திருட்டுத்தனமாக கையாட அரசு முயற்சி

### ஐ.தே.க.குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.23

எழுபது லட்சம் ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியை அரசு திருட்டுத்தனமாகக் கையாட முயற்சிக்கின்றது.

ஊழியர் சேமலாபநிதியம் இன்று மத்திய வங்கி ஆளுநரின் தனிப்பட்ட நிதியமாக மாறியுள்ளது. இதனால்தான் அரசு, அமைச்சரவையினதோ அல்லது நாடாளுமன்றத்தினதோ அனுமதியின்றி 7,400 கோடி ரூபா நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் பங்குகளைப் பெற்றுள்ளது என்று ஐ.தே.க. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிதி திட்டமிடல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாறான ஊழல் மோசடிகளை எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டினால் அதனைத் தேசத்துரோகம் என்று கூறுகின்றனர்.

இன்று வாழ்க்கைச்செலவு மூன்று சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வாழ்க்கைச் செலவைக் குறைக்க இந்த அரசிடம் எந்த விதமான திட்டங்களும் இல்லை.

இந்த நாட்டை ஐக்கிய தேசியக் கட்சி 32 வருடங்களும், ஆளும் கூட்டணி 32 வருடங்களும் ஆட்சி செய்துள்ளன.

அன்று எங்கள் கட்சி ஆட்சியில் இருந்த பொருளாதார சுதந்திரம் இன்று இல்லை. எல்லாம் தனி ஒரு மனிதரிடம் குவிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் 35 நாள்கள் மட்டுமே இயங்கியதாக அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார்.தரமற்ற இயந்திரங்களை சீனாவில் இருந்து கொண்டுவந்து பொருத்தியுள்ளனர் என்பது உறுதியாகின்றது. இதற்கென செலவிட்ட பல ஆயிரம் கோடி ரூபாவுக்குப் பொறுப்புக்கூறுவது யார்? இதனை அமைச்சர்கள் கூடத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் இருக்கின்றனர்.

கப்பல்கள் இல்லாத துறைமுகங்களில் பல்லாயிரம் கோடி ரூபாவைக் கொட்டும் அரசு, மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை- என்றார்.(ச-சி)

# ஈராக் துணை அதிபருக்கு பிரதமர் கடும் எச்சரிக்கை

பக்தாத்,டிசெ.23


தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஈராக் நாட்டுத் துணை அதிபர் , குர் தீஷ் பகுதியில் பதுங்கியுள்ளார். அவர் தானாக சரணடைய வேண்டும், அல்லது குர்தீஷ் இனத்தவர்கள் அவரை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என அந்நாட்டுப் பிரதமர் நௌரி அல்-மாலிக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் முற்றிலும் வாபஸ் பெறப்பட்டு வருகின்ற நிலையில் ஈராக் துணை அதிபர் தாரிக் அல்- ஹஸ்மி தீவிரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், ஈராக்கில் பல்வேறு அரசு அலுவலகங்களில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு துணை அதிபருக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பிருப்பதும் தெரிய வந்துள்ளதனால். கடந்த வாரம் , 5 நீதிபதிகளைக் கொண்ட நீதித் துறைக் குழு கைது பிடியாணை பிறப்பித்தது. இதனையடுத்து ஹஸ்மி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் பிரதமர் நௌரி அல்-மாலிக் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது;

துணை அதிபர் தாரிக்- அல்- ஹஸ்மிக்கு குர்தீஷ் இனத்தவர்கள் வாழும் பகுதியில் தான் பதுங்கியுள்ளார். அவர் தானாகச்சரணடைய வேண்டும். முன்பு சதாம் ஹூசேன் பிடிபட்ட போது விசாரணை நியாயமாக நடந்தது. அதேபோன்று தான் ஹஸ்மி மீதான விசாரணையும் நியாயமாக நடக்கும். ஈராக் அரசு எப்போதும் நீதித்துறையில் தலையிட்டதில்லை. எனவே குர்தீஷ் இனத்தவர்கள் அவரை சரணடையச் சொல்ல வேண்டும்- என்றார்.

இதற்கிடையே தன்மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ள துணைஅதிபர் தாரிக் அல்- ஹஸ்மி தற்போது உள்ள ஷியா பிரிவு



அமைச்சரவையையும், நாடாளுமன்றத்தையும் புறக்கணிப்புச் செய்து போராட்டம் நடத்துவதே எனது நோக்கம். இது தவிர தீவிரவாத அமைப்புடன் தொடர்பில்லை என்று தெரிவித்துள்ளார்.

## வடகொரிய அதிபரின் இறுதிச் சடங்கு 28 ஆம் திகதி

பியோங்யாங், டிசெ.23

உயிரிழந்த வட கொரிய அதிபர் கிம் ஜோங்கின் இறுதிச் சடங்கு இந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் என வடகொரிய அரசு அறிவித்துள்ளது.

69 வயதான இரண்டாம் கிம்-ஜோங், கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

வட கொரியா உருவாகக் காரணமாயிருந்த கிம் ஜோங்கின் தந்தை கிம் சுங்கின் உருவப் படத்துக்குக் கீழே கிம் ஜோங்கின் உடல் பிரேதப் பெட்டியில் கிடத்தப்பட்டு, பொது மக்கள் அஞ்சலிக்காக் வைக்கப்பட்டுள்ளது. கும்சுசான் நினைவு அரண்மனையில் வைக்கப்பட்டுள்ள கிம் ஜோங்கின் உடலுக்கு ஏராளமான பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதேவேளை 11 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளதுடன் தேசிய கொடியும் அரைக்கம் புத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

அடுத்த அதிபராக அறிவிக்கப்பட்டுள்ள கிம் ஜோங்கின் மூன்றாவது மகன் கிம் ஜோங் உன், ராணுவத் தளபதிகளுடன் வந்து அஞ்சலி செலுத்தினார்.

இதனிடையே வடகொரியாவில் அமைதிதிரும்பத் தேவையான உதவிகளை புதிய அதிபருக்கு செய்ய அமெரிக்கா காத்திருப்பதாக வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்

## புகுஷிமா அணு உலையை மூட 40 ஆண்டுகள் தேவை!

### என்கிறார் அமைச்சர் கோஷி ஹோசனோ

டோக்கியோ, டிசெ.23

ஜப்பானின் புகுஷிமா நகரில், ஆழிப் பேரலையால் சீரழிக்கப்பட்ட அணு மின் நிலையத்தின், உலையில் சிக்கியுள்ள எரிபொருளை வெளியே பக்குவமாக எடுக்க 40 ஆண்டுகளும் சுமார் ரூ.78,400 கோடியும் தேவைப்படும் என்று நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தகவல்களை இந்த அணு உலைக்காகவே ஜப்பானிய அரசு நியமித்துள்ள அமைச்சர் கோஷி ஹோசனோ, தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெளியே எடுக்க உள்ள கதிரியக்கக் குணம் கொண்ட எரிபொருளைச் சுற்றுப்புறத்துக்கு அபாயம் இல்லாமல் எப்படி அப்புறப்படுத்துவது? என்பதற்கான வழிகளை இனிமேல் தான் கண்டுபிடிக்க வேண்டும் என்பது அடுத்த பிரச்சினை. உலையிலிருந்து, எரிகலத்தின் அடிப்புறத்துக்குச் சென்றுவிட்ட எரிபொருளை வெளியே கொண்டு வருவதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்யவே 10 ஆண்டுகள் முடியும்.

அதைச் செய்வதற்கும் ரோபோக்கள் எனப்படும் இயந்திர மனிதர்களை இனி மேல் தான் தயாரிக்க வேண்டும் என்றார்.

அணு மின்சாரம் தயாரிப்பது மிகவும் மலிவானது, அணு உலைக்கு எந்தவித ஆபத்தும் நேராது, அப்படியே கதிரியக்கம் ஏற்பட்டாலும் சிகிச்சை செய்துவிடலாம், தடுத்து விடலாம் என்று கூறப்படும் வேளையில் புகுஷிமா அணு உலை தொடர்பாக வெளிவரும் இந்தத் தகவல்கள் அச்சம் தருபவையாக இருக்கின்றன.



மியன்மார் நாட்டின் ஜனநாயகத் தலைவி ஆங் சான் சூகி (வலது), தாய்லாந்துப் பிரதமர் இங்லக் சின்வத்ராவைச் சந்தித்தார்.

## அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் வடகொரியாவை மீட்க வேண்டும்

### கனடாப் பிரதமர் ஹார்ப்பர் தெரிவிப்பு

வட கொரியத் தலைவரான கிம் ஜோங்கின் மரணத்தை அடுத்து, அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கும் அந்த நாட்டை நவீன உலகத்துக்கு மீட்டுக் கொண்டுவர வேண்டும் என்று கனடாப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஹார்ப்பர் மேலும் தெரிவித்ததாவது;

மறைந்த கிம் ஜோங் வட கொரியாவின் முடிசூடா மன்னனாக 17 ஆண்டுகள் ஆட்சி செய்தார். வடகொரியாவின் படை பலத்தைக் குறிப்பாக அணு ஆயுதப் பலத்தைப் அதிகப்படுத்தினார்.

இவருடைய திடீர் மரணம் இந்நாட்டின் வரலாற்றில் அவலம் நிறைந்த அத்தியாயம் ஆகும். புதிய வாய்ப்புகளுக்கு ஏற்றதொரு காலம் தற்போது அமைந்துள்ளது. இதனைத் தவறவிட்டால்



மக்களின் வாழ்க்கை இன்னும் மோசமாகி விடும். இனிவரும் புதிய தலைமை, உலக மக்களுடன் வட கொரியாவை நட்பு கொள்ள வழிவகுக்க வேண்டும் என்றார்.

இதுவரை தெற்கே உள்ள தன் சகோதர நாட்டிடம் மட்டுமே பகைமை பாராட்டிய வட கொரியா, உலக நாடுகளிடம் இருந்து தன்னை அந்நியப் படுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானின் உறவு அமெரிக்காவுக்கு அவசியமானது

### பென்டகன் அறிவிப்பு

வாஷிங்டன்,டிசெ.23

பாகிஸ்தான் உடனான அமெரிக்காவின் உறவு, சிக்கலானது; ஆனால் மிக முக்கியமானது என்று அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜோர்ஜ் லிட்டில் தெரிவித்தார்.

இந்தாண்டின் இறுதிப் பத்திரிகையாளர் கூட்டம் வாஷிங்டனில் நடைபெற்றது. அதில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரு நாடுகளும் இணைந்து, சர்வதேச அளவில் அச்சுறுத்தி வரும் தீவிரவாதத்தை வேரறுக்கும் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்டு வருகிறோம். அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

தீவிரவாதிகளால் அமெரிக்க மக்கள் மட்டுமன்றி பாகிஸ்தான் மக்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் காலங்களில், இணைந்து செயற்பட்டு தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிப்போம்- என்று ஜோர்ஜ் லிட்டில் தெரிவித்தார்.

## மனித உரிமை மீறல்கள் குறித்து சிறுவர்களே முறைப்பாடு செய்யலாம்

### புதிய சட்டத்துக்கு ஐ.நாவின் பொதுச் சபை அங்கீகாரம்

சிறுவர், சிறுமியர்கள் தமக்கு எதிராக நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து தாங்களே நேரடியாக சர்வதேச அமைப்புகளிடம் முறைப்பாடு செய்வதற்கு வழி செய்யும் புதிய சட்டம் ஒன்றுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறுவர் உரிமைகள் குறித்த புதிய சட்டத்துக்கான பிரேரணை கடந்த ஜூன் மாதம் ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக் குழுவால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஐ.நா ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்தப் புதிய பிரேரணையை அங்கீகரித்த தன் மூலம் ஐ.நா பொதுச் சபை இந்த அதிகாரங்களை வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் தமக்கு எதிராக மேற்கொள்ளப் படக் கூடிய மனித உரிமை மீறல்களான, சிறுவர்களை விற்றல், சிறுவர்களைத் தாக்குதல், சிறுவர் ஆபாசப்படங்கள் மற்றும் சிறுவர்களைப் போர்ப் படைக்குச் சேர்த்தல் ஆகியவை குறித்து சிறுவர், சிறுமியர் நேரடியாகவே சர்வதேச அமைப்புக்களுக்கு முறையிட முடியும்.

இதேவேளை தமக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து சிறுவர்களே நேரடியாக முறைப்பாடு செய்ய வழி செய்யும் இந்தப் புதிய சட்டத்தை அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் நவி பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். இவர் மேலும் தெரிவித்ததாவது;

இத்தகைய முறைப்பாடுகள் சிறுவர்களிடம் இருந்து நேரடியாகவே கிடைக்கும் பட்சத்தில் குறித்த குற்றங்கள் சிறுவர் உரிமைகளைச் சாசனத்தை மீறுகிறதா? என்பதை ஐ.நா.வின் சிறுவர் உரிமைக்கான குழு ஆராயும் என்றும், அதில் இருக்கக்கூடிய சிறுவரைப் பாதிக்கக்கூடிய சிக்கலான விடயங்களை அது கவனமாகக் கையாளும் என்றும் அதன் மூலம் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க அது நடவடிக்கை எடுக்கும் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் கூறியுள்ளார்.

இந்தப் புதிய சட்டத்தை நாடுகள் ஏற்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் அது பார்வைக்கு விடப்படும்.

## ஒபாமாவின் செல்வாக்கு அதிகரிப்பு

### கருத்துக் கணிப்பில் தகவல்

வாஷிங்டன்,டிசெ.23

சமீபகாலமாக அமெரிக்க மக்கள் மத்தியில் ஜனாதிபதி ஒபாமாவுக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும், இதனால் அவர் மீண்டும் ஜனாதிபதியாகும் வாய்ப்பு உள்ளதாகவும் தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் 2012ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாக பராக் ஒபாமா மீண்டும் போட்டியிடவுள்ளார். குடியரசுக் கட்சி வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளவர்களுக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு குறித்து சிஎன்என்/ஓ ஆர்சி என்ற நிறுவனம் கருத்துக் கணிப்பு நடத்தியது.

இதில் கடந்த சில மாதங்களில் அமெரிக்க மக்கள் மத்தியில் ஒபாமாவின் செல்வாக்கு அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பு குறித்து கருத்து வெளியிட்ட வெள்ளை மாளிகை ஊடகச் செயலர்ஜே கார்னி கூறியதாவது,

தலைவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிப்பதும், குறைவதும் இயற்கையான ஒன்று. இதனால் அதைப்பற்றி ஒபாமா கவலைப்படவில்லை.

இப்போது நாடு சந்தித்து வரும் பொருளாதாரச் சிக்கலை தீர்ப்பதில்தான் அவர் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார் என்றார். (ந)

# எகிப்தில் ராணுவத்துக்கு எதிராக பெண்கள் திரண்டு போராட்டம்



எகிப்தில் இராணுவத்தினர் சிலர் பெண் ஒருவருக்கு எதிராக வன்முறையாக நடந்து கொண்டமையைக் கண்டித்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் எகிப்தில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை சில இராணு வத்தினர் சேர்ந்து ஆடையை பிடித்து இழுப்பது போலவும் அவரை அடித்து உதைப்பது போலவும் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1000 பெண்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்பாட்டத்தில் , பெண்களுக்கு எதிரான கொடுமைகளை இராணுவத்தினர் நிறுத்த வேண்டுமென அவர்கள் கோஷமிட்டதாகவும் , எகிப்தில் அண்மைக்காலத்தில் அதிக பெண்கள் கலந்து கொண்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இதுவெனவும் கூறப்படுகிறது.


## இந்திய மாணவனை படுகொலை செய்த ஆஸி.சிறுவனுக்குச் சிறை!

சிட்னி,டிசெ.23

இந்திய மாணவனைக்கொலை செய்த ஆஸ்திரேலிய சிறுவனுக்கு 13ஆண்டுகள்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் படித்து வந்த இந்திய மாணவன் நிதின் கார்க்கை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மெல்போர்னில் உள்ள உணவு விடுதியின் முன்பாக 15 வயதுச் சிறுவன் ஒருவன் கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு அவரிடம் இருந்த கைபேசி மற்றும் பணத்தை அபகரித்துச். இதனைக் கண்டித்து குற்றவாளி மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க ஆஸ்திரேலிய அரசை இந்திய அரசு வலியுறுத்தியது.

இதனையடுத்து நிதினை கொன்றசிறுவனுக்குமெல் போர்ன் நீதி மன்றம் 13 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.



ஸ்பெயின் முன்னாள் பிரதமர் ஜோஸ் லூயிஸ், ஸ்பெயின் நாட்டின் மன்னன் ஜோன் சார்லஸ் , ராணி ஷோபியா மற்றும் புதிய பிரதமர் மரியானோ ரஜாய்யும், சர்ஷாலா மாளிகையில் நடந்த புதிய பிரதமர் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

### கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

## பாக்.தேவாலயங்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

பாகிஸ்தானில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்கி வருவதால் தேவாலயங்களுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் தீவிரவாத அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற காரணத்தால் தேவாலயங்களுக்குக் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளன.

சிறுபான்மைத் தலைவர்களுடன் காவல்துறை உயரதிகாரிகள் நடத்திய ஆலோசனையை அடுத்தே தேவாலயங்களில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக 'எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.


காவல்துறையினரின் கணிப்பன்படி லாகூரில் உள்ள 38 தேவாலயங்கள் அச்சுறுத்தல் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. மேற்கூரையிலிருந்து கண்காணிப்பது மற்றும் தேவாலயங்களின் வாயில்களில் கருவிகள் மூலம் சோதனை செய்வது உட்பட பல நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக லாகூர் காவல்துறை தலைவர் அகமது ரஸீல் தாஹிர் தெரிவித்ததாவது;

மிகவும் பதற்றம் வாய்ந்த பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் அதிக பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தேவாலயங்களை சிறப்புப் பிரிவு காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனர். மேலும் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் பகுதிகளுக்கும் அதிக பாதுகாப்பு அளிக்கப்படும்- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஈராக் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு

### வலியுறுத்துகிறார் பான் கி மூன்



வாஷிங்டன், டிசெ.23

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியுள்ள நிலையில் ஈராக் அரசியல் தலைவர்கள் தங்கள் நாட்டுப் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக் மீது படையெடுத்த அமெரிக்கா, அந்தநாட்டைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. சுமார் 8ஆண்டுகள் ஈராக்கில் இருந்த அமெரிக்கப் படைகள் கடந்த மாதம் முதல் வாபஸ் பெறப்பட்டு வந்த நிலையில் ஈராக்கில் இருந்த கடைசி அமெரிக்கப் படைப் பிரிவும் கூட இந்த மாத, கடந்த சில நாள்களுக்கு முன்பு ஈராக்கை விட்டு வெளியேறியது. இப்போது ஈராக் முழுக்க முழுக்க அந்தநாட்டுத் தலைவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த நிலையிலேயே ஈராக் அரசியல் தலைவர்களுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் அறிக்கை ஒன்றின் மூலம் மேற்படி வேண்டு கோளை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் முழுவதுமாக வெளியேறி விட்டன. ஈராக்கின் அண்மை வரலாற்றில் இது ஒரு புதிய திருப்பமாக அமைந்துள்ளது. எனவே ஈராக் அரசியல் தலைவர்கள் ஜனநாயக முறையில் தங்கள் நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும் என்று பான் கி மூன் கேட்டுக்கொண்டுள்ளார். ஒரு சிறந்த எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் வகையில் ஈராக் மக்களுக்கும் உலக மக்களுக்கும் ஒரு நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஈராக் தலைவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்றும் அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## 13 குண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் 57 சாவு, 130 பேர் படுகாயம்

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களில் இதுவரை 57 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 130இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்தாத் நகரின் அல்-அமில், ஹலாவி, கராடா உள்ளிட்ட 13 இடங்களில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈராக்கின் உள்நாட்டு விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களால் ஈராக்கில் ஒருவகை பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் பின்னணியில் இருப்போர் யார் என்று இதுவரை கண்டறியப்படவில்லை. எந்தவொரு இயக்கமும் இத்தாக்குதலுக்கு இதுவரை உரிமை கோரவுமில்லை.

ஆனால் ஈராக் மீது இவ்வாறு ஒன்றிணைந்து திட்டமிட்ட தாக்குதல் நடத்த அல் குவைதா இயக்கம் ஒன்றே இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அந்தாட்டிக்காக் கண்டத்தில் தனியாக பயணம் செய்யும் பிரிட்டன் பெண்



பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணொருவர் அந்தாட்டிக்காக் கண்டத்தில் தனியாக பயணம் மேற்கொண்டுள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த அஸ் தான் என்ற பெண்ணுக்கு பனிப் பிரதேசமான அந்தாட்டிக்காவை ஒரு தனி மனிதனாகக் கடந்து சாதனை படைக்கவேண்டும் என்பதே இலட்சியமாக இருந்தது. அந்த இலட்சியத்தை நிறை வேற்ற பனிச் சறுக்கு கட்டைகளை காலில் கட்டிக்கொண்டு அண்டார்டிகாவின் தென் முனையை நோக்கித் தனது பயணத்தை அவர் மேற்கொண் டுள்ளார்.

எங்கும் வெண்மையாக காட்சி அளிக்கும் பனிப் பிரதே சத்தில் கடந்த 3 வாரங்களுக்கு முன்பு தனது பயணத்தைத் தொடங்கிய குறித்த பெண் அங்கு வீசும் கடும் பனிப்புயல் மற்றும் பனிப் பாறைகள் மற்றும் உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு இடையே தற்போது 3 இல் 2 பங்கு அந்தாட்டிக்கா கண்டத்தைக் கடந்துள்ளார். இந்த வார இறுதிக்குள் அவர் தென் முனையை அடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கடாபி மகனுக்கு உதவிய பெண்ணின் காவல் நீடிப்பு

கடாபியின் மகன் லிபியாவிலிருந்து திருட்டுத்தனமாக மெக்சிகோ வருவதற்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 40 வயது கனடா பெண் சிந்தியா வேணியருக்கு காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் சிந்தியா மெக்சி கோவில் காவலில் வைக்கப்பட் டுள்ளார்.

கனடா வெளிவிவகாரத் துறை அமைச்சரின் செய்தித் தொடர்பாளரான ஜான் பேப்காக், கனடா சிந்தியாவின் காவல் பற்றி அறிந்திருப்பதாகவும், தமது தூதரகம் மூலமாகத் தேவையான உதவிகள் செய்து வருவதாகவும் கூறினார்.




# Notepad 7 மென்பொருளைத் தரவிறக்கம் செய்ய வேண்டுமா?



நீண்ட காலமாக விண்டோஸ் கணினியில் இருக்கும் நோட்பாட்டின் வடிவமைப்பில் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படாமலேயே வெளியிடப்பட்டு வருகின்றது. இந்தக்குறையை நிவர்த்தி செய்யவே Notepad7 என்ற இலவச மென்பொருள் கிடைக்கின்றது. மைக்ரோசாப்ட் 2010 எம்.எஸ்.அலுவலகங்களுக்கு அறிமுகப்படுத்திய Ribbon வடிவமைப்பை போன்றே நோட்பாட் 7 வெளியிடப்படுகின்றது. நோட்பாட்டில் இருக்கும் வழமையான வசதிகளுடன் தேவையான பட்டன் மற்றும் டூல்பார்களை முகப்பில் தெரியுமாறு கஸ்டமைஸ் செய்துவிடலாம்.

நீண்ட காலமாக விண்டோஸ் கணினியில் இருக்கும் நோட்பாட்டின் வடிவமைப்பில் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படாமலேயே வெளியிடப்பட்டு வருகின்றது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யவே Notepad7 என்ற இலவச மென்பொருள் கிடைக்கின்றது. மைக்ரோசொப்ட் 2010 எம்.எஸ்.அலுவலகங்களுக்கு அறிமுகப்படுத்திய Ribbon வடிவமைப்பை போன்றே நோட்பாட் 7 வெளியிடப்படுகின்றது. நோட்பாட்டில் இருக்கும் வழமையான வசதிகளுடன் தேவையான பட்டன் மற்றும் டூல்பார்களை முகப்பில் தெரியுமாறு கஸ்டமைஸ் செய்துவிடலாம்.

http://www.skyforu.info/notepad7/

# அருமையான பற்றரி பேக்கப்புடன் எச்.டி.சி. போர்ட்டபிள் ஸ்பீக்கர்

மொபைல் தயாரிப்பில் எச்.டி.சி. நிறுவனம் சிறந்த நற்பெயரைப் பெற்றுள்ளது. குறிப்பாக தரத்துக்கும் உயர் செயல்திறனுக்கும் எச்.டி.சி. எப்போதும் முன்னனியில் இருந்து வருகிறது.

தற்போது எச்.டி.சி. ஸ்மார்ட்போன்களுக்கான அக்சஸரிகளைத் தயாரிப்பதில் அதிக அக்கறை காட்டி வருகிறது. அதன் தொடர்ச்சியாக தற்போது எச்.டி.சி. புதிய உரையாடல் ஸ்பீக்கரை அறிமுகப்படுத்தி இருக்கிறது. இது ஒரு ப்ளூடூத் வசதி கொண்ட போர்ட்டபுள் ஸ்பீக்கர் ஆகும். இதன் பெயர் எச்.டி.சி. பி.எஸ். பி100 ஆகும். இதை மிகவும் எளிதாக எடுத்துச் செல்ல முடியும்.

இந்த எச்.டி.சி. பி.எஸ். பி100 ப்ளூடூத் ஸ்பீக்கர் மிகவும் சிறந்த நாகரிகமான முறையில் உள்ளது. இது உலோகத்தால் செய்யப் பட்டுள்ளது. இதை ஒரே நேரத்தில் 2 ப்ளூடூத் டிவைஸ்களுடன் இணைக்க முடியும்.

இந்த எச்.டி.சி. ப்ளூடூத் ஸ்பீக்கரின் சிறப்புகளைப் பார்த்தால் அது முதலில் உறுதியான உலோகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. வட்ட வடிவமாக பார்ப்பதற்கு மிக அழகாக உள்ளது. இது 200 300 மணி நேரம் நிறுத்தி வைக்கலாம்.

இது 8 மணி நேர பேக்கப்பை கொடுக்கும். இதன் உரையாடல் நேரம் 10 மணித்தியாலம் ஆகும். இதன் ட்ரூ வயர்லஸ் ஸ்டீரியோ இயங்கு நேரம் 6 மணித்தியாலங்கள் ஆகும். இதன் சாதாரண உரையாடல் நேரம் 12 மணித்தியாலயம் ஆகும். இந்த எச்.டி.சி.பி.எஸ். பி100 ப்ளூடூத் உரையாடல் ஸ்பீக்கரின் விலை ரூ.6,000 ஆகும்.

# அப்பிளை முந்திய சம்சுங் நிறுவனம்


அப்பிள் நிறுவனத்தின் ஐபோனை விட சம்சுங் நிறுவனத் தயாரிப்பான கேலக்ஸி நெக்சஸ் கைபேசி பிரபலமடைந்துள்ளது.

தங்கள் தயாரிப்பைப் பிரபலப் படுத்த சம்சுங் நிறுவனம் விளம்பரங்கள் மூலம் மேற்கொண்ட முயற்சியே இதற்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது.

மேலும் அப்பிள் ஐபோனில் உள்ள பற்றரிக் குறைபாடு, இணையத் தளத்தை இணைப்பதில் உள்ள வேகம் ஆகியவையும் கேலக்ஸியின் பக்கம் வாடிக்கையாளர்களைத் திருப்பியுள்ளது. அமெரிக்க இளைஞர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.

கூகுள் நிறுவனத்துடன் இணைந்து இந்த 4ஆம் தலைமுறை கைபேசியை சம்சுங் தயாரித்துள்ளது.

# விண்வெளிக்கு வீரர்களைக் கொண்டு செல்லும் புதிய விண்கலம் SpaceX



அமெரிக்க விண்வெளி அமைப்பான நாஸா தனது ஷட்டில் ரக விண்கலங்கள் உபயோகிப்பதை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்ட நிலையில், அடுத்தபடியாக SpaceX ரக விண்கலங்கள் பயன்பாட்டுக்கு வரவுள்ளன.

ஏறத்தாழ 30 ஆண்டுகள் 135 முறை ஏவப்பட்ட ஸ்பேஸ் ஷட்டில் ரக விண்கலங்கள் ஏராளமான விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்றது. ஆனால், இதற்கு பதில் மிக நவீனமான ஷட்டில்களை நாஸா உருவாக்கி வருகிறது. அதுவரை வீரர்களை விண்ணுக்கு அழைத்துச் செல்லவும் பூமிக்குத் திரும்பச் செய்தலுக்கும் ரஷ்யாவின் சோயூஸ் கேப்சூல்களையே அமெரிக்கா சார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருந்தது.

இதற்கிடையே, விண்வெளிக்கு வீரர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் அழைத்துச் செல்லும் விண்கலங்களை உருவாக்குவதில் அமெரிக்காவில் பல விண்துறை நிறுவனங்களிடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதில், கலிபோர்னியாவைச் சேர்ந்த ஸ்பேஸ் எக்ஸ் என்ற நிறுவனம் தயாரித்துள்ள டிராகன் ரக கேப்சூலுக்கு நாஸா அனுமதி தந்துள்ளது.

இந்த கேப்சூல் ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்படும். இதில் பயணிக்கும் விஞ்ஞானிகள் வானில் கட்டப்பட்டு வரும் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்று, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுவிட்டு, இந்த கேப்சூலிலேயே பூமிக்குத் திரும்புவர்.

ஷட்டில் ரக விண்கலம் விமானத்தைப் போல பூமியில் தரையிறங்கும். ஆனால், இந்த கேப்சூல் பரசூட் மூலம் பூமியில் தரையிறங்கும்.

ரஷ்யா தான் (சோவியத் யூனியன்) ஆரம்பத்திலிருந்தே கேப்சூல்களை பயன்படுத்தி வந்த நாடாகும். அமெரிக்கா இதை அதிகம் உபயோகித்ததில்லை. விண்வெளிப் பயணத்துக்கு ஷட்டில்களையே அதிகமாகப் பயன்படுத்தி வந்தது. இப்போது நீண்டகாலத்தின் பின்னர் அமெரிக்கா கேப்சூலை பயன்படுத்தவுள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் உருவாக்கியுள்ள இந்த தனியார் விண்கலத்தை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தும். இதில் வீரர்கள் யாரும் செல்லமாட்டார்கள். சரக்குகளை ஏற்றிச் செல்லும் இந்த கேப்சூல், சர்வதேச விண்வெளி மையத்துக்கு அதை கொண்டு செல்லும்.

அங்குள்ள விஞ்ஞானிகள் சரக்குகளை இறக்கிய பின், இந்த கேப்சூல் பூமிக்குத் திரும்பும். பசிபிக் கடலில் பரசூட் மூலம் இந்தக் கலம் தரையிறங்கும்.

இந்த விண்கலத்தை உருவாக்கியுள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தை நிறுவியவர் பே பால் நிறுவனரான எலோன் முஸ்க் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங். மறைமுகப் பேச்சு

## முஸ்லிம்களுக்கு துரோகமிழைப்பு என்கிறார் கிழக்கு மாகாண அமைச்சர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் நடத்தும் பேச்சானது வடக்கையும் கிழக்கையும் மீள இணைப்பதற்கான மறைமுகப் பேச்சு என்று கிழக்கு சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினை விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்று வலியுறுத்திய முஸ்லிம் காங்கிரஸ், கூட்டமைப்புடன் தனியாகச் சென்று பேச்சு நடத்தியிருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை. ஆனால், அந்த மக்களின் வாக்குகளைப் பெற்றமுஸ்லிம் காங்கிரஸ், மக்களின் விருப்பத்துக்கு மாறாக செயற்பட்டு வருகின்றது.



மு.காவின் மறைமுகப் பேச்சு அந்தக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மாகாண சபை உறுப்பினர்களையும் அதிருப்தியடையச் செய்துள்ளது. மக்களின் விருப்பத்துக்கு மாறாக கட்சித் தலைமை செயற்படுவதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சு நடத்தியும் சாத்தியமற்றுப்போன நிலையில் அது தொடர்பில் மு.கா. மீள பேச்சு நடத்துவதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகவே மு.காவின் வடக்கு, கிழக்கு இணைப்புப் பேச்சை நாம் பார்க்கின்றோம்.

முஸ்லிம் சமூகத்தை அரசிடம் காட்டிக் கொடுத்து பிழைப்பு நடத்தும் பேச்சுகளா? அல்லது அரசை மறைமுகமாக எச்சரிக்கும் பேச்சுகளா? என்பதைக் கேட்க விரும்புகின்றோம்- என்றார். (ச)

## கொக்கட்டிச்சோலையில் இரண்டு இந்தியப் பிரஜைகள் கைது

மட்டக்களப்பு,டிசெ.23

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இரண்டு இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ள நிலையில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## போதைப் பொருள் வில்லைகளுடன் ஒருவர் கைது

வெளிநாடு ஒன்றுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படும் போதைப்பொருள் கொண்டதான ஒரு லட்சம் வில்லைகளைக் கைப்பற்றியுள்ள பொலிஸார் சந்தேக நபரொருவரையும் கைது செய்துள்ளனர்.

கண்டி, தவுலகல ஹேந்தெனிய பிரதேசத்தில் இந்த வில்லைகள் கைப்பற்றப்பட்டன. இவற்றை இரகசியமாகக் கொண்டு சென்ற நபரை நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்ததாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வில்லைகளின் ஒரு தொகுதி மேலதிக விசாரணைக்காக அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)



அட்டாளைச்சேனை பிரதான வீதியில் வெள்ளம் வழிந்தோட முடியாது முற்றாக மூடப்பட்டுக் காணப்பட்ட வடிகான்களைத் தோண்டும் பணி நடைபெறுகின்றது.

## மாவடிப்பள்ளி பாலத்தை நிர்மாணிக்க வேண்டுகோள்

அம்பாறை,டிசெ.23

காரைதீவு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள மாவடிப்பள்ளி பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் ஒன்றை வெள்ளப்பாதிப்பற்ற வகையில் நிர்மாணிக்குமாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பருவமழை காலங்களிலும், சேனநாயக்க சமுத்திர நீர் திறந்துவிடப்படும்போதும் இந்த மாவடிப்பள்ளிப்பாலம் ஊடாக வெள்ளம் பாய்ந்து அடிக்கடி போக்குவரத்துத் தடை ஏற்படும் அவலம் நீடித்து வருவதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் எஸ். லோகநாதன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முக்கியத்துவம் வாய்ந்த மாவடிப்பள்ளி பாலத்தினூடாக அடிக்கடி வெள்ளம் பாய்ந்து போக்குவரத்துத் தடையேற்படுவது நீண்டகாலமாக வழக்கமான பிரச்சினையாக இருந்து வருகின்றது.

இவ்வாறு வெள்ளத்தினால் அடிக்கடி போக்குவரத்து தடையேற்படும்போது மக்கள் நீண்ட தூரம் சுற்றி அக்கரைப்பற்று ஊடாகப் பயணம் செய்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள் ஆகியோர் இந்த விடயத்தைக் கண்டும் காணாதவர்களாக அலட்சியப் போக்குடனேயே இருந்து வருகின்றனர்.

ஏன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் கூட மாவடிப் பள்ளிப்பாலம் தொடர்பில் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

**திருமலையில் 5 மாணவர்கள் படுகொலை**

## அமெரிக்க நீதிமன்ற வழக்கில் வாதாட மஹிந்த சார்பில் சட்டத்தரணி நியமனம்

திருகோணமலை, டிசெ.23

திருகோணமலை கடற்கரையில் 2006 ஆம் ஆண்டு ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் தமது சார்பில் வாதாட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சட்டத்தரணி ஒருவரை நியமித்திருப்பதாக இந்த வழக்கைத் தாக்கல் செய்தவர்களில் ஒருவரான டாக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரான ரஜி ஹரின் தந்தையான டாக்டர் மனோகரன், அந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது அமெரிக்க நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போது, இவ்வாறான தொரு வழக்கை இலங்கை ஜனாதிபதி மீது தொடுக்கமுடியாது. இது போன்ற விடயங்களில் இலங்கை ஜனாதிபதிக்கு சட்ட விலக்கு இருக்கிறது என்று அவரது ஆதரவாளர்களால் வாதாடப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் அவர் பதிலளிக்க மாட்டார் என்றும் அவரது ஆதரவாளர்கள் சிலரால் கூறப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பின்னணியில், திடீரென ஜனாதிபதி மஹிந்த சார்பில் இந்த வழக்கு நடக்கும் அமெரிக்க நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருப்பதன் மூலம் இந்த வழக்கில் அமெரிக்க நீதிமன்றத்தின் அதிகாரத்தை மஹிந்த ராஜபக்ஷ மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## முகாமையாளரை இடமாற்றக் கோரி தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, டிசெ.23

தொழிலாளர்களை அச்சுறுத்தும் வகையில் தோட்டத்திற்கு இராணுவத்தினரை வரவழைத்ததுடன் அதற்கான காரணத்தை மிகவும் தகாத வார்த்தைகளால் தெரிவித்தார் என்று கூறப்படும் ஹற்றன், வெலிஓயா தோட்ட முகாமையாளரை இடமாற்றக்கோரி தொழிலாளர்கள் கடந்த 13 ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹற்றன் வெலிஓயா தோட்டத்தின் மேற்பிரிவு, கீழ்ப் பிரிவு, ஆக்ரஓயா, புதுக்காடு, தண்டுகலா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 1,097 தொழிலாளர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தோட்டப் பிரிவுகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஒருநாள் அடிப்படை சம்பளத்திற்காக 17 கிலோ கொழுந்தினைப் பறித்து வருகின்றனர்.

இந்தநிலையில் ஒருநாள் அடிப்படைச் சம்பளத்திற்காக 20 கிலோ கொழுந்தினைப் பறிக்கவேண்டும் என்று தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை வற்புறுத்தியுள்ளது.

இதற்கு தோட்டத்தொழிலாளர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 13 ஆம் திகதி இந்தத் தோட்டத்திற்கு திடீரென 18 இராணுவச் சிப்பாய்கள் வருகை தந்துள்ளனர்.

இவர்களின் வருகை குறித்து சந்தேகம் கொண்ட தொழிலாளர்கள் இது தொடர்பாக தோட்ட முகாமையாளரிடம் கேட்ட போது அவர், மிகவும் கீழ்த்தனமான வார்த்தைகளால் பேசியுள்ளார் என்று தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பொலிஸாரும் இந்தத் தோட்டத்திற்கு காரணமின்றி வந்து சென்றுள்ளனர் எனத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிலாளர்களின் வேலைப் பளுவை அதிகரிப்பதற்காக தோட்ட நிர்வாகம் இராணுவத்தையும், பொலிஸாரையும் வரவழைத்துத் தம்மை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதுடன் தரக்குறைவாகவும் பேசிய சம்பந்தப்பட்ட தோட்ட முகாமையாளரை இடமாற்றக் கோரி தாம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாக தொழிலாளர்கள் தோட்டத் தொழிற் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக தொழிலாளர் தேசிய சங்கம், மலையக தொழிலாளர் முன்னணி, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகிய தொழிற் சங்கங்களின் முக்கியஸ்தர்கள் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாளர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரையில் வேலை நிறுத்தப்போராட்டம் தொடரும் என்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
இனம்புரியாத கவலைகள் மனதை ஆள்கொள்ளும் நாள். நண்பர் ஒருவருடன் யோசித்துப்பேச வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்காமல் இழுத்தடிக்கலாம். கடுமையாக முயற்சித்த ஒரு காரியம் கடைசி நேரத்தில் கை நழுவிப் போகலாம். சபலங்களால் சங்கடங்களுக்கு ஆள்படலாம்

**இடபம்:**
பெரிய மனிதர்கள் சிலரின் நட்புக் கிடைக்கும். சுப காரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பெற்றோரின் மனக்குறைகளைத் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர்ப் பயணங்களின் போது உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகள் கடும் அலைச்சலுக்கு ஆள்படலாம். பெருமைக்காகச் சில செலவுகளைச் செய்வீர்கள்.

**மிதுனம்:**
எந்த வேலையையும் மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வரவுகளை எதிர்பார்த்துச் சில செலவுகளைச் செய்வீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் பேசலாம். போட்டி, எதிர்ப்பு விலகும்.

**கடகம்:**
ஆரம்பித்த காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத சிரமங்களுக்கு ஆள்படலாம். மற்றொருவரின் வேலைக்காக நீங்கள் அலைய நேரிடலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். தூங்கக் கூட நேரமில்லாத வகையில் சில வேலைகளைச் செய்ய நேரிடலாம்.

**சிங்கம்:**
கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். பெண்கள், குடும்ப உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகளால் கோபம் அடையலாம். எந்த வேலையையும் நாளை என்று பிற்போடாமல், இன்றே செய்து முடிப்பதில் உறுதியாக இருப்பீர்கள். நண்பர் ஒருவருக்குத் தெரிந்தவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**கன்னி:**
உதவி செய்வதாகச் சொன்ன ஒருவர் கைவிட்டாலும், மற்றொருவர் சரியான நேரத்தில் உதவி செய்யலாம். உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டுக்குத் தேடி வந்து யோசனைக் கேட்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். பல மணி நேரமாகும் என்று நினைத்த வேலை ஒன்று சில நிமிடங்களில் முடிவுக்கு வரலாம்.

**துலாம்:**
சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான விடயங்களை ஒதுக்கி வைத்து விட்டு, ஓய்வெடுப்பதில் நாட்டம் செல்லும். சிலரிடம் வீண் வம்பு பேசி அவர்களை நோகடிப்பீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:**
அலைச்சல் இருந்தாலும், அதனால் ஆதாயம்பெறும் நாள். சில பிரச்சினைகளைக் கண்டு பயம் கொள்ளாமல், அதை தைரியமாக எதிர்கொள்வீர்கள். நல்ல காரியங்களுக்காக செலவுகள் செய்யலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். புதிய அனுபவங்களைப் பெறலாம். குரு வழிபாடு குதூகலம் தரும்.

**தனுசு:**
பல நாள்களாகச் செய்ய வேண்டிய வேலைகளை இன்றே சேர்த்து செய்வீர்கள். உறவினர் ஒருவரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல், சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிக்கலாம். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றாமல் தள்ளிப் போடலாம். முக்கியமான தகவல்களை கேட்கலாம்.

**மகரம்:**
லாபகரமான பணவரவுகளால் மகிழ்ச்சி அடையும் நாள். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உங்களை நம்பி சிலர் முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உறவினர் ஒருவரின் ரகசியங்களை மற்றொருவர் மூலம் அறிந்து கொள்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

**கும்பம்:**
கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட நேரத்தில் முடிவுக்கு வரும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம், நேசம் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். உடன் பிறப்புக்கள் விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

**மீனம்:**
சிலரின் கோபத்துக்கு ஆள்படலாம். கேளிக்கை, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். கையில் இருக்கும் பணத்தை ஒருவரிடம் கொடுத்து விட்டு உங்களின் தேவைகளுக்கு, மற்றவர்களிடம் கடன் வாங்கலாம். பிரபலமான கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

# அடிபை

# அரசு வ



உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி

கே:- இறுதி மோதலில் இடம்பெற்ற சிவிலியன்களின் உயிரிழப்புக்காக தமிழர்களுக்கு நீதி கிடைக்க தமிழ்க் கூட்டமைப்பு இறுதிவரை அரசியல் ரீதியாக போராடுமா?

ப:- எங்களது மக்களை நாம் கைவிடமாட்டோம். அதுதான் பதில்.

கே:- வடக்கு மாகாணசபைத் தேர்தல் எப்போது நடைபெறும்? ஏதாவது தகவல் இருக்கிறதா?

ப:- வைக்கவேண்டும் என்று கதைத்தார்கள். தற்போது கொஞ்சம் தாமதம் ஏற்படுமாப்போல் தெரிகிறது. அதைப்பற்றிக் கவனமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

கே:- வடமாகாணசபைத் தேர்தலில் உங்கள் கட்சி வேட்பாளர் யார் என்பதை தீர்மானித்து விட்டீர்களா?

ப:- தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த விடயங்கள் சம்பந்தமாக நாம் முடிவெடுப்போம். இப்போது தேர்தலுடன் சம்பந்தப்பட்ட பல விடயங்கள் பற்றியே நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

கே:- சர்வதேச நாடுகளுக்கான பயணத்தை கூட்டமைப்பு அண்மையில் மேற்கொண்டிருந்தது. இந்தப் பயணத்தின்போது ஐ.நா. செயலாளர் நாயகத்தை சந்திக்கமுடியாமற்போனமை கூட்டமைப்புக்கு ஏற்பட்ட தோல்வி என்று நினைக்கிறீர்களா?

ப:- நான் எதையும் வெற்றி, தோல்வி என்று கருதுபவன் அல்லன். எங்களது கடமையை நாங்கள் செய்யவேண்டும். நாங்கள் அங்கே போவதற்கு முன்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தை, எமது குழுவில் நான் மட்டும் அவரைச் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. துரதிர்ஷ்டவசமாக நாங்கள் அங்கு போனபிறகு அந்த ஒழுங்கு ரத்துச் செய்யப்பட்டது. ஐ.நா. செயலாளர் நாயகம் என்னைச் சந்திக்க இருந்த நாளில் லிபியாவுக்கு அவசர பயணம் மேற்கொள்ள வேண்டி இருந்தது உண்மை. அடுத்தநாள் அவர் லிபியாவில் உரையாற்றியிருந்தார். அதுவும் உண்மை. அது எங்களுக்குத் தெரியும்.

எனவே நான் அவரைச் சந்திக்கவில்லை. ஆனால், அவருடைய உதவிச் செயலாளரும் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளருமான லியன் பாஸ்கோவைச் சந்தித்து உரையாற்றிருந்தோம். அவர்களுக்கு சொல்லவேண்டியவற்றை சொல்லிவிட்டோம்.

ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இங்கு வந்தபோது - 2009ஆம் ஆண்டு மே மாதம் - அவரை நான் சந்திப்பதற்கு ஒரு ஒழுங்கு இருந்தது. பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் அதிமுக்கிய பிரமுகர்களுக்கான மண்டபத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற இருந்தது. ஆனால், நான் விமான நிலையம் சென்று அந்த மண்டபத்திற்குள் நுழைய முற்பட்டபோது எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின் அடிப்படையில் என்னை அங்கு அனுமதிக்க முடியாது என்று என்னிடம் கூறினார்கள்.

நான் ஐ.நா செயலாளரை சந்தித்தால் இவர்கள் ஏன் அச்சமடையவேண்டும்? நான் ஐ.நா. செயலாளரை சந்தித்து எமது மக்கள் சார்பில் இந்த நாடு சார்பில் கூறவேண்டிய கருத்துக்களை கூறினால் இவர்கள் ஏன் அச்சப்படுகிறார்கள்? ஆனபடியால் அவரைச் சந்திக்காவிட்டாலும் கூட எங்களுடைய கருத்துக்கள் எமது நிலைப்பாடுகள் எமது மக்களின் பிரச்சினைகள் அவருக்குத் தெளிவாக புரியுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கே:- அமெரிக்காவின் ஐ.நா. செயலாளரை நீங்கள் சந்திப்பதைத் தடுப்பதற்காக அரசு இராஜதந்திர ரீதியில் அழுத்தங்களை கொடுத்ததென்று கூறப்படுகிறதே?

ப:- அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அப்படியொரு கதை அடிப்பட்டது. என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது.

கேள்வி:- எதிர்காலத்தில் ஐ.நா. செயலாளரைச் சந்திக்கும் திட்டம் இருக்கின்றதா?

பதில்:- உடனடி ஒழுங்குகள் இல்லை.

கே: தமிழ்க் கூட்டமைப்பு அடுத்த மாத இறுதியில் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்ய உள்ளதாமே?

ப: எங்களுடைய எதிர்கால ஒழுங்குகள் பற்றி நான் பகிரங்கமாக எதையும் பேச விரும்பவில்லை. ஆனால், நாங்கள் எமது மக்களுக்கு ஒரு விமோசனத்தைக் காணுவதற்கு எது எதைச் செய்யவேண்டி இருக்கின்றதோ அதனைச் செய்வோம்.

கே: தீர்வு முயற்சிகளில் இந்தியாவின் பங்கு அல்லது அக்கறை எந்த நிலையில் இருக்கிறது? பேச்சின் போக்குப் பற்றி இந்தியாவுக்கு நீங்கள் அடிக்கடி தெளிவுபடுத்தி வருகிறீர்களா?

ப: நியாயமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இந்தியா இது விடயம் சம்பந்தமாக அரசுக்கு பலவிதமான புத்திமதிகளை கூறியிருக்கின்றது. ஜனாதிபதியுடன் பல தடவைகள் பேசியிருக்கின்றது. வேறு பலருடனும் பேசியிருக்கின்றது. எங்களுடனும் பேசி வருகின்றது. ஆனால், நாம்தான் பேசி தீர்வுகாணவேண்டும்; இங்குதான் இது நிறைவேற்றப்படவேண்டும். ஆனபடியால் இது விடயம் சம்பந்தமாக அரசுதான் கருமத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கு அனுசரணையான இந்தியாவின் முயற்சி தொடரவேண்டும் என நாம் விரும்புகிறோம். தொடரும் என்றும் நம்புகிறோம். தொடர்வதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம்.

கே: சிங்கள குடியேற்றங்கள் வடக்கு, கிழக்கில் இடம்பெறுவதை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினாலும் அரசின் மூத்த அமைச்சர்மார் இதனை மறுத்துவிடுகின்றனர். ஏன் இது? உண்மை நிலை என்ன?

ப: இந்த விடயம் சம்பந்தமாக புள்ளி விவரங்களுடன் நாம் நாடாளுமன்றில் பேசியுள்ளோம். விவரங்களுடன் பேசும்போது அதற்கு எவரும் பதில் சொல்லவில்லை. கிழக்கு மாகாணத்தில் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. அபிவிருத்தி என்ற போர்வையில் கிழக்கில் தனிப்பட்ட முறையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்குக் காணிகள் வழங்கப்படுகின்றன. உல்லாசத்துறை, கைத்தொழில்துறை என்று பலவிதமான துறைகளுக்கு காணிகள் கொடுக்கப்படுகின்றன. இது உண்மை. இதனை எவரும் மறுக்கமுடியாது.

அதேவிதத்தில் தமிழர்

**அரசு மனித உரிமைகளை மீறியமை, போர்க் குற்றங்களைப் புரிந்தமை இந்த நாட்டுடன் மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல. இது உலகத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். ஏனென்றால், ஒரு இனப்பிரச்சினையை, இராணுவ ரீதியில் இந்த வகையில்தானா தீர்க்க முடியும் என்பது சர்வதேச சமூகத்தின் முன்பாக இன்றுள்ள கேள்வி. இலங்கை அரசு இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.**

# மகளைத்தான் விரும்புகிறது 3

செவ்வி கண்டவர்:
ஆர்.சிவராஜா

## இரா. சம்பந்தன் எம்.பி. வழங்கிய செவ்வியின் இறுதிப் பகுதி

**நான் ஐ.நா. செயலாளரை சந்தித்தால் இவர்கள் ஏன் அச்சமடையவேண்டும்? ஐ.நா. செயலாளரை சந்தித்து எமது மக்கள் சார்பில் இந்த நாடு சார்பில் கூறிவேண்டிய கருத்துக்களைக் கூறினால் இவர்கள் ஏன் அச்சப்படு- கிறார்கள்? ஆனபடியால் அவரைச் சந்திக்காவிட்டா- லும்கூட எங்களுடைய கருத்துக்கள் எமது நிலைப்- பாடுகள் எமது மக்களின் பிரச்சினைகள் அவருக்குத் தெளிவாக புரியுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

களுக்கோ, முஸ்லிம்களுக்கோ அங்கு காணிகள் கொடுக்கப்படவில்லை. சில இடங்களில் எமது மக்க இடம்பெயர்வதற்கு முன்பதாக விவசாயம் செய்து வந்த காணிகளில் இப்போது பெரும்பான்மை இனத்தவர்கள் விவசாயம் செய்கின்றனர். அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். அந்தக் காணிகள் அந்த மக்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். அது விடயம் சம்பந்தமாக அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு எங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். சில இடங்களில் மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. அங்கே இராணுவத்தினர் இருப்பதே இதற்குக் காரணம்.

கடற்றொழில் செய்யும் மக்களுக்கும் சில இடங்களுக்கு போக முடியாமல் இருக்கிறது. முல்லைத்தீவில் சுமார் எட்டு, ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படாமல் எட்டு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள கோம்பாவில் என்ற இடத்தில் குடியமர்த்தப்படுகிறார்கள். கரையோர கிராம மக்களை அவ்வாறு நிலப்பகுதியில் மீள்குடியமர்த்தினால் அந்த மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வார்கள்? இந்த விடயங்களை நாம் அரசுக்கு எடுத்துக் கூறி வருகிறோம்.

எமது பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக அரசுடன் கலந்தாலோசித்து செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். இதனூடாக எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். ஆனால், அரசு அதனை பெரிதாக விரும்புவதாகத் தெரியவில்லை. பேச்சில் இருபகுதியினர் பேசுவதுபோல் இந்தப் பிரச்சினை சம்பந்தமாகவும் உடனுக்குடன் பேசி மக்களுடைய கஷ்டங்களைத், துன்பங்களைத் தீர்க்கக்கூடிய வகையில் முடிவுகளை எடுப்பதற்கு பேச்சுக்களை நடத்த ஒழுங்கு செய்யுமாறும் அதில் பங்குபற்ற நாம் தயாராக இருப்பதாகவும் அரசுக்கு நாம் சொல்லியிருக்கிறோம். ஆனால், அந்த விதமான ஒழுங்குகளை அரசு செய்யவில்லை.

எங்களுடைய மக்களின் தேவைகளைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாக - ஒன்றாக இணைக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் கருமங்கள் நடைபெறவில்லை என்பது எமது நிலைப்பாடு. அவ்விதம் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் கடந்த இரண்டரை வருடங்களுக்குள் எமது உதவியுடன் பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தை கண்டிருக்கலாம். இந்தக் கருமங்களில் நாங்களும் பங்குபற்றினால் சர்வதேச சமூகத்தின் உதவி பெரியளவில் அதிகரித்திருக்கும். எமது புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவியும் பெரிதளவில் அதிகரித்திருக்கும்.

எமது மக்கள் தமது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு பலவிதமான திட்டங்களைத் தீட்டி நாம் செயற்பட்டிருக்கலாம். ஆனால், அந்த விதமான ஒத்துழைப்பைப் பெற அரசு ஏன் விரும்பவில்லை என்பது தெரியவில்லை. அவர்கள் தங்களது அடிமைகளாக செயற்பட விரும்புபவர்களுக்குத்தான் உதவ விரும்புகின்றனர். மக்களுடைய உரிமைகள் சம்பந்தமாக உறுதியாகப் பேசி அந்த அடிப்படையில் முடிவெடுத்துச் செயற்படுபவர்களை அவர்கள் தம்முடன் இணைந்துச்செயற்பட விரும்பவில்லை. இதுதான் உண்மை. ஆனபடியால் அரசின் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும்.

நாட்டில் நிரந்தரமான சமாதானம், நிரந்தரமான நல்லிணக்கம், உண்மையான சமத்துவம் வேண்டுமாக இருந்தால் அரசின் போக்கில் நிச்சயமாக ஒரு மாற்றம் தேவை. மாற்றம் ஏற்படாவிட்டால் உண்மையான சமாதானமோ, விசுவாசமோ, நல்லிணக்கமோ, நிரந்தர சமாதானமோ, சமரசமோ ஒருநாளும் ஏற்படமுடியாது.

*கே: புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் படிப்படியாக விடுதலை செய்யப்படுகின்றனர். ஆனால், சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. அவர்களை விடுவிக்க ஏதேனும் முயற்சிகள் உண்டா?*

ப: பேச்சுக்களின்போது நாம் இதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். தனிப்பட்ட முறையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கின்றனர். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைகளுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து அவர்களுடன் சில விடயங்களை கலந்தாலோசித்திருக்கின்றனர். பல கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

புனர்வாழ்வளித்து பல கைதிகளை அரசு விடுவித்துள்ளது. அதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால், அதனுடன் விடயம் முடிந்துவிடவில்லை. இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் தற்போதும் தடுப்புக்காவலில் உள்ளனர். மிகவும் கூடுதலான தொகையானோர் நீண்டகாலமாக மறியலில் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படாமலும் விடுதலை செய்யாமலும் ஒரு தெளிவற்ற நிலைமை தொடர்கிறது. இந்த நிலமையில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியம்.

தடுப்பிலுள்ளவர்களின் விவரங்களையாயினும் பகிரங்கமாக அறிவித்து கைதிகளின் பெற்றோருக்கு - அவர்களின் குடும்பங்களுக்கு உண்மையை அறிய வகை செய்யவேண்டும் என்று அரசைக் கேட்டிருந்தோம். அதைக்கூட அவர்கள் செய்யவில்லை. இது எமது மக்களின் வாழ்வில் பெரும் துன்பத்தையும், அவலத்தையும் ஏற்படுத்தும் ஒரு விடயம். விசேடமாக புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை உடைய உயர்ந்த இடத்தில் இருந்தவர்களைக்கூட அரசு தங்களுடன் அரவணைத்து வைத்திருக்கின்றபோது இவ்விதமான ஒரு மன்னிப்பை, பொது நிலைப்பாட்டை ஏற்படுத்த அரசு தயங்குவது நியாயப்படுத்தக்கூடிய விடயமாக எமக்குத் தோன்றவில்லை.

*கே: கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பு*

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# பிரச்சினைகளை அணுகுவது எப்படி?



பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகிறவர்கள் எல்லோரும் எப்படி யோசிப்பார்களோ அப்படியே நாமும் யோசிக்கக் கூடாது. பிரச்சினையிலிருந்து கொஞ்சம் விலகிப் போய் யோசிக்க வேண்டும்.

ஓர் அராபிக் கதை. அராபிய நாட்டில் அடிமைகள் குடும்பத்தின் மிக முக்கிய சொத்து. ஒரு பெரும் பணக்காரருக்கு அவரது அடிமை மீது அளவு கடந்த அன்பு. அவரது வாழ்க்கையில் அவன் அவ்வளவுக்கும் ஊடுருவி விட்டான். பணக்காரருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் அவரை மதிப்பது இல்லை. எனவே அவருக்கும் அவன் மீது அக்கறை இல்லை. பணக்காரர் தன் சொத்து முழுவதையும் தன் அடிமைக்கே எழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டார். என்றாலும் மகன் மீது உள்ள லேசான பாசத்தால் என் மகன் என் சொத்திலிருந்து தனக்கு விருப்பமான ஏதாவது ஒரு சொத்து மட்டும் எடுத்துக் கொள்ளலாம். அடிமை கொடுக்கக் கடமைப்பட்டவன் என்று பரிதாபத்தில் ஒரு வரி சேர்த்திருந்தார்.

மகன் அளவு கடந்த கோபத்துடன் முல்லாவிடம் சொல்லி வருத்தப்பட்டான். நியாயசபையில் முல்லா தனக்காக வாதாட வேண்டும் என்றான். முல்லாவும் ஒப்புக் கொண்டார். முடிவில் முல்லா சொன்ன வாதத்தைச் சபை ஏற்றது. மகனுக்கு எல்லாச் சொத்துக்களும் கிடைத்துவிட்டன. அப்படி முல்லா என்ன வாதிட்டார்? உயில்படி மகன் விரும்பும் ஏதாவது ஒரு சொத்தை அடிமை கொடுக்கக் கடமைப்பட்டவன் என்பதால் அந்த அடிமையைத் தனக்கு அடிமையாக வந்து விடும்படி மகன் கேட்டுக் கொள்வதாக அறிவித்தார். அராபிய வாழ்வியலில் அடிமையும் முதலாளியின் சொத்துதான் என்பதால் அந்த அடிமை, பணக்காரன் மகனுக்கு அடிமையானான். இப்போது அடிமையின் சகல சொத்துக்களும் மகனது கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டன. இந்தக் கதையை எடுத்துக்கொண்டு அடிமைத்தனம் சரியா? என்றெல்லாம் அசட்டுத்தனமாகச் சண்டை யிடக் கூடாது. ஒரு பிரச்சினையை வெவ்வேறு கோணத்தில் அணுகு வது அவசியம் என்கிற நுட்பத்தை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிச் சிந்திப்பவர்கள்தான் இன்றைய வெற்றியாளர் கள். உலகுக்கு மிகவும் அவசியமானவர்கள். எல்லோரிடமிருந்து மாற்றிச் சிந்திக்கும் வல்லமை மிக்கவர்களே இனி உலகின் போக்கைத் தீர்மானிக்கப் போகிறார்கள். இதற்கு நாமும் பழகிக் கொள்ள வேண்டும்.


ஒரு நீதிபதியிடம் ஒரு சிக்கலான வழக்கு வந்தது. ஒரே குதிரைக்கு இருவர் சொந்தம் கொண்டாடினார்கள். நடந்தது இதுதான். இரவு நேரத்தில் அரசர் மாறுவேடத்தில் ஒரு வியாபாரி போல குதிரை மீது வந்திருக்கிறார். ஒரு காலற்ற ஏழைப் பிச்சைக்காரன் வழியில் உதவி கேட்டிருக்கிறான். அரசர் காசு கொடுத்த பிறகும் தன்னைத் தான் குடியிருக்கும் இடத்தில் விட்டுச் செல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறான். இரக்கப்பட்டு அவன் சொன்ன இடத்துக்குக் குதிரையிலேயே அழைத்துப் போய் இடம் வந்ததும் இறங்கச் சொன்னால் அவன் மறுத்துவிட்டான். குதிரை தன்னுடையது என்று தகராறு செய்திருக்கிறான். அக்கம் பக்கமிருந்த மக்கள் அவனுடைய ஆள்கள் என்பதால் அவனுக்குச் சாதகமாகச் சண்டைக்கு வந்தனர். இரவோடு இரவாக நீதிபதி வீட்டுக் கதவைத் தட்டி நியாயம் கேட்டார்கள் எல்லோரும்.

இது இரவு நேரம். இங்கேயே குதிரையை விட்டு விட்டு இருவரும் போங்கள். காலை வந்ததும் தீர்ப்புச் சொல்கிறேன் என்றார் நீதிபதி. காலை வந்தபோது இருபது குதிரைகளுக்கு மத்தியில் இந்தக் குதிரையைக் கட்டி வைத்திருந்தார். ''யார் உரியவரோ கண்டுபிடித்து கூட்டிச் செல்லுங்கள்'' என்றார் நீதிபதி. ஆனால் வேடிக்கை இருவருமே குதிரையைக் கண்டுபிடித்து அருகில் போய்விட்டார்கள். என்றாலும் நீதிபதி வியாபாரி வேடத்தில் இருந்த அரசரைப் பார்த்து ''உங்கள் குதிரை அது.. அதை அழைத்துச் செல்லுங்கள்'' என்று தீர்ப்பளித்தார். ''இருவருமே குதிரையைக் கண்டுபிடித்துவிட்டோம் அப்படி இருந்தும் எப்படிச் சரியான தீர்ப்பளித்தீர்கள்'' என்று திகைத்தபடி கேட்டான் அரசன். ''நீங்கள் இருவருமே கண்டுபிடித்ததைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை. குதிரை யாரைக் கண்டு பிடிக்கிறது என்பதைத்தான் கவனித்தேன். நீங்கள் அருகே போன போதுதான் குதிரை அன்புடன் வாலை ஆட்டியது. உங்கள் முகத்தோடு முகத்தை தேயத்துக் கொண்டது'' என்றார் கெட்டிக்கார நீதிபதி. இப்படி யோசிக்கப் பலரும் முயலுவதே இல்லை.

நம்மில் பலர் பிரச்சினைகளை வெறுக்கிறோம். வாழ்வில் அவற்றைத் தவிர்க்கவே விரும்புகிறோம். வழியின்றி அவை நம்மோடு மோதும் போது சுக்கல் சுக்கலாக உடைந்து விடுகிறோம். அவ்வாறு அதற்குள் சிக்கி விட்டு வழி தெரியாமல் துன்பப்படுகிறோம். புதைந்து போகிறோம்.

ஆனால் புதுப்புது நண்பர்களைச் சந்திப்பது போல புதுப்புது உணவு விடுதிக்கு நுழைந்து புதுப் புது உணவு வகைகளை ஒரு கை பார்ப்பது போல புதுப் புது துணிமணிகளைத் தேடித் தேடி வாங்கி அணிவது போல புதுப்புது பிரச்சினைகளையும் கையாளப் பழகிக் கொள்வது அவசியம். அதற்குப் பிரச்சினைகளை வரவேற்கும் பழக்கத்தையும் சவால்களோடு சந்தோஷமாய்ப் பழகும் மனோபாவத்தையும் பெற வேண்டும் என்கிறேன். பிரச்சினைகளை வித்தியாசமான கோணத்தில் அணுகவும் மாற்றி யோசிக்கவும் தெரிய வேண்டும் என்றேன்.

சுகி. சிவம்



முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின் போது அரங்கேற்றப்பட்ட சிறுவர் நாடகம். (எ–555)

## யாழ். இந்து மாணவன் கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்



யாழ்.இந்துக் கல்லூரி தரம் 11 மாணவனான செல்வன் பிரகதீஸ்வரன் குணவரன், 2011 இற்கான ஆங்கில தின கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

# வாசிப்புக் கலாசாரம் மக்களிடையே அருகி வருவதால் உயர்மட்டச் சிந்தனை, மனித நேயம் குன்றி வருகின்றன

### முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

வடமராட்சி,டிசெ.23

வாசிப்புக் கலாசாரம் பொது மக்களிடையே அருகிக் கொண்டு வருவதால், உயர் மட்டச் சிந்தனையும் மனித நேயமும் அருகிக் கொண்டு வருகின்றன என முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், 'ஆறுதல்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் வாசிப்பு மாத நிறைவு நிகழ்வு நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுந்தரம் டிவகலாலா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் கற்றவர்களின் எண்ணிக்கை உயர்வாக இருந்ததால், உயர் பதவிகளில் கூட தமிழர்கள் அதிகம் இருந்தனர். அந்தப் பொற்காலம் இன்று எம்மிடமிருந்து விலகிப் போனமை துரதிஷ்டவசமானது.

அண்மைக்காலமாக இந்த மண்ணில் நடந்த யுத்த வடுக்களினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை, கல்வி, மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது கல்வியினால் உயர்ந்து நாடறிந்த கல்வியாளனாக விளங்கும் அனந்தராஜின் தலைமைத்துவத்தின் கீழ், வல்வெட்டித் துறை நகரம் வெகு விரைவில் கல்வி, கலாசாரம், பண்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றில் மேலோங்கி நிற்கும் என்ற நம்பிக்கை எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

அதற்கு முன்னோடியாகக் கற்றவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவேண்டும். என்னுடைய எஜமான்களாகிய உங்களிடம் நாங்கள் எதிர்பார்ப்பது நீங்கள் நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பு ஒன்றுதான் உங்கள் ஒவ்வொருவரையும் முழு மனிதர்களாக்கும்.

இங்கே உள்ள புத்தக அலுமாரிகளில் சேமிக்கப்பட்டிருக்கும் நூல்களில் இருக்கும், அறிஞர்கள் உங்கள் வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பார்கள். எனவே தினமும் எதையாவது வாசியுங்கள். வாசிப்புத்திறன் மேலோங்கும் போது உங்கள் வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தை உணர்வீர்கள்- என்றார். (எ–236)

## வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

**ஓவியப் போட்டி தரம் 9-11**

உ.ராம்கி-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி- முதலாமிடம், தோ.நிரோஜன்- யா/நாவாந்துறை றோ.க.த.க- இரண்டாமிடம், சி.அகல்யன்- யா/இந்து மகளிர் கல்லூரி- மூன்றாமிடம்.

**கவிதையாக்கம் தரம் 12-13**

சா.வி.கமிலஸ்-யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி- முதலாமிடம், க.துளசி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - இரண்டாமிடம், வ.ரிஷாந்தினி- யா/பெரியபுலம் ம.வி - மூன்றாமிடம்.

**ஓவியப் போட்டி தரம் 12-13**

தி.பார்த்தீபன்-யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி - முதலாமிடம், பி.பிருந்தாயினி- யா/இந்து மகளிர் கல்லூரி - இரண்டாமிடம், கு.நேருஜன்-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி - மூன்றாமிடம். *(முற்றும்)*

# மனமாற்றம், விடுதலைக்கான சிந்தனைகளையே யேசு கிறிஸ்து மக்களுக்குப் போதித்தார்

### பங்குத் தந்தை அருட்திரு வென்சிஸ்லோ

மதமாற்றமல்ல, மனமாற்றமே முக்கியம். யேசுகிறிஸ்து மனமாற்றம் பற்றியே போதித்தார். மக்களின் மகிழ்ச்சியான வாழ்வுக்கும் விடுதலைக்குமான சிந்தனைகளையே கூறினார் என திருநெல்வேலி பங்குத்தந்தை அருட்திரு வென்சிஸ்லோ அடிகளார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் கிறிஸ்மஸ் தினத்தையொட்டி ஒளிவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை, பிரதேச செயலக மண்டபத்தில் உதவி பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வென்சிஸ்லோ அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் அரசியல் சமூக பொருளாதாரத்தில் நலிவடைந்த சமூகமாகிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழலில் இயேசுக் கிறிஸ்துவின் போதனைகள் மூலம் உயர்வான நிலையை எட்ட முடியும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக இது போன்ற விழாக்களைக் கொண்டாடுகின்றோம்.

யுத்தத்தினால் அழிவுகளைச் சந்தித்த நிலையில் இன்னும் ஒரு அழிவாக எமது கலாசாரம் பண்பாடு, மரபுகள் அழிவடைந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சீரழிவுகளுக்குள் இளஞ் சமுதாயம் இழுத்துச் செல்லப்படுகின்றது. இது தமிழ்ச்சமுதாயத்திற்கு பெரிய பேரழிவாகும்.

மதங்கள் காட்டும் நல்வழிகளூடாக மனங்களை மாற்றிக் கொண்டு உயர்ந்த நிலைக்குச் செல்லும் போது தான் நாங்கள் இறைவனைச் சந்திக்கின்றோம். பண்பே இறைவன்; இதுவே கடவுளாகும். நமது வாழ்வுக்கு முழுமையான அன்பு செய்கிறார் இறைவன். இதன் வெளிப்பாடாகவே இறைவன் தனது திருமகனை உலகிற்கு அனுப்பினார். அவரூடாக மனித குலம் இறைவனின் அன்பைச் சுவைத்தது.

ஆண்டவர் யேசுகிறிஸ்து எல்லோருக்கும் உரியவர். அயலவனை அன்பு செய் ஆண்டவனைக் காண்பாய் என்கிறது பைபிள். இந்த உயரிய தத்துவங்களைக் கூறி மனிதனை நல்வழிப்படுத்தும் சமயங்களின் நெறிகளைக் கடைப்பிடித்து சிறந்த மனிதர்களாக வாழ எமது தலைமுறையினர் முன்வர வேண்டும் - என்றார். (எ-7)

## நிர்வாக சேவைக்கு 38 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.23

இலங்கை நிர்வாக சேவைக்கு மேலும் 38 பேர் தெரிவாகியுள்ளனர். இவர்களுள் ஆறு தமிழர்களும் ஒரு முஸ்லிமும் அடங்குவர்.

இவர்களுக்கான நியமனம் ஜனவரி இரண்டாம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

மேலதிக தகவல்களை இலங்கைபொது நிர்வாக ஆணைக் குழுவின் இணைய தளத்தில் பார்வையிட முடியும். (எ–207)

# சமய விழுமியங்களைக் கடந்து செல்வதால் சமூகச் சீரழிவுகள் அதிகரித்துச் செல்கின்றன

### சைவப்பரப்புரையாளர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தெரிவிப்பு

சமய விழுமியங்களைக் கடந்து ஏனோ தானோ என எமது வாழ்வை நடத்திக் கொண்டிருப்பதால் தான், சமூகச் சீரழிவுகள் அதிகரித்துக் கொண்டு போகின்றன. இத்தகைய சீரழிவுகள் தொடர்ந்து இடம்பெற்றால் சமய விழுமியங்கள் மறைந்து, சீரழிவான சமுதாயம் உருவாகத் தொடங்கி விடும் என சைவ பரிபாலன சபையின் சைவப் பரப்புரையாளர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 132 ஆவது குருபூசை தினம் அண்மையில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

சைவசமயத்தையும் தமிழையும் அழியவிடாது பாதுகாத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைச் சாரும். அவர் தனது எழுத்துக்களாலும் தொண்டுகளாலும் அளப்பெரும் சேவையாற்றியுள்ளார்.

நாவலர் பெருமான் கூறிய விடயங்களை நாம் கருத்தில் கொண்டு அதன் வழி எமது செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமய உணர்வுகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தற்போது இளம் சமுதாயம் சமய விழுமியங்களைப் பின்பற்றுவது கிடையாது. சமய ஆச்சாரங்களை மறந்து நாகரிக உலகுக்கு தம்மைக் கொண்டு சென்று விட்டனர்.

இதனால் தூய்மையற்ற மனத்துடன் மனம் போகும் வழியில் தமது ஒவ்வொரு காரியங்களையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதுவே அவர்கள் தம்மை சீரழிக்கும் பாதைக்குக் கொண்டு செல்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

எனவே பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் மத்தியில் சமய விழுமியப் பண்புகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

அவற்றை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்றும் அவற்றின் பெருமைகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறவேண்டும்.

நாவலர் பெருமான் போன்ற பெரியோர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்ற வழிகாட்ட வேண்டும் - என்றார். (எ-313)

## குருதிக் கொடை நிகழ்வு

தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் குருதிக் கொடை நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெருமளவு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டு குருதிகளை வழங்கினர். யாழ்.போதனா வைத்திய சாலை குருதி வங்கியினர் இந்த நிகழ்வில் குருதிகளை பெற்றுக் கொண்டனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வருடாந்தம் டிசெம்பர் மாதத்தில் குருதிக் கொடை செய்வது குறிப்பிடத்தக்கது. (எ–207)

# பிள்ளைகளையும் கொஞ்சம் கவனியுங்கள்

காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சுதான் என்றொரு பழமொழி இருக்குது பாருங்கோ. இந்தப் பழமொழிக்கு ஏற்ற மாதிரி ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்கிறார்கள். அதனால்தான்-அதாவது பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் இடம் கொடுக்கும் போதுதான் சமூகத்தில் பிரச்சினைகளுக்கு பிள்ளைகள் முகம் கொடுக்கிறார்கள்.

பிள்ளை சரியான குழப்படி என்று பெற்றோரிடம் தெரிவித்தால், பெற்றோர்கள் ''இல்லை எங்கட பிள்ளை அப்படி இல்லை, ஒரு குழப்படியும் செய்யமாட்டான். அமைதியானவன்'' என்று சொல்லி தமது பிள்ளைகள் மேலும் பல குற்றங்கள் புரிவதற்கு அவர்களே காரணமாகிறார்கள். பிள்ளை படிக்கப் போகின்றது என நினைத்து பெற்றோர்கள் கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கிறார்கள்.

ஆனால் இதில் எத்தனை பிள்ளைகள் உண்மையாகவே படிக்கிறார்கள் என்று பார்த்தால், இல்லை என்ற பதிலைத்தான் காணமுடிகிறது. படிப்பைத் தவிர வேறு பல விடயங்களிலும் அவர்களின் புலன்கள் செல்கின்றன. பெற்றோர்கள் அனைவரும் பிள்ளைகள் படிக்கிற பாடசாலைக்கோ அல்லது ரியூசனுக்கோ அடிக்கடி செல்லா விட்டாலும் இடைக்கிடை சென்று தமது பிள்ளைகளைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியும்.

முழுக்க முழுக்க ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கவனிப்பார்கள் என்று விட்டுவிட முடியாது. பிள்ளைகள் பாடசாலைக்கு, ரியூசனுக்கு சென்று படித்து விட்டு வெளியேவரும் மட்டும்தான் பிள்ளைகளை ஆசிரியர்கள் கவனிப்பார்கள். வெளியே வந்துவிட்டால் பிள்ளைகளை ஆசிரியர்கள் கவனிக்க வேண்டிய தேவையில்லை. பெற்றோர்கள்தான் கவனிக்க வேண்டும். என்ன சண்முகம் பிள்ளைகள் பெற்றோர்கள் என கதைவிடுகுது என்று பார்க்கிறியளா?

கடந்த திங்கட்கிழமை காலை 7 மணி இருக்கும் யாழ்.நகர்ப்பகுதியில் உள்ள ரியூசன் ஒன்றுக்கு பெடியள், பெட்டைகள் பறந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் வழிந்த வியர்வைத் துளிகள் முகத்தில் பூசிய பவுடரினை கரைத்துக் கொண்டிருந்தது.

ஒரு கையால் முகத்தில் வழியும் வியர்வையினை துடைத்துக் கொண்டும் மறுகையில் 4 கொப்பியை வைத்துக் கொண்டும் ரியூசன் நோக்கிப் பறந்து கொண்டிருந்தார்கள். தூர இடங்களில் இருப்பவர்கள் பஸ்களில் வந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் சைக்கிளில் பலர், மோட்டார் சைக்கிளில் சிலர் வந்து கொண்டிருந்தார்கள்.

அவசர அவசரமாக வந்து கொண்டிருந்தவர்களில் ஒரு சில இளைஞர்கள் ஒரு தேநீர் கடைப்பக்கம் ஒதுங்கினார்கள். அந்த தேநீர்க் கடையில் சிகரெட்டினை வாங்கி ஒவ்வொருவரும் வாயில் பற்ற வைத்து கொண்டு அவர்களுக்குள் ஏதோ கதைத்து சிரித்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் கையிலும் கொப்பிகள் காணப்பட்டன.

ஒரு சில நிமிடங்கள் கழித்து அந்த இளைஞர்கள் ரியூசனுக்கு வரும் யுவதிகளைப் பார்த்து ரூமுக்கு வாறியா.... ரூமுக்கு வாறியா என்று கூவிக் கொண்டிருந்தார்கள். ஏதோ பழம் விற்பவர் போல அதே வார்த்தையை ரியூசனுக்கு அவசர அவசரமாக வரும் யுவதிகளைப் பார்த்து கூவிக் கொண்டிருந்தார்கள்.

பாவம் அந்தத் தேநீர் கடைக்காரர் ஏதாவது பேசினால் அவ்வளவுதான் அவர் பிழைப்பில் மண் விழுந்து விடும் என்று நினைத்திருப்பார் போலும். அதுதான் பேசாமல் தனது வேலையைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

ரியூசனுக்கு வருகின்ற யுவதிகளில் சிலர் புன்னகையுடனும், சிலர் அந்த இளைஞர்களை முறைத்துப் பார்த்துக் கொண்டும் வந்து கொண்டிருந்தார்கள். ரியூசனுக்கு வந்த இளைஞர்களும், யுவதிகளும் உள்ளே சென்று விட்டார்கள்.

ஆனால் தேநீர் கடையில் ஒதுங்கின சில இளைஞர்கள் மட்டும் ரியூசனுக்குப் போகாமல் அங்கேயே ஒதுங்கி விட்டார்கள்.

சில நிமிடங்கள் கழித்து அந்த இளைஞர்கள் ரியூசனுக்குப் போகாமல் யாழ். நகர்ப் பக்கம் நடந்து சென்றார்கள். ஒரு சில மணித்தியாலம் கழித்து வகுப்பு முடிந்து இளைஞர்களும், யுவதிகளும் ரியூசனை விட்டு வெளியே வருகிறார்கள்.

மீண்டும் அதே தேநீர்க் கடை முன்னால் அதே இளைஞர்கள். வகுப்பு முடிந்து வரும் யுவதிகளைப் பார்த்து ''ரூமுக்கு வாறியா.. ரூமுக்கு வாறியா..'' என கூவிக் கொண்டிருந்தார்கள். பல யுவதிகள் பயத்தினால் ஒதுங்கி அந்தத் தேநீர் கடையைத் தாண்டி நகர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். சில யுவதிகள் அந்த இளைஞர்களைப் பார்த்துப் புன்னகையுடன் சென்றார்கள்.




ஆனால் அந்த இளைஞர்கள் புன்னகையை காட்டிச் செல்லும் யுவதிகளை விட்டு விட்டு பயத்தில் ஒதுங்கி தலையைக் குனிந்து செல்லும் யுவதிகளைப் பார்த்துத்தான் கூவுகிறார்கள். யுவதிகள் அந்த இடத்தைத் தாண்டி நகர்ந்து சென்று கொண்டிருக்கும்போது அவர்கள் பின்னே அந்த இளைஞர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

இவர்களும் இந்த வகுப்பு முடிந்து செல்கிறார்கள். இவர்களின் பெற்றோர்கள் இவர்கள் என்ன படித்தார்கள் என்று கொப்பியைப் பார்க்கவா போகிறார்கள்! அப்படிப் பார்த்தால் இப்படி தேநீர்க் கடையின் முன்னால் நிற்பார்களா?

அதனால்தான் இந்த இளைஞர்கள் தமது பெற்றோர்களைப் பேய்க்காட்டியும் தமது வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கியும் கொண்டிருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக அந்த ரியூசனில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரைத் தொடர்பு கொண்டு போனில் கேட்ட போது அவரோ ''இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. பொலிஸூக்குச் சொல்லிப் பார்த்தும் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படவில்லை.. அவர்களால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒருவரும் தட்டிக் கேட்க முடியாமல் போனதால்தான் இப்படிப்பட்ட இளைஞர்களின் அட்டகாசம் குறைந்தபாடில்லை. கூடிக்கொண்டே போகிறது. இதில் ஓர் இளைஞனின் பெற்றோர் மாடு வளர்த்து பால் விற்று அதில் வரும் பணத்தினைக் கொண்டுதான் படிக்க அனுப்புகிறார்கள். ஆனால் அவனோ வகுப்பு என்று சொல்லி விட்டு இப்படி றோட்டில் நின்று சேட்டை செய்கிறான். இவனை என்ன செய்ய முடியும். என்னால் இவனின் பெற்றோர்களைக் கூப்பிட்டு இவனைப் பற்றி சொல்லுவம் என்று நினைத்துப் பெற்றோரைக் கூப்பிட்டால் அவர்களும் வரமறுக்கிறார்கள். பெற்றோர் வந்தால் இந்த இளைஞனைப் பற்றிச் சொல்லி, திருத்த முடியும். வேறு என்ன செய்ய முடியும்? என்றார்.

இப்படிப்பட்ட இளைஞர்களின் எதிர்காலம் படுபயங்கரமாக இருக்கப் போகிறது என்றார். பார்த்தியளா பிள்ளை படிக்கப் போகுது என்று பார்த்தால் றோட்டில எல்லோ நிற்குது. பெற்றோர்கள் ஆகிய நீங்கள் கவனம் எடுத்தால் மட்டுமே இந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்தை சிறந்ததாக மாற்ற முடியும்.

வவுனியாவில் மருத்துவ உதவியாளர் வெற்றிடம்

வவுனியாவில் உள்ள பிரபல தனியார் மருத்துவ நிலையத்துக்கு பார்மசி உதவியாளர் (Pharmacy helpers), கண்ணாடி தொழில்நுட்பவியலாளர் (Eye Technician) தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர் தேவை.

தொடர்பு: 0777588729

## உதவிப் பணம் பெறும் காலம் நீடிப்பு

தென்மராட்சி, டிசெ.23

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான நிலுவைத் தொகை பெறுவதற்குரிய காலம் 25 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தால் இந்த வருடம் புதிதாக இணைக்கப்பட்டோர் உட்பட 3 ஆயிரத்து 440 பேருக்குக் கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் அகரிக்கப்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பண நிலுவைகள் அஞ்சல் அலுவலகங்களுக்கு கடந்த ஐந்தாம் திகதி பிரதேச சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டது கடந்த 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலுவைத் தொகையை சிலர் இன்னும் பெற்றுக் கொள்ளாததால் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ம-207)

## சீருடைத் துணிகள் அடுத்த வாரம் வரும்

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக்கான துணிகள் அடுத்த வாரத்தில் இங்கே எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன. வழமையாக வருட இறுதி விடுமுறையிலேயே மாணவர்களுக்கான இலவச சீருடை மற்றும் பாடநூல்கள் வழங்கப்படுவது வழக்கம்.

இந்தமுறை இலவச பாட நூல்கள் மட்டுமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. சீருடைகள் வந்து சேரவில்லை. இந்த சீருடைத் துணிகள் அடுத்த வாரத்தில் இங்கே எடுத்து வரப்பட்டாலும்கூட அவை பாடசாலை ஆரம்பித்த பின்னரே மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......

★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 30 ஆயிரம் ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒருவருட உத்தரவாதத்துடன் அழகிய கைத் தொலைபேசி ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை 21.12.2011 முதல் 31.12.2011 வரை மட்டுமே)

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR
No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
(மலாயன் கபே முன்பாக)
T.P: 021 222 9399

## மரண அறிவித்தல்

### பொன்னையா பத்மநாதன்

நுணாவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன்21.12.2011 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சுகந்தினியின் பாசமிகு கணவரும், பைரவி, வாதுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா- நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமி (டென்மார்க்), காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் சண்முகநாதன், கையிலைநாதன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சிற்சபேசன் மற்றும் மனோரஜனி, சவுந்தரரஜனி, நடனசபேசன், ஞானசபேசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.12.2011) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

''லாவண்யம்''
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
T.P.00492235461435

தகவல்:
மனோரஜனி (மைத்துனி)
கிரியோன் கூல்பார்.
(7880)(6-9-8)

# மலேசிய விமான நிலையத்தில் இனி தமிழிலும் அறிவிப்புகள்

மலேசிய சர்வதேச விமான நிலையத்தில் தமிழில் அறிவிப்புக்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக மலேசிய போக்குவரத்துத் துறை அமைச்சர் காங்ஷோஹா தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் அனைத்து சமூக மக்களும் வசித்து வருவதால் அவர்களின் தரம் குறித்த விழிப்புணர்வை அனைவரிடமும் ஏற்படுத்த இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தமிழில் அறிவிப்புக்கள் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வருவதாகவும் காங்ஷோஹா தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் வசிக்கும் 27 மில்லியன் மக்களில் 8 சதவீதத்தினர் தமிழர்களாக உள்ளனர். மேலும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பலரும் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இங்கு பணிபுரிபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக உள்ளனர். சென்னை உட்பட இந்திய நகரங்களில் இருந்து வருபவர்களுக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்திற்காக பொதுமக்களின் கோரிக்கைகளின் பேரில் தமிழில் அறிவிப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் மலேசியா போக்குவரத்துத் துறை அமைச்சர் காங்ஷோஹா தெரிவித்துள்ளார். (வ)

# மனித மனதை வாசிக்கும் யந்திரம் விரைவில் வருகிறது

நியூயோர்க், டிசெ.23

மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்கான இயந்திரம் ஒன்று விரைவிலேயே கண்டுபிடிக்கப்பட்டுவிடலாம் என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளார்கள்.

இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் மனித மனதை வாசிப்பது மட்டுமல்ல அவர்கள் எவருடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கண்டுபிடித்துவிடலாம். இது தொடர்பான ஆராய்ச்சிக்கு உதவிவரும் நியூயோர்க்கிலுள்ள ஒரு நிறுவனம் 2017 ஆம் ஆண்டளவில் இந்த இயந்திரம் செயல்பட ஆரம்பிக்கும் என்று எதிர்வு கூறியுள்ளது.

விண்ணில் பறப்பது, நடப்பது, வேற்றுக் கிரகங்களுக்குச் செல்வது எல்லாம் ஒரு காலத்தில் வெறும் கற்பனையாகவே இருந்தது. இன்று அவைகளை நடைமுறையில் நிதர்சனமாகப் பார்க்கின்றோம். அதேவிதமாக மற்றவர் மனதை வாசிக்கும் கருவியும் வெறும் கற்பனையாகவே இருந்து வந்துள்ளது.

மனித மூளையை கணினியுடன் இணைப்பது, அல்லது கைத்தொலைபேசியுடன் இணைப்பது தொடர்பாக ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகளே மனித மனதை வாசிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (ப)

# கொடுப்பனவைப் பெறாதோர் கவனத்துக்கு

கோப்பாய், டிசெ.23

புனர்வாழ்வு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு வலி-கிழக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மீள்குடியேறியவர்களில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் கொடுப்பனவை இதுவரையும் பெற்றுக்கொள்ள முடியும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை எதிர் வரும் 27 ஆம்திகதி காலை 9மணிக்கு குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் புனர்வாழ்வு முகாமி லிருந்து விடுவிக்கப்பட்ட மைக்கான விடுவிப்பு அத்தாட்சிக் கடிதம் ஆகிய ஆவணங்களுடன் வலி-கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு நேரடியாக சமுகம் தந்து மேற்படி உதவிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை தத்தமது கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-ரி)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகசட்டமாணி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை நடைபெறும்.

கடந்த 6 வருடங்களாக கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெள்ளவத்தையில் இந்தக் கருத்தரங்கை நடத்தி வரும் சட்டத் தரணியுடன் இணைந்து இலங்கைத் திறந்த பல்கலைக் கழக சட்டமாணிப் பட்டதாரி யான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் கலந்து கொள்ளும் மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு- இரண்டாவது தடவையாக நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, குமார சுவாமி மண்டபத்தில் காலை 8மணி முதல் மாலை4.30 மணி வரைநடைபெறவுள்ளது.



நல்லூர் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஒளிவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் ஆ. சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது. திருநெல்வேலிப் பங்குத்தந்தை அருட்திரு. வென்சிஸ்லோஸ் அடிகளார் உரையாற்றுகிறார். யாழ். சென். பெனடிற் வித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வு இடம்பெறுகின்றது. (7)

## ஒரு லட்சம் போதை வில்லைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிச.23

வெளிநாடொன்றுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த நச்சுத்தன்மை கொண்ட ஒருலட்சம் போதை வில்லைகளைக் கைப்பற்றியுள்ள கண்டி பொலிஸார் சந்தேக நபரொருவரையும் கைது செய்துள்ளனர்.

கண்டி தவுலகல ஹேந்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த வில்லைகள் கைப்பற்றப்பட்டதுடன், இவற்றை மிக இரகசியமாக கொண்டு சென்ற நபரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த வில்லைகளின் ஒரு தொகுதி அரச இரசாயனப் பகுப் பாய்வாளருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் பொலிஸார் தீவிர கண்காணிப் பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட அஞ்சல் அலுவலகங்களில் தபால் நேரத்தை மாற்றுமாறு கோரிக்கை

யாழ்.மாவட்டத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள தபால் சேகரிக்கும் நேரத்தை முன்னரைப்போன்று பிற்பகல் வேளைக்கு மாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தபால்கள் அனுப்புவதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக பிற்பகல் 2.30 மணியில் இருந்து மாலை 4 மணிவரை உள்ள தபால் எடுக்கும் நேரத்தை பிற்பகல் ஒரு மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணியாகக் குறைக்கப்பட்டது.

தற்போது நாட்டு நிலைமை சீரடைந்து வருவதையிட்டு இந்த நேரத்தை முன்பு காணப்பட்ட நேரத்துக்கு மாற்றுமாறு தமது கோரிக்கையில் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதுள்ள நேரசூசியின் பிரகாரம் தபால் விநியோகத்துக்குச் செல்லும் தபால் ஊழியர் விநியோகம் முடிந்ததும் பெட்டிகளில் உள்ள தபால் களை எடுத்துச் செல்கின்றனர்.

முற்பகல்11 மணிக்கு முன்னர் தபால் எடுக்கப்பட்டு விடுவதால் அதன் பின்னர் தபால் போட வருவோர் தபால் நிலையங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். வாகனங்களில் அனுப்பப்படும் தபால்களுக்காக முற்கூட்டியே எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றதை வரவேற்கும் மக்கள் தபால் பெட்டியில் தபால்கள் எடுக்கும் நேரத்தை மாற்றியமைத்து இரு தடவைகள்தபால் எடுக்கமுடியாதா என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (வ-207)

## திருவாசகம் முற்றோதல்ஆரம்பம்

சுழிபுரம், டிசெ.23

திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்வு சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 7மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வருடம் தோறும் ஆலய பரிபாலன சபையினர் இதனை நடத்தி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (வ-28)

## மூளாய் ஐக்கிய சகாய சங்கத்தில் கடன் செலுத்தாதோர் கவனத்துக்கு

சுழிபுரம், டிசெ. 22

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தில் குறித்த கால எல்லைக்குள் கடன் செலுத்தத் தவறிய மூவர் எடுத்த கடன் தொகையை வடமாகாண உதவி கூட்டுறவு ஆணையாளர் அனுசரணையுடன் செலுத்துமாறு மூவருக்கும் மேற்படி சங்கத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மூவரும் ஈட்டுக் கடனாக ரூபா 60000 ஐ பெற்றுள்ளனர். அந்தக் கடிதத்தில் பணத்தைச் செலுத்த ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மூவரின் செயற்பாட்டால் மேற்கொண்டு கடன் வழங்கும் திட்டத்தை மேற்படி சங்க நிர்வாகத்தினர் நிறுத்தியுள்ளனர்.

இந்த மூவரும் சாதகமாக நடந்துகொண்டால் அங்கத்தவர்களுக்கு கடன் மேலும் வழங்கலாம் என்பதை கூட்டுறவு ஆணையாளருக்கு நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (வ-28)

# திருநெல்வேலியில் ஒரே இரவில் மூன்று ஆலயங்களில் திருட்டு

கோப்பாய்,டிசெ.23

திருநெல்வேலிப் பகுதியில் ஒரேஇரவில்மூன்று ஆலயங்களில் தொடர் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த திங்கட்கிழமை இரவு திருநெல்வேலி சிவகாமி அம்மன் ஆலயத்தில் அம்மனின் தங்க நகை மற்றும் ஒலி பெருக்கிச் சாதனங்களும் திருடப்பட்டுள்ளதுடன் உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் சூறையாடப்பட்டுள்ளது.

இதேவேளை கேணியடி ஞான வைரவர் ஆலய உண்டியல் காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கலாசாலை வீதியில் அமைந்துள்ள சிறிய ஆலயமான குட்டிப் பிள்ளையார் ஆலய உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சில தினங்களாக ஓட்டோ வாகனங்களில் சந்தேகத்துக்கிடமாக சிலர் நடமாடியதாகவும் இவர்களுக்கும் மேற்படி சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இருந்த போதும் இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லையென்று மேலும் தெரிய வருகின்றது. (வ-ரி)

## மெனிங் மரக்கறிச் சந்தையை பேலியகொடைக்கு மாற்றப்படும்

புறக்கோட்டை மரக்கறி மொத்த விற்பனை நிலையமான மெனிங் சந்தையை பேலியகொடைக்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு மொத்த விற்பனை நிலையக் கட்டடமும் பேலியகொடைக்கு நகர்த்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# இளைஞர் கழகப் பதிவுகள் ஜன. 20 இல் நிறைவுறும்

நாவற்குழி, டிசெ.23

இளைஞர் கழகங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஜனவரி 20 ஆம் திகதியுடன் நிறைவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேசசெயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரிகள் புதிய பதிவுகளை மேற்கொள்ள உள்ளனர்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள இளைஞர் கழகங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# பக்தனுக்கு அற்புதக் காட்சி கொடுத்து அருளிய சண்டிலிப்பாயில் வீற்றிருக்கும் சீரணி அம்மன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சண்டிலிப்பாய் சீரணி அம்மனின் அற்புதகாட்சி ஒன்று இடம்பெற்றது. 1896 ஆம் ஆண்டு சித்திரை மாதப் பௌர்ணமி தினத்தன்று இரவு எம் பெருமாட்டி அருள்வள்ளலாகிய பெருமாளோடும் பாலசுப்பிரமணியத்தோடும் சோமஸ்கந்த மூர்த்தி வடிவில் முருகேசுப் பிள்ளையின் கனவில் தோன்றினாள்.

''உனக்குச் சொன்னவைகளை நீ உண்மையென்று சிந்தித்தாய் இல்லை. அதன் உண்மையை உனக்குக் காட்டுவோம்''


''அதோ தோன்றுகின்ற தென்னை மரத்தில் சில இளநீர் பறித்து வந்து தா'' என்று கூறியருளினார்.

பக்தனாகிய முருகேசுப்பிள்ளைக்கு அந்தத் தென்னைமரம் ஒரு முதிர்ந்த வரண்ட படுமரமாகத் தோன்றியது. அதை உணர்ந்து ''அதில்தான் குரும்பைகள் இல்லையே நான் எப்படி உமக்கு இளநீர் தர முடியும்'' என்றார்.

அதற்கு அம்மையார் ''நீ சென்று சமீபத்தில்பார் வேண்டிய குலைகள் தோன்றும்'' என்று கூறினார். அவ்வாறே முருகேசுப் பிள்ளையும் மரத்தின் அருகே சென்றபோது மரத்தில் இளநீர்க்குலைகள் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார்.

ஆச்சரியமடைந்த முருகேசுப் பிள்ளை அம்மை கேட்டதற்கிணங்க வியப்புடனும் அச்சத்துடனும் சில குரும்பைகளைப் பறித்துக் கொண்டு வந்து கொடுத்தார்.

அங்கு காட்சி கொடுத்திருந்த மூவரும் அதிக தாகம் கொண்டவர்கள்



போல் ஆசையுடன் அந்த இளநீரைப் பருகினர்.

''தாகத்தை மூவரும் தீர்த்துக்கொண்ட பின்னர் ''அன்பனே! அந்த இடத்தைத் தோண்டிப்பார்; அதில் ஒரு சிலை தோன்றும். அதனை மூலமாக வைத்து ஒரு கொட்டகை அமைத்து வழிபடுவாயாக! சில காலத்தின் பின்னர் பக்தர்கள் பல திசைகளில் இருந்தும் வருகை தந்து வழிபாடுகளை மேற்கொள்வார்கள்.

''அத்துடன் தொண்டர்களாக மாறி பல தொண்டுகளைச் செய்வார்கள். பூசைக்குத் தேவையான திரவியங்களைக் காணிக்கையாக இடுவார்கள். அதன் மூலம் உனது பணிகளைச் செய்யலாம்'' என்றார் அம்மை.

''பூசைகள் பூர்த்தியாகும்போது உனது மனம் புனிதமுறும் வண்ணம் ஓர் மந்திர உபதேசம் செய்வோம்'' எனக் கூறி மந்திர உபதேசமும் கூறி மூவரும் மறைந்தனர்.

எம்பெருமாட்டியின் பெருங் கருணையை நினைத்து பக்தர் முருகேசுப்பிள்ளை மனம் குளிர்ந்து பெருமிதம் கொண்டார்.

அதன்படி குறிப்பிட்ட இடத்தை மறுநாள் அகழ்ந்து பார்த்தார் முருகேசுப் பிள்ளை. அந்த இடத்தில் ஒரு விம்ப வடிவில் அமைந்த சிலை காணப் பட்டது. இனி எல்லாம் ஈஸ்வரியின் செயலால் இனிதாகும் எனும் நம்பிக்கையுடன் ஒரு மண்டபத்தை அமைப்பதற்குத் தீர்மானித்துக் கொண்டார்.

1896ஆம் ஆண்டு ஆடி மாதம் திங்கட் கிழமை அமாவாசை கூடிய புண்ணிய தினத்தில் மண்டபத்தை அமைத்து பூசையை ஆரம்பித்து, தொடர்ந்து தவறாது பக்தி சிரத்தையோடு பூசை செய்து வந்தார்.

அதன் பிரகாரம் அம்மன் அருளிய வார்த்தைக்கு இணங்க ஆலய மண்டபத்துக்கு நான்கு திசைகளில் இருந்தும் அடியார்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வரத் தொடங்கினார்கள்.

## சோபனா

பக்தர்களின் கூட்டத்தால் ஆலயத்தில், பூசைகள் இடைவிடாது இடம் பெறச் சாதகமாக அமைந்தது. நாக பூசணியம்மையை வழிபட்ட பக்தர் களில் அதிகமானோர் குட்டம், காசம், ஈளை முதலான கன்ம நோய்களை வருந்தியவர்களாகத் தமது நோயைப் போக்குவதற்கு தேவியை வழிபடத் தொடங்கினர்.

அத்துடன் நாக சாபத்தினால் நீண்ட காலம் பிள்ளைப் பேறில்லாதவர்களும் இந்த ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாடுகளை நிறைவேற்றி பிள்ளைச் செல்வத்தைப் பெற்றுக்கொண்டனர்.

(முற்றும்)

ஏன்றுமே தீராத நினைவுகளுடன்
3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சிவசுந்தரலிங்கம்
கெங்காதரன்
(Staff, ICRC, Jaffna)
தோற்றம்: 1963.06.07
மறைவு: 2008.12.23
ஆண்டு மூன்று ஆனாலும் உங்கள் நினைவுகள்
எங்களுடனேயே சங்கமித்துக் கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(சி/7107)6-7-8)
குடும்பத்தினர்

தேவை
அலுவலக உதவியாளர்
எமது நிறுவனத்திற்கு க.பொ.த உயர்தரம் அல்லது சாதாரணதரம் தகைமையுடைய, ஆங்கிலம் சரளமாக எழுத, வாசிக்க, கதைக்க தெரிந்த 30 வயதிற்கு குறைந்த ஆண் , பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையோர் 28/12/2011 அன்று காலை 10 மணி முதல் 2 மணிவரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு தகுதிச் சான்றிதழுடன் கீழ்க்காணும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில்)
தொ.பே :- 021 222 8060

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17 . 04 . 1935
விண்ணில் 23 . 12 . 2010
திருமதி
மேரி யோசப்பின்
பங்கிறேஷல்
பிறப்பு உண்டேல்
இறப்பு நியதியாகும்
உம் பிரிவென்பது
எமக்கு பெருமிழப்பு
இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவரின் ஆத்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை கொடுத்தருள வேண்டுமென்று எல்லாம் வல்ல திவ்விய யேசுவை வேண்டுவோமாக.
கணவர், பிள்ளைகள்,
255/1.ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.
(11872)(3.6.9)

அனுமதிகள் 26.12.2011
2.00 - 5.00 மணிவரை
Children's World
Centre for Child Development
Pre School ஆங்கில மொழி பாலர் பாடசாலை
சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் தேசிய கொள்கைக்கு அமைவானது
(கடந்த 3 வருடங்களாக யாழ் நகரில் இயங்கி வந்த எமது பாடசாலை தற்போது K.K.S வீதி கோண்டாவில் மேற்கு உபதபாலகம் அருகில் அமைந்துள்ளது.)
Language Development
Knowledge Development
Skill Devlopment
Values Development
Speach & Drama Class.
அனுமதிகள் 2 1/2 வயது முதல்
Open The Door To Your Child's Future
ஆரம்பம்
04.01.2012
K.K.S வீதி கோண்டாவில் மேற்கு
[உபதபாலகம் அருகில்]
கடந்த வருடம் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் அனைவரும் பிரபல பாடசாலைகளில் தரம் 01 அனுமதி பெற்றுள்ளனர்.
முன் அனுமதிக்கு
0777729525 ,0774685174

# மோசடியில் ஈடுபட்டோருக்கு பரீட்சை எழுதுவதற்குத் தடை

## அநுர எதிரிசிங்க தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.23

இந்த ஆண்டுக்கான ஜி.சீ.ஈ சாதாரணத்தரப் பரீட்சைகளின்போது பரீட்சை மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 15 மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு தடை விதிக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சைக் கண்காணிப்பாளர்கள் நால்வர் மற்றும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகள் நால்வர் ஆகியோருக்கும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



# கண்டி பரீட்சை நிலையத்தில் வைத்து மாணவர் தாக்கப்பட்டு காயம்

2கொழும்பு, டிசெ.23

கண்டி, பிலிமத்தலாவ பகுதியில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சென்ற மாணவரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மற்றுமொரு மாணவர் கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் பாடசாலை வளாகத்திற்குள்ளேயே இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலை நடத்திய மாணவன் தப்பிச்சென்ற வேளையில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதுண்டு காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இரு மாணவர்களுக்கும் கடுகண்ணாவை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு பின்னர், பொலிஸாரின் பாதுகாப்புடன் பரீட்சை எழுதுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# மருதானைப் பகுதியில் வர்த்தகரை மிரட்டி கப்பம் கோரியவர்களுக்கு விளக்கமறியல்

## சூத்திரதாரி வெலிக்கடை சிறைக்குள்

கொழும்பு, டிசெ.23

மருதானைப் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி சுமார் 10 லட்சம் ரூபாவை கப்பமாகப் பெறுவதற்கு முயன்றனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மருதானை பொலிஸாரால் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த வர்த்தகருடன் சந்தேகநபர்கள் தொலைபேசியூடாகத் தொடர்பினை ஏற்படுத்தி, அவரை கொலைசெய்யப்போவதாக அச்சுறுத்தி, கப்பம் கோரியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டதை அடுத்து, அவர்களை எதிர்வரும் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர், அங்கிருந்தபடியே சந்தேகநபர்களை, கப்பம் கோரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வந்துள்ளமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மருதானைப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# பகிடிவதைக்கு உள்ளாகிய மாணவி வைத்தியசாலையில்

கொழும்பு,டிசெ.23

றுஹுணு பல்கலைக் கழகத்தில் மானிடவியல் பீட முதல் வருட மாணவி ஒருவர் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டிச்சாலையில் வைத்து பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவி காயத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த மாணவி மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பக்கப்பட்டுள்ளதாக றுஹுணு பல்கலைக்கழக துணைவேந்தர் சுசிரின் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (ச)

நத்தார் பண்டிகைக் காலங்களில் (25.12.2011-01.01.2012)
திருமுருகனுடன் இணைந்து விசேட விலைக்கழிவுகளையும், பரிசில் பொருட்களையும் அள்ளிச் செல்லுங்கள்
உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL
DHL கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 600/= ரூபாவில் இருந்து
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை ஒரு சில வினாடிகளில் விரைவாகவும், பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ளலாம்
WESTERN UNION
MMBL Money Master
திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.8, பிரதான வீதி, நெல்லியடி. இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2. Merry Christmas

# மட்டு.மாவட்ட 8 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 2013 மார்ச் வரை நீடிப்பு

மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எட்டு உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு உள்ள அதிகாரத்தின் மூலம் இது நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, 2012 மார்ச் 18ஆம் திகதி நிறைவடையவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எட்டு உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2013 மார்ச் 18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபை, ஏறாவூர்பற்று பிரதேசசபை, கோரளைப்பற்று பிரதேசசபை, கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச்சசபை, மண்முனைப்பற்று பிரதேசசபை, மண்முனை மேற்கு பிரதேசசபை, மண்முனை தெற்கு பிரதேசசபை மற்றும் போரதீவுப்பற்று பிரதேச சபை ஆகியவற்றின் பதவிக்காலங்களே நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஈராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 28 . 08 . 1935

ஆண்டவன் அடியில் 14 . 01 . 2010



## திருமதி மனோன்மணி சோதிராசா

திதி: சதுர்த்தசி (23.12.2011)

பாசத்தின் உறைவிடமே
நீங்கள் எமைப்பிரிந்து - ஈராண்டு சென்றதுவே!
தைத்திருநாளில் எமையெல்லாம் - துயரில்
ஆழ்த்தி விட்டு எங்குதான் சென்றீரோ?
ஈராண்டுகள் கடந்தாலும் ஈரவிழிகள்
இன்னும் ஆறவில்லை!
தர்ம - ரூபன் செய்த இழிவை தாங்கமுடியாமல்
எமைப்பிரிந்தீரோ!
எமையெல்லாம் பெற்று வளர்த்து - நீங்கள் பட்ட
இன்பதுன்பங்களை எல்லாம் - எப்படி மறப்பதம்மா
உங்கள் பிரிவின் வேதனைகளை எல்லாம்
இறைவன் தான் எப்படி மாற்றுவாரம்மா!
இவ் வையம் உள்ளவரை உங்கள் நினைவுதான்
எம் உள்ளம் தனில்- என்றும் நிழலாடும்
இணையற்ற எம் அன்னையே நீங்கள் இறைவன்
சந்நிதியில் குடியிருக்க எம் உள்ள
பிரார்த்தனையை வேண்டிடுவோம் அம்மா.
ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!!!

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்.
கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

34, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0213737307,0779217908

(சு/710)(3.6.7)

i-Spoken English 3 M
நீங்கள் ஏற்கனவே நன்கு அறிந்த கே.யு வின் சிறப்பு பயிற்சி நெறி. தனிப்பட்ட விசேட நவீன கல்வி முறையில்.... IELTS
Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U Education -"Practical and Result Oriented." Tel:0776458253

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 . 08 . 1947

உதிர்வு 23 . 11 . 2011



## திருமதி கனகராசா சரஸ்வதி (கிளி)

23.11.2011 அன்று பிரான்சில் சிவபதமடைந்த திருமதி கனகராசா சரஸ்வதி (கிளி) அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக் கிருத்தியம் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை பிரான்சில் உள்ள அவரின் வீட்டில் நடைபெறுகிறது. இந்நிகழ்வினை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

G. KUNALAN,
56, BIS RUE SEDAINE,
93700 DRANCY,
FRANCE,
T.P. 0033950003524

தகவல்
க. கனகேந்திரன் குடும்பத்தினர்,
மிருசுவில் தெற்கு, மிருசுவில்.

(7878)(6-7-8)

# காப்புறுதி செலுத்தப்படாத கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தடுப்பு

கொழும்பு, டிசெ.23


காப்புறுதிக் கொடுப்பனவு உரிய முறையில் செலுத்தப்படாத கப்பலொன்று தடுத்துவைக்கப்பட்டுள்ளது. நாட்டில் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்றே இவ்வாறு தடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக கப்பல் சேவைப் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் காப்புறுதி நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், அதன் நிறுவனத்தால் கொடுப்பனவுகள் உரியமுறையில் செலுத்தப்படவில்லை.

சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திற்குச் சொந்தமாக ஏழு கப்பல்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், குறித்த நிறுவனத்திற்கு எதிராக அட்மிரல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தக் கப்பல் தற்போது கொழும்புத்துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

போட்டிப் பரீட்சை வகுப்பு பற்றிய அறிவித்தல்
* இலங்கை நிர்வாக சேவை (SLAS)
சனி, ஞாயிறு 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை
24ஆம்,25ஆம்,31ஆம், 1ஆம் திகதி வகுப்புகள்
* சட்ட மாணி தெரிவுப் பரீட்சைக்கான
பழைய பிரிவு
சனி 1.00 - 4.00 மணிவரை ஞாயிறு 9.00 - 12.00 மணி வரை
புதிய பிரிவு
இன்று (வெள்ளி) 9 மணிக்கு
D.M.I இல் நடைபெறும்
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
த.தவசேகர்
(சி/6553)(3.6.7)

# அணு விஞ்ஞானி அய்யங்கார் மரணம்



மும்பை, டிசெ.23

இந்தியாவின் முன்னணி அணு விஞ்ஞானிகளில் ஒருவரான பி.கே.அய்யங்கார் மும்பையில் உள்ள பி.ஏ.ஆர்.சி. மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை 3.25 மணியளவில் மரணமானார். மரணமடையும் போது அவருக்கு வயது 80.

1974 ஆம் ஆண்டு பொக்ரானில் வெடிக்கப்பட்ட முதல் அணுகுண்டை வடிவமைத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நுரையீரல் தொற்று மற்றும் சிறுநீரகக் கோளாறு காரணமாக அய்யங்கார் காலமானதாக அவரது மகன் ஸ்ரீனிவாஸ் தெரிவித்தார்.

கடந்த 1952 ஆம் ஆண்டு மும்பை டாடா அணு ஆராய்ச்சி மையத்தின் தனது வாழ்க்கை பயணத்தை ஆரம்பித்த அய்யங்கார், கடந்த 1990-1993-ஆம் ஆண்டுகளில் அணுசக்தி குழுவின் தலைவராகவும், செயலராகவும் திறம்படப் பணியாற்றினார்.

அணுசக்தித் துறையில் இவரது சிறந்த சேவையைப் பாராட்டி 1971 இல் பட்நாகர் விருதும், 1975இல் பத்மபூஷண் விருதும் வழங்கப்பட்டன. (வ)

# தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியமை உண்மைதான்

## கேரள முதல்வர் ஒப்புதல்

திருவனந்தபுரம், டிசெ.23

தமிழர்களின் வாகனங்கள் மீது கேரளாவில் சில இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை தான் என்று கேரள முதல்வர் உம்மன் சாண்டி ஒப்புக் கொண்டுள்ளார்.


கடந்த புதன்கிழமை மலையாளப் பத்திரிகை ஆசிரியர்களைக் கேரள முதல்வர் உம்மன் சாண்டி சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையால் தமிழ்நாடு - கேரளா இடையே பதற்றம் ஏற்பட்டிருப்பது துரதிஷ்டமானது. ஒருபுறம், அணையால் ஏற்பட உள்ள ஆபத்து பீதியை ஏற்படுத்துகிறது. மறுபுறம், இந்த விவகாரத்தால் தமிழ்நாட்டில் லட்சக் கணக்கான மலையாள மக்கள் அச்சத்துடன் வாழ்வது கவலை அளிக்கிறது.

கேரளாவில் சில இடங்களில் தமிழக ஐயப்ப பக்தர்களின் வாகனங்கள் மீது தாக்குதல் நடைபெற்றது உண்மை தான். கேரளாவில் வாழும் தமிழக மக்கள் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது.

சபரிமலைக்குவரும் தமிழக பக்தர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. சில வாரங்களுக்குமுன் குமுளி சோதனைச் சாவடியில் ஐயப்ப பக்தர்கள் உள்பட அனைவரையும் தடுத்து நிறுத்தியது உண்மைதான். அணைப் பிரச்சினையைத் தீர்க்க, கேரளா மேற்கொண்டுவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதற்கும் தமிழ்நாடு அரசு ஒத்துழைக்கவில்லை.

புதிய அணையைக் கட்டினால் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கிடைக்காது என்றும், முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தண்ணீரை இடுக்கி அணைக்குக் கொண்டு சென்று மின்சாரம் தயாரிக்க உள்ளதாகவும் தமிழ்நாட்டில் ஊடகங்கள் மூலம் தவறான தகவல் பரப்பப்படுகிறது.



எனவே, கேரளாவில் உள்ள பத்திரிகைகள், இரு மாநிலங்களுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடக் கூடாது. - என்றார் அவர். (வ)

## தொலைத்தொடர்பு ஊழல்: சுக்ராமின் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது

டில்லி, டிச.23

தொலைத்தொடர்பு ஊழலில் முன்னாள் அமைச்சர் சுக்ராமுக்கு வழங்கப்பட்ட 3 ஆண்டு சிறைத்தண்டனை சரியானது என்று டில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது சுக்ராமுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

தனக்கு விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து சுக்ராம் டில்லி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தி ருந்தார். அதை நீதிபதிகள் ரவீந்திர பட் மற்றும் ஜி.பி. மிட்டல் ஆகியோர் விசாரித்தனர்.

சுக்ராமின் மேன்முறையீட்டு மனுவை நிராகரித்த நீதிபதிகள், இந்த வழக்கில் தொலைத்தொடர்புத்துறை முன்னாள் துணை இயக்குநர் ஜெனரல் ரூணு கோஷ் மற்றும் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஏ.ஆர்.எம். நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பி.ராமராவ் ஆகியோருக்கு வழங்கப்பட்ட தண்டனையையும் உறுதி செய்து தீர்ப்பளித்தனர். (வ)



மறைந்த கேரள முன்னாள் முதல்வர் கருணாகரன் பெயரில் அமைக்கப்பட்டுள்ள அறக்கட்டளை சார்பில், 2011 ஆம் ஆண்டுக்கான, இந்தியாவின் சிறந்த நிர்வாகி விருது நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு வழங்கப்பட்டது. புதுடில்லியில் நடந்த விழாவில், பிரதமர் மன்மோகன் சிங், இந்த விருதை வழங்கினார்.

**முல்லைப் பெரியாறு விவகாரம்**

# இரண்டு மாநிலங்களையும் அமைதி காக்குமாறு சோனியா வேண்டுகோள்

இந்திய மாநிலமான கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு விவகாரத்தை மத்திய அரசு தீர்த்து வைக்கும் வரை தமிழகம் மற்றும் கேரள மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக இரு மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து தமிழக, கேரள நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் உள்ள சோனியா காந்தியின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்த போது, இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழகத்தைச் சேர்ந்த ஆருண் ரஷீத் மற்றும் கேரள நாடாளுமன்ற உறுப்பினர்களான மத்திய அமைச்சர் கே.சி. வேணு கோபால், பி.டி. தாமஸ், பீ.தாம்பரக் குழுவினர் ஆகியோர் சோனியாவைச் சந்தித்தனர்.



இந்தச் சந்திப்பின்போது அவர்களிடம் சோனியா காந்தி பேசியதாவது: இரு மாநிலங்களிலும் அமைதியை நிலை நாட்ட வேண்டியது அந்தந்த மாநில அரசுகளின் பொறுப்பாகும். இந்த விவகாரத்துக்குப் பிரதமர் மன்மோகன் சிங் அதிக முக்கியத்துவம் தந்துள்ளார் - என்றார் அவர். (வ)

# முல்லைப்பெரியாறுக்குப் புதிய அணை தேவையில்லை

## தி.மு.கழக எம்.பிகள் மன்மோகனிடம் வலியுறுத்து

சென்னை, டிசெ.23

முல்லைப்பெரியாறுக்கு புதிய அணை தேவையில்லை என்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தினர். கேரளாவில் தமிழர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது குறித்து நேற்று பிரதமரைச் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின் போதே இந்த வலி யுறுத்தலை விடுத்தனர்.

மேலும்,முல்லைப் பெரியாறு அணை பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும், தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். முல்லைப் பெரியாறில் புதிய அணை தேவையில்லை என்று மீண்டும் வலியுறுத்தினர்.

இதேவேளை முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை காரணமாக கேரளாவில் வசிக்கும் தமிழர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு மாநிலத்தை விட்டே விரட்டப்பட்டு வருகின்றனர். இது தவிர சபரிமலைக்கு செல்லும் தமிழக ஐயப்ப பக்தர் களும், அவர்களது வாகனங்களும் தாக்கப்பட்டு வருகிறது.

# ஜெயலலிதாவைக் காத்தவர் நரேந்திரமோடி

## சசிகலா விவகாரம் குறித்துப் பரபரப்புத் தகவல்கள்

அதிகார வர்க்கமாகச் செயற்பட்ட சசிகலா குடும்பத்தாரின் தடைகளை மீறி முதல்வர் ஜெயலலிதாவைச் சந்திக்க முடியாத நிலையை, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மூலம் தமிழக உளவுத்துறையினர் தகர்த்து சசிகலா குடும்பத்தார் கூண்டோடு வெளியேற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அ.தி.மு.கவில் ஜெயலலிதாவையும் மீறி, சசிகலா குடும்பத்தார் ஆதிக்கம் அதிகமானது. அவர்களது ஆதரவாளர்கள், அவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள் மட்டுமே அதிகாரிகள், அமைச்சர்கள், பொறுப்புகளில் செயற்படமுடியும் என்ற நிலை இருந்தது. உளவுத்துறைத் தகவல்கள் கூட சசிகலா குடும்பத்தார் நேரடிப் பார்வைக்குப் பின்னர்வடிகட்டப்பட்டுஜெயலலிதாவைச் சென்றடையும்.

உளவுத்துறையினரால் கூட முழு தகவல்களையும் ஜெயலலிதாவிடம் கொண்டு போய்ச் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டது. 6 மாதங்களில் சசிகலா குடும்பத்தினரால் பாதிக்கப்பட்ட அதிகாரிகள் உட்பட பல தரப்பினர் தாங்கள் அடக்கப்பட்ட முறைகளை ஜெயலலிதாவிடம் முறையிட முயன்றும் முடியவில்லை.

உளவுத்துறை ஏ.டி.ஜி.பி. ராமானுஜம் ஜெயலலிதாவின் அதிக நம்பிக்கை பெற்றவர் என்பதால அவர் மட்டும் எப்போதாவது முதல்வரை தனியாகச் சந்திக்க வாய்ப்புக் கிட்டியது. ஆனாலும், அதிகம் பேச முடியாத நிலை நீடித்தது. இதனால், ராமானுஜத்தின் செயற்பாட்டை முடக்க உளவுத்துறையில் ஐ.ஜி.ராஜேந்திரன் அவரைத் தொடர்ந்து டி.ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல் ஆகியோர் சசிகலா கும்பலின் விருப்பத்துக்காக நியமிக்கப்பட்டனர்.

நீங்கள் சட்டம் ஒழுங்கை மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள், உளவுத்துறை தகவல்களை ராஜேந்திரன் மற்றும் பொன் மாணிக்கவேல் ஆகியோர் கவனிப்பர் என்று ராமானுஜத்திடம் சசிகலா தெரிவித்துள்ளார் என பேரியஸ் கார்டன் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், உளவுத்துறை குறித்த தகவலை முதல்வர் கேட்டால் நான் பதில் சொல்ல வேண்டிவரும். முதல்வர் கூறும்வரை நான் அனைத் தையும் கவனிக் கிறேன் என்று தர்மசங்கடமான நிலையில் ராமானுஜம் கூறி வந்துள்ளார்.

பின்னர் நடந்ததுதான் சுவாரஸ்யம்!

இந்தப்பிரச்சினையை அறிந்து அதிர்ச்சியடைந்த குஜராத் முதல்வர் நரேந்திரமோடி, தானே நேரடியாக ஜெயலலிதாவைத் தொடர்பு கொண்டு பல அதிர்ச்சித் தகவல்களைத் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழக உளவுத்துறை மூலம் தனக்குக் கிடைத்த அனைத்துத் தகவல்கள், ஆவணங்களையும் தனக்கு நம்பிக்கைக்குரிய ரகசிய நபர் மூலம், முதல்வர் ஜெயலலிதாவிடம் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளார். அவற்றைப் பார்த்த பின்பே முதல்வர் ஜெயலலிதா கடும் அதிர்ச்சிஅடைந்தார். இச்சூழலில் தான், பெங்களூர் நீதிமன்றத்தில் ஜெயலலிதாவும், அவரைத் தொடர்ந்து சசிகலாவும் நேரில் ஆஜராக நேரிட்டது.

ஆரம்பத்தில் இருவரும் ஆஜராகி, விசாரணை முடியும் வரை இருவரும் சேர்ந்தே பெங்களூர் சென்றுவரத் திட்டமிட்டனர். மோடியின் தகவல் கிடைத்த பின், சசிகலா பெங்களூர் நீதி மன்றம் சென்ற போது ஜெயலலிதா சென்னையிலேயே தங்கி விட்டார்.

அப்போது கிடைத்த மூன்று நாள்கள் அவகாசத்தில் பல அதிகாரிகள், அமைச்சர்கள், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை அழைத்து பல தகவல்களின் உண்மைகளை முதல்வர் ஜெயலலிதா பெற்றார். இதன் வெளிப்பாடாக சசிகலா குடும்பத்தினர் 'கூண்டோடு' வெளியேற்றப்பட்டனர்.

# பேராதனை பல்கலை மாணவர் அனைவரும் இடைநிறுத்தம்

**ஊர்வலம் சென்றதையடுத்து உபவேந்தர் நடவடிக்கை**

கொழும்பு, டிசெ.23

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் உபவேந்தர் சரத் அபேகோன் இடைநிறுத்தம் செய்துள்ளார்.

இலங்கையில் தனியார் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படுவதை எதிர்த்து மாணவர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டதை அடுத்து இந்த நடவடிக்கையை உபவேந்தர் எடுத்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பேராதனையிலிருந்து கொழும்பு நோக்கி ஊர்வலமாகச் செல்ல எத்தனித்தனர். ஆனால் கண்டி நீதிமன்ற உத்தரவொன்றையடுத்து ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. பெரும் எண்ணிக்கையில் பொலிஸ ாரும் ராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் மாணவர்கள் கலகா நகர் சந்தியில் கூடி தனியார் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுவதற்கும், உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவுக்கும் எதிராகவும் கோஷங்களை எழுப்பினார்கள். பேரணியொன்றையும் நடத்தினார்கள்.

உபவேந்தர் பேராசிரியர் அபகோன் தமது இடைநிறுத்தல் அறிவித்தலில் மாணவர்களின் நடவடிக்கைகள் மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகளை தோற்றுவித்திருப்பதுடன் பல்கலைக்கழகத்துக்கு அவப் பெயரையும் கொண்டு வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

(ப)

# வெலிப்பனையில் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை சந்தேகத்தில் அவரது மனைவியும் மகனும் கைது

களுத்துறை, டிச.23

வெலிப்பனைப் பிரதேசத்தில் அண்மையில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டு சடலம் எரித்து புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கொலையுண்டவரின் மனைவியையும், 21 வயது மகனையும் வெலிப்பனை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

வெலிப்பனை இந்திகஸ்தன்ன பகுதியைச் சேர்ந்த ஏ.ஆரியசேன என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

உயிரிழந்த நபர் தினமும் மனைவியுடன் சண்டையிட்டு துன்புறுத்துபவர் எனவும், சம்பவதினமும் அவ்வாறே அவர் மனைவியை மிருகத்தனமாகத் தாக்கினார் என்றும் இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத 21 வயது மகன் தந்தையைக் கத்தியால் வெட்டிக் கொலைசெய்துள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

இதன் பின்னர் இருவரும் சேர்ந்து சடலத்தை தீயிட்டுக் எரித்துவிட்டு தோட்டத்தில் குழியொன்றைத் தோண்டி எரிந்த சடலத்தைப் புதைத்துள்ளனர் என விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

மத்துகம நீதிவான் துமிந்த ராமநாயக்க சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப் பிக்குமாறு அவர் உத்தரவிட்டார். வெலிப்பனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அடிமைகளைத்தான்....

(14-15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்தியது. அதனடிப் படையில் இறுதித் தீர்வு எட்டப்படும்போது முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் கவனத்திற்கொள்ளப்படுமல்லவா?

ப: இறுதித் தீர்வு வருகின்றபோது என்றல்ல, முஸ்லிம் மக்கள் குறித்து நாம் எப்போதும் மிகவும் அவதானமாக இருந்திருக்கிறோம். வடக்கு, கிழக்கில் ஏற்படுகின்ற எந்தவொரு அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல முஸ்லிம் மக்களுக்கும் உரியது. தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் எங்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாய் அது இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை. வடக்கு, கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு கூட அநீதி ஏற்படுவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் இது விடயம் சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸுடன் நீண்ட காலம் பேச்சு நடத்தி வந்திருக்கிறோம். அஷ்ரப்பின் காலத்தில் அவருடன் நீண்ட பேச்சு நடத்தியுள்ளோம். தொடர்ந்து தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் ஏனைய தலைவர்களுடனும் பேச்சு நடத்துகின்றோம். எமது பேச்சு தொடரும்.

கே: தீர்வு பேச்சுக் குழுவில் முஸ்லிம் பிரதிநிதிகள் பங்குபெறும் வாய்ப்பு உள்ளதா?

ப: அதைத் தீர்மானிப்பது எமக்குரிய விடயமல்ல. அவர்களுடன் பேசக்கூடாதென நாம் ஒருபோதும் சொல்லவும் இல்லை; சொல்லவும் மாட்டோம். எங்களுடனேயே பேச்சு முறையாக நடைபெறாமல் இருக்கும்போது நாங்கள் மற்ற விடயங்களைப் பற்றி பேசிப் பயன் இல்லையே? எங்களுடன் நடைபெறும் பேச்சு திருப்தியாக இல்லாத நிலையில் மற்ற விடயங்களைப் பற்றிப் பேசி என்ன பயன்? ஆனால், முஸ்லிம் மக்களுடைய உரிமைகள், அவர்களுடைய தேவைகள் குறித்து நாம் ஒருபோதும் கவனயீனமாக இருக்கமாட்டோம். ஒருபோதும் அவற்றை உதாசீனம் செய்யமாட்டோம். நாங்களே அவர்களின் விடயங்களை அக்கறையாகக் கவனத்தில் கொள்வோம்.

கே: நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையைப் பற்றி இறுதியாக ஒரு கேள்வி. இந்த அறிக்கை சர்வதேச சமூகத்திற்கான ஓர் அறிக்கை அல்லவென அண்மையில் அமைச்சர் ஒருவர் எமக்கு வழங்கியிருந்த செவ்வியில் தெரிவித்திருந்தார். இதுபற்றிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

ப: நீங்கள் (அரசு) மனித உரிமைகளை மீறியமை, போர்க் குற்றங்களைப் புரிந்தமை இந்த நாட்டுடன் மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல. இது உலகத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். ஏனென்றால், ஒரு இனப்பிரச்சினையை, இராணுவ ரீதியில் இந்த வகையில்தானா தீர்க்க முடியும் என்பது சர்வதேச சமூகத்தின் முன்பாக இன்றுள்ள கேள்வி. இலங்கை அரசு இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். நீங்கள் (அரசு) முறையாக நடந்தால் இந்தக் கேள்விகள் வரவேண்டிய அவசியம் இல்லையே!

(முற்றும்)

(இந்தப் பேட்டி தொடர்பான உங்களது கருத்துக்களை comments@uthayan.com என்ற எமது மின்னஞ்சலுக்கும் அனுப்பலாம்.)

# புதிதாகப் பரவும் ஆட்கொல்லி நோய்

கொழும்பு, டிச.23

அண்மைக்காலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் 'விசரல் லிஸ்மனைஸிஸ்' என்னும் நோய் பரவிவருவதாக தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தெரிவித்துள்ளது. குறிப்பாக அநுராதபுரத்தில் இந்நோய் தீவிரமாகப் பரவும் அபாயம் நிலவுவதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த நோய் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சருமத்திலும் , உடலின் ஈரப்பதனான பகுதிகளிலும் கடும்காயங்களை இந்த நோய் தோற்றுவிக்கும் எனவும், இரைப்பை மற்றும் மூட்டுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஆட் கொல்லி நோயாகவும், சரும நோயாக வும் மூன்று விதமாக இந்த நோய் அடையாளப்படுத்தப்ப டுகின்றது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை நல்லூர் உப அலுவலகம்.
ஆதன பெயர் மாற்றம்.

*ஆதன இலக்கம் - 528 வெற்று,*
*அரியாலை வீதி, வட்டாரம் - 12*

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 12, அரியாலை வீதி, 528 வெற்று இலக்க ஆதனமானது செல்லையா தியாகராசாவினுடையது என்றும் அவருடைய பிள்ளைகளான காலஞ்சென்ற தியாகராசா விக்னேஸ்வரன் மற்றும் கணேஸ் கனகராசா கைம்பெண் யோகேஸ்வரி ஆகியோர் பிதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும் குறித்த ஆதனம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் 1987 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக அழிந்து விட்டதென்றும் சொரியலாக இருந்த மேற்படி ஆதனத்தை செல்லையா தியாகராசாவின் இரண்டு பிள்ளைகளும் நிந்தப்படுத்தி உறுதி இலக்கம் 62/07.02.2011 மூலம் முதலாமவருக்கு 05 பரப்பும், இரண்டாமவருக்கு 05 பரப்புமாக பிரிவிடல் செய்து முதலாமவரின் பிள்ளைகளான விக்னேஸ்வரன் நுனராஜ், விக்னேஸ்வரன் மகள் நிசாந்தினி, விக்னேஸ்வரன் மகள் அஜந்தினி, விக்னேஸ்வரன் மகள் தர்சினி ஆகியோர் அவர்களில் ஒருவராகிய விக்னேஸ்வரன் மகள் அஜந்தினிக்கு உறுதி இலக்கம் 79/01.04.2011 மூலம் 05 பரப்பையும் இரண்டாமவர் தனது என வெளிப்படுத்திய 05 பரப்பில் தனது பிள்ளையான யோகராசா யோகசீலன் பெண் சிவராஜிக்கு உறுதி இலக்கம் 182/28.11.2011 மூலம் 02 பரப்பும் 2.9 குளியையும் வழங்கி வெளிப்படுத்தி எமது பதிவேட்டில் தமது பெயரில் ஆதனப் பெயர் மாற்றத்தை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். எமது பதிவேட்டில் வெற்றிலக்கமாகக் காணப்படும் குறித்த ஆதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் எமக்கு அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது விக்னேஸ்வரன் மகள் அஜந்தினி, கணேஸ் கனகராசா கைம்பெண் யோகேஸ்வரி, யோகராசா யோகசீலன் பெண் சிவராஜி ஆகியோருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.
23.12.2011 (சி/7130)(3.6.7)

## ICT வகுப்புகள்

பலாலி வீதி, கந்தர்மடத்தில் தரம் 10,11 வகுப்பு மாணவர்களுக்கான ICT வகுப்புக்கள் அனுபவம் மிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றன.
தொடர்பு: 0776361414

## தேவை

கோண்டாவில் சந்திக்கும் யாழ். இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் கடை வாடகைக்கு தேவை.
தொடர்பு: 0776989082

## சிறுநீரகம் தேவை

43 வயதுடைய பெண் ஒருவருக்கு $O^{+}$ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகிறது.
சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:
0777040867

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபூரணம் விஸ்வலிங்கம்



சாவகச்சேரி கண்டுவில் முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் அன்னபூரணம் 20.12.2011 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-மங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், கனகரட்ணம் (சுவிஸ்-அப்புச்சி), பாலரட்ணம் (பாலன்-நுணாவில்), காலஞ்சென்ற மனோகரன் மற்றும் லதா (இத்தாலி), சுதா (சூட்டி-லண்டன்), சுதாகர் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், மஞ்சுளா (சுவிஸ்), ஜெயா (நுணாவில்), ஜீவா (இத்தாலி), கோபிநாத் (லண்டன்), மைதிலி (மண்கும்பான்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆதர்ஷன், அம்புருதன், ஆத்மீகன், டிலக்ஷன், புவிகரன், பாணுலக்ஷன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுவில்,
முதலாம் ஒழுங்கை,
சாவகச்சேரி. (7882)(6-9-8)

தகவல்:
குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை )

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை செல்வநாயகம் 21.12.2011 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் பவானி, குமரன், கலையரசி,சரவணபவன், விநாயகமூர்த்தி, மாலினி, கணேசமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற மணமோகன் (முன்னாள் இலங்கை வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தர்) மற்றும் வாதஊரன் (லண்டன்), ஜெயகுமார் (லண்டன்), சந்திரா (லண்டன்), மாலினி(லண்டன்), வித்தியா(லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியும் சேந்தன், அருணன், துளசி, குகன், காயத்திரி, கவிதா, கங்கா, வினிதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.12.2011) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்னைவாசா"
சண்டிலிப்பாய். (11949)(3.6.7)

தகவல்:
செ.நித்தியானந்தம்.

# மாநகரசபை உறுப்பினர் மங்களநேசன் பட்டப்பகலில் நகரில் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், டிசெ.23

மாநகரசபை உறுப்பினரான மங்களநேசன் மீது நேற்று மதியம் தாக்குதல் முயற்சியொன்று நடைபெற்றுள்ளது. மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஒன்பது பேர் அவரைத் தள்ளி வீழ்த்தினர்.

பரபரப்பான இந்தச் சம்பவம் நேற்று மதியம் நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி சந்திக்கும் இடத்துக்கு அண்மையாக நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மங்களநேசன் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:

நேற்றைய தினம் நாவலர் வீதியால் நான்வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபொழுது, மூன்று மோட்டார் சைக்கிள்களில் கறுப்புநிற 'ஹெல்மட்' அணிந்த நிலையில் 9 பேர் வந்து என்னை வேண்டுமென்று இடித்து வீழ்த்தினர்.

என்னைக் கொல்லும் நோக்கத்துடனேயே இந்தத் தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளது. அவர்கள் இடித்து வீழ்த்தியதில் எனது உடலில் கண்டல்காயங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளேன்-என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவில்லையா என்று வினவியபோது, ''பொலிஸுக்கு சென்று என்ன கிடைக்கப் போகின்றது? எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.'' எனவும் அவர் தெரிவித்தார். தாக்குதல் சம்பவம் தொடர்பான விவரங்களை அறிவதற்காக அரியாலையிலுள்ள மங்களநேசனின் வீட்டுக்குச் சென்றபோது, அவர் வீட்டுக் கேற்றைப் பூட்டிவிட்டு, வீட்டின் வாசலுக்கு முன்னால் நின்றவாறே பதிலளித்தார்.

அண்மையில் - மூன்று வாரங்களுக்கு முன்னர்- மாநகரசபை முதல்வருக்கு எதிராக பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களை அதிரடியாக முன்வைத்தவர் மங்களநேசன். இதனால் அவர் ஈ.பி.டி.பி கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

(ங-15-14)

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் மு.காவின் நிலை தெரிவுக்குழுவிடம்

கொழும்பு, டிசெ.23

''மாகாணசபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் தமது கட்சியின் உறுதியான நிலைப்பாட்டை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம்.''

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹஸன் அலி எம்.பி. நேற்று ''உதயனு''க்குத் தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்குவது சாத்தியப்படாததொரு விடயம் என அரசு அறிவித்துள்ளது.

அரசியல் தீர்வுத்திட்ட விடயத்தில் பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளடக்கப்படவேண்டுமா எனக் கேட்டபோதே மு.கா. செயலாளர் ஹஸன் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

13 ஆவது அரசமைப்பில் பொலிஸ், காணி அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், தற்போது பொலிஸ் அதிகாரம் வழங்குவது சாத்தியம் இல்லை எனக் கூறுகின்றனர். எது எப்படியிருப்பினும், இனப்பிரச்சினை விவகாரத்தில் பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம் - என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அதன் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம்வகிக்கவுள்ளார்.

(ங-சி)



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தனது சுயசரிதை நூலை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கையளித்தார்.

# பண்டிகைக் கால உணவுகளில் கவனம் கொள்ளுமாறு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.23

அதிகம் உப்புக் கலந்த மற்றும் இனிப் பேற்றப்பட்ட உணவு வகைகளை வரும் பண்டிகை காலங்களில் அதிகமாக உண்பதைத் தவிர்க்கும்படி மக்களை சுகாதார அமைச்சு எச்சரிக்கை செய்துள்ளது. இந்தக் காலத்தில் தொற்று அல்லாத நோய்கள் பரவுதல் அதிகரிக்கக்கூடும் என்று கருதப்படுவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்குநோய் வந்தாலும் கூட அந்த நோய் அவர் மூலம் மற்றவர்களுக்கு தொற்றாமல் போனாலும் நீண்டகாலம் நீடித்து இருப்பதுடன் குணமாகும் தன்மையும்மெது வாகவே காணப்படும் நோய்களே தொற்று அல்லாத நோய் என்று என்று சொல்லப்படுகின்றன.

இந்த நிலைமைக்கு காரணம் எண்ணெய்ப் பதார்த்தங்கள் அதிகம் உப்புகலந்த மற்றும் இனிப்பு ஏற்றப்பட்ட பண்டங்களை அதிகமாக உண்பதாகும் மற்றும் மதுபானம், புகைத்தல் முதலியவற்றை பண்டிகை காலங்களில் அதிகமாகப் பாவிப் பதும் குறிக்கப்படுகின்றது. இவைகளைத் தவிர்த்து தொற்று அல்லாத நோய்களில் இருந்து தப்பிக் கொள்ளும்படி அமைச்சு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (ப)

# இஸட் புள்ளி விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை

கொழும்பு, டிச.23

இவ்வருட ஜீ.சி.ஈ.. உயர்தரப் பரீட்சையின் இஸட் புள்ளி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்வருடம் பழைய பாடத்திட்டம், மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கான பரீட்சைகள் நடைபெற்றன. இவற்றுக்கு பொதுவான இஸட்புள்ளி முறைமையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்துள்ளது என அந்த ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பொதுவான இஸட் புள்ளி முறைமைக்கு எதிராக மாணவர்கள் வழக்குத் தொடரக்கூடும் என்பதால் சட்டமா அதிபரின் ஆலோசனையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடியுள்ளது என மேற்படி அதிகாரி கூறினார்.

இஸட் புள்ளி விவகாரம் காரணமாக இவ்வருடம் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை ஆணையாளருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, டிச.23

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்கவுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் வெளியிடப்படாததால் 3 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெறுபேறுகள் தாமதமடைவதால் மாணவர்களின் எதிர்கால நடவடிக்கை ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதனால் விரைவில் மனுவை விசாரித்து மாணவர்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# 11 குடும்பங்கள் இன்னும் தற்காலிக முகாம்களில்

யாழ்ப்பாணம், டிசெ.23

அடை மழை காரணமாக வடமராட்சி கிழக்கில் 11 குடும்பங்கள் இன்னும் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெய்த அடைமழையால் 53 குடும்பங்களைச் சேர்ந்த 167பேர் இடப்பெயர்வைச் சந்தித்தனர்.

தற்போது மழை ஓய்ந்த நிலையிலும் இவர்களின் வதிவிடங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் 11 குடும்பங்கள் இன்னும் தற்காலிக முகாம்களிலேயே தங்கியுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுக்கான ஏற்பாடுகளை மருதங்கேணி பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை ஆழியவளை ஊடுத்துறைப் பகுதிகளில் சில வீடுகள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. சில வீடுகளுக்குள் வெள்ளநீர் தேங்கியிருப்பதால் மக்கள் தமது உறவினர் வீடுகளிலேயே தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை இந்தப் பகுதி மக்களுக்கான ஒன்பது தற்காலிக வசிப்பிடங்களை அமைக்க யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் முன்வந்துள்ளது. (ங-319)

# தாய்ப் பாலூட்ட விசேட திட்டம்

வேலைக்குச் செல்லும் தாய்மார் தமது குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதை இலகுபடுத்தும் வகையில் குடும்பநல சுகாதார அலுவலகம் விசேட திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய கொழும்பு குடும்பநல சுகாதார அலுவலக வளாகத்தில் குழந்தைகள் காப்பகமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என அதன் பணிப்பாளர் வைத்திய நிபுணர் தீப்தி பெரேரா கூறியுள்ளார். தாய்மார் தமது குழந்தைகளை குறித்த காப்பகத்தில் ஒப்படைத்துவிட்டு தொழிலுக்கு சென்று, மீண்டும் அங்குவந்து குழந்தைக்குப் பாலூட்டிவிட்டுச் செல்லமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

# மொரகொல்லவில் பொலிஸ் அதிகாரி, பேருவளையில் சிப்பாய் இரண்டு பேரும் பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டுகளில் கைது

கொழும், டிச.23

பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என சந்தேகிக்கப்படும் மொரகொல்ல பொலிஸ் காவலரன் பொறுப்பதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அளுத்கம பொலிஸ் நிலைய அதிகாரிகள் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கடற்கரையில் மதுபோதையிலிருந்த பெண்ணொருவரும் மேலும் இரு ஆண்களும் மொரகொல்ல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த பெண் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார் என செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பேருவளை பிரதேசத்தில் பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திவிட்டு தப்பிச்செல்ல முயற்சித்த இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகலை காலியில் இருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த சந்தேகநபர் பேருவளை பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த பெண்ணை அச்சுறுத்தி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

பெண்ணின் கதறலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மக்களும் பொலிஸாரும் சந்தேகநபரை பிடிப்பதற்கு முயற்சித்துள்ளனர். இதன்போது சந்தேகநபர் கடலில் பாய்ந்து தப்பிச்செல்ல முயற்சித்தபோது பொலிஸார் படகொன்றின் உதவியுடன் அவரைக் கைதுசெய்துள்ளனர்.

24 வயதான இராணுவ லெப் டினன்ட் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பேருவளையைச் சேர்ந்த 33 வயதான குடும்ப பெண்ணொருவரே துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (வ)

### தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில்

# யாழ்.மாவட்ட செயலக அணி நீதி அமைச்சுடன் மோதி சம்பியன்





தேசிய மட்டத்தில் சாதனை புரிந்தது யாழ்.மாவட்ட செயலக வலைப்பந்தாட்ட அணி. அரச உத்தியோகத்தர்களுக்கான தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த வாரம் விளையாட்டமைச்சின் மைதானத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலக வலைப்பந்தாட்ட அணி முதலாவது போட்டியில் மாத்தளை உப்புவல பிரதேச செயலக அணியுடன் மோதிக்கொண்டது.

அதில் யாழ்.மாவட்ட செயலக அணி 25:10 புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் சிறிலங்க ஸ்ரேட்சேவிஸ் அணியுடன் மோதிக் கொண்டது. இதில் 21:08 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

யாழ்.மாவட்ட செயலக வலைப்பந்தாட்ட அணியும், நீதி அமைச்சு வலைப்பந்தாட்ட அணியும் இறுதியாட்டத்தில் மோதிக்கொண்டன.

யாழ்.மாவட்ட செயலக வலைப்பந்தாட்ட அணி திருமதி ரூபசிங்கத்தின் நெறிப்படுத்தலில் அகலியா, மனோன்மணி, ஜக்குலின், பிறேமினி ஆகியோர் தமது அதிரடியான ஆட்டத்தினை வெளிப் படுத்தி எதிர் அணியினரின் வியூகங்களைத் தகர்த்து தமது அணிக்கான புள்ளிகளைப் பெற்றனர்.

ஆட்ட முடிவில் யாழ். மாவட்ட செயலக வலைப்பந்தாட்ட அணி 24:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று தேசிய மட்டத்தில் சம்பியன் ஆனது.

பிரதம விருந்தினராக அரச சேவைக்கான சங்கத்தின் தலைவர் டி.தசாநாயக்க கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளித்து கௌரவித்தார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மீள்குடியேற்றப் பணிப்பாளர் எஸ். சுதர்சன் கலந்துகொண்டார். (எ-23-86)

## மின் ஒளியிலான கூடைப்பந்தாட்டத்தில் பற்றீசியன்-ஒல்ட்கோல்ட் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் மின் ஒளியில் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் சென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 44:33 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஒல்ட்கோல்ட் விளையாட்டுக் கழக அணிக்கும் கே.ஸி.ஸி.ஸி. வெள்ளை அணிக்கும் இடையில் நடை பெறவிருந்த ஆட்டத்தில், கே.ஸி.ஸி.ஸி. வெள்ளை அணி மைதானத்துக்கு சமுகம் தராமையினால் ஒல்ட்கோல்கள் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (எ-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்ஒளியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

அதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

***

யாழ்ப்பாணம், டிசெ.23

வவுனியா யங்கஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்று வருகின்றது.

அதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பிரன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்மன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பின்வருவோர் நடப்பாண்டுக்கான நிர்வாகக் குழு அலுவலர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - ப.முருகவேல்
உபதலைவர்கள் - ஆர்.செல்வராசா, சண்.தயாளன், என்.சிவராசா, எஸ்.முரளிதரன், என்.ஞான தயாளன்
செயலாளர் - எஸ்.சிவசங்கர், பொருளாளர் மற்றும் உப செயலாளர் -, என்.றொபேசன், செயற்குழு உறுப்பினர்கள் - எஸ்.சிதம்பரப்பிள்ளை, கை.குமரேசன்,எஸ்.கோபிகிருஷ்ணா, கே.செல்வராசா, கே.ஜதீபன், கணக்காய்வாளர்கள் - எஸ்.நாதன், கே.ஹரிசாந். (எ-23-86)

## கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்கு உபாலி தர்மதாஸ-சுமித் பெரேரா போட்டி

### திலங்க சுமதிபால களமிறங்கார்

இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கு உபாலி தர்மதாஸ மற்றும் சுமித் பெரோரா ஆகியோர் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர் என விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சனி ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இப்பதவிக்குப் போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால, தாம் இந்தப் பதவிக்குப் போட்டியிடமாட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான வேட்புமனுத்தாக்கல் கடந்த 25.11.2011 அன்று தொடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்டின் சிறந்த வீராங்கனையாக கிம்கிளிஸ்டர்ஸ்

2011ஆம் ஆண்டின் பெல்ஜியத்தின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக டென்னிஸ் நட்சத்திரம் கிம் கிளிஸ்டர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான விருதுடன் அவர் மொத்தம் எட்டுத் தடவைகள் இந்த விருதை வென்றுள்ளார்.

காயம் காரணமாக தற்போது அவர் ஓய்விலிருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



யு.எஸ்.ஏ.ஐ.டி.இ.நிறுவனத்தின் ஆதரவுடன் மடு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தட்சண மடு இளஞ்சுடர் விளையாட்டுக்கழகத்துக்கும் உதயசூரியன் விளையாட்டுக் கழகஅணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் விருந்தினராகக் கலந்துகொண்ட யு.எஸ்.ஏ.ஐ.டி.இ. நிறுவன அதிகாரிகளுடன் வீராங்கனைகள். (23)

## கருத்தரங்கு

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உதை பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கான உதைபந்தாட்ட பயிற்சி சம்பந்தமான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாக விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேசத்துக்கு உட்பட்ட உதைபந்தாட்ட வீர வீரங்கனைகளுக்கு இடையே உதைபந்தாட்ட சட்ட விதிகள் மற்றும் திறன்களை வளர்க்கும் முகமாக இப் பயிற்சி கருத்தரங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதைப் பெறுகிறார் சுனில் சேத்ரி

இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பு சார்பில் வழங்கப்படும் சிறந்த வீரர் விருதினை இந்திய உதைபந்து வீரர் சுனில் சேத்ரி பெற உள்ளார்.

ஏ.ஐ.எவ்.எவ்., சார்பல் ஆண்டு தோறும், சிறந்த வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

இந்த ஆண்டு இவ்விருதினை சுனில் சேத்ரி பெறுகிறார்.

இவர் 17 சர்வதேச போட்டிகளில் பங்கேற்று 13 கோல்கள் அடித்துள்ளார். தவிர, சிராக் யுனைடெட் கிளப் அணிக்கான லீக் போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இது குறித்து சுனில் சேத்ரி கூறுகையில்,'இந்த ஆண்டு நல்ல விதமாக ஆரம்பானது. இது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

நான் பெறும் ஒவ்வொரு விருதும், இன்னும் என்னை மேம்படுத்திக் கொள்ள உதவும்,' என்றார்.

## பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையே கலந்துரையாடல்

வலி வடக்கு டிசெ 23.

வேலணைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமைமுற்பகல் 10 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வேலணைப் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர் செயலாளர்களை கலந்து கொள்ளுமாறு வேலணை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் ச.யசிதரன் அறிவித்துள்ளார்.


கலந்துகொள்ளவுள்ள கழகங்களை தமது கழக தடகள வீரர்களின் பெயர்ப் பட்டியல்கள் கணக்கறிக்கைகள்மற்றும்பொதுக் கூட்ட அறிக்கைகளையும் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## அகில இலங்கை சதுரங்க போட்டிகள் 27 ஆம் திகதி ஆரம்பம்


இலங்கை பாடசாலைகள் சதுரங்கச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள சதுரங்க போட்டி இந்த மாதம் 27ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் நுவரெலியா அபஸ்வா சிதுவகே கன்யாராம மகளிர் பாடசாலையில் இடம்பெறும்.

இந்தப் போட்டி இலங்கை பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் தலைவர் சேனக சமரதுங்க, செயலாளர் எம்.ஜி.விமலவீர, போட்டிச் செயலாளர் கே.டபிள்யூ. டீ.சரத்சந்ர ஆகியோரின் பங்களிப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வீர, வீராங்கனைகளுக்குத் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் வழங்கப்படுவதுடன், அதிகூடிய புள்ளிகளைப் பெறும் வீர, வீராங்கனைகளுக்கு விசேட தங்கப் பதக்கங்களையும் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று பாடசாலைகள் சதுரங்கச் சங்கம் தெரிவித்துள்ளது. (15)



# மீண்டும் வாய்ப்பு



இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடவுள்ள ஆஸ்திரேலிய அணியில் மார்ஷ், புதுமுகவீரர் கோவன் மற்றும் கடும் விமர்சனத்துக்குள்ளான பொண்டிங் ஆகியோருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.

காயம் காரணமாக வொட்சனுக்கு இடம் கிடைக்கவில்லை

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் மெல்பேர்னில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆட்டத்துக்கான 13 பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு எதிரான 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் சதம் அடித்த புதுமுக வீரர் எட் கோவனுக்கு அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஷேன் மார்ஷ் காயத்தில் இருந்து குணமடைந்து உடல் தகுதி பெற்றமையால் அவருக்கும் இடம் கிடைத்துள்ளது.

இதேபோல வேகப்பந்து வீச்சாளரான ஹில் பென்ஹாஸும் சேர்க்கப்பட்டுள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் மோசமாக விளையாடிய பிலிப் ஹியூகஸ், உஸ்மான் குவாஜா ஆகியோர் அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வொட்சன், ஹரிஸ் ஆகியோர் காயத்திலிருந்து குணமடையாதமையால் அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மோசமான ஆட்டம் காரணமாக கடும் விமர்சனத்துக்குள்ளான முன்னாள் அணித்தலைவரான ரிக்கி பொண்டிங்குக்கும் அணியில் தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவரை அணியிலிருந்து நீக்கவேண்டும் என்று முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ள நிலையிலும், தெரிவுக்குழுவினர் அவருக்கு மேலும் ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளனர்.

முதல் டெஸ்ட் போட்டிக்கான ஆஸ்திரேலிய விவரம் வருமாறு:-

மைக்கல் கிளார்க் (அணித்தலைவர்), பிரட் ஹடின் (துணைத் தலைவர்), பொன்டிங் எட்கோவன், வோர்னர், மார்ஷ், ஹஸி, டானியல் கிறிஸ்டியன், பீற்றர் சிடில், பற்றின்சன், மைக்கல் ஸ்டார்க், ஹில் பென்ஹாஸ், நாதன்லி யான். (ங-15)

## ரணதுங்க மீது குற்றச்சாட்டு

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க. இவரது தலைமையில் இலங்கை அணி 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் ரணதுங்க இந்திய சூதாட்டதரகரிடம் 75 ரூபா லட்சம் பணம் பெற்றுக் கொண்டு ஆட்டத்தை பிக்சிங் (சூதாட்டம்) செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சூதாட்ட குற்றச்சாட்டை ரணதுங்க மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

எனது பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் சூதாட்ட குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை மறுப்பதோடு இதற்கு கண்டனமும் தெரிவிக்கிறேன். அவதூறு ஏற்படுத்தும் வகையில் எனது பெயர் வெளியிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். (ங-15)

# விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு 70கோடி ரூபா ஒதுக்கீடு

'மஹிந்த சிந்தனை' ஊடாக கிராம மட்டங்களில் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தவும், தேசிய, சர்வதேச ரீதியில் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரவும், நாடு முழுவதும் உள்ள 52 பாடசாலைகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யவும் விளையாட்டு அமைச்சு 2012 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் 70 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியுதவியில் வடமாகாணத்தின் எந்தவொரு பகுதியையும் சேர்ந்த மைதானப் புனரமைப்புக்கோ அல்லது தேர்தல் காலத்தில் கிளிநொச்சியில் அடிக்கல் நடப்பட்ட விளையாட்டரங்குக்கோ நிதி ஒதுக்குவது தொடர்பாகவோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**வடமாகாணம் புறக்கணிப்பு**

தொலன்கமுவ டட்லி சேனநாயக்க மத்திய மகாவித்தியாலய மைதானம், கேகலு மகாவித்தியாலய மைதானம், திக்வெல விஜித மகாவித்தியாலய மைதானம், அம்பாந்தோட்டை ருஹுணு விஜயபா மத்திய மகாவித்தியாலய மைதானம், மஹாமய மகளிர் வித்தியாலய மைதானம், தர்ஸ்டன் ரக்பி வித்தியாலய மைதானம், கொலமுனே மைத்திரி விளையாட்டு மைதானம், மட்டக்களப்பு மத்திய மகாவித்தியாலய மைதானம், பொரமுடுல்ல வித்தியாலய மைதானம், கண்டி வித்தியார்த்த வித்தியாலய மைதானம், வெலிகம சேனநாயக்க வித்தியாலய மைதானம், பெலியத்த டி.ஏ.ராஜபக்ஷ மைதானம், தர்மாலோக மத்திய மகாவித்தியாலய மைதானம், வெல்லவாய குமாரதாச மகாவித்தியாலய மைதானம், புத்தளம் துட்டகைமுனு மகாவித்தியாலய மைதானம், பெல்மடுல்ல கன்கந்த மகாவித்தியாலய மைதானம், குருந்துவத்த ராஜகிரிய மைதானம், மாளிகாஹென்ன மகா வித்தியாலய மைதானம், செவனகல மகாவித்தியாலய மைதானம் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மேலும் நிட்டம்புவ பொது மைதானம், குருந்துவத்த பொது மைதானம், தனமல்வில பொது மைதானம், ரஞ்சித் மத்தும பண்டார பொது மைதானம், நில்தண்டாயின்ன பொது மைதானம், பதவிய பொது மைதானம், கெப்பிட்டிகொல்லாவ பொது மைதானம், நெப்ப 279 துலான 9 ஓடை வீதி மைதானம், மாவத்தகம இரவு, பகல் வொலிபோல் பொது மைதானம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், சாந்த ஜோசப் மைதானம், தெல்தெனிய மைதானம், மெல் டி வத்த மைதானம், கலுகலவத்த மைதானம், க்ரோஹில் மைதானம், செடர்லம்பர்க் மைதானம், நாகஸ்தென்ன மைதானம் ஆகிய விளையாட்டு மைதானங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ங-15)



## வோர்னுக்கு வெண்கலச் சிலை

மெல்போர்ன் மைதானத்தின் வெளிப்பகுதியில் ஆஸ்திரேலிய சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வோர்னுக்கு வெண்கல சிலை நேற்று அமைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட்டில் வோர்னின் சிறப்பான பங்களிப்பை கௌரவிக்கும் வகையிலேயே இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கு ஆஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரங்கள் டொன் பிரட்மன், கெய்த் மில்லர், பில் போன்ஸ் போர்டு, ரெனிஸ் லில்லி உள்ளிட்ட 10 பேருக்கு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இப்போது 11 ஆவதாக வோர்ன்னின் சிலை வைக்கப்படுகிறது. இதன் மூலம் அவர் அழியாப் புகழை பெற்றுள்ளார்.

இந்த மைதானத்தில்தான் வோர்ன் தனது கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடினார். இங்குதான் 700 ஆவது இலக்கு மற்றும் 'ஹட்ரிக்' சாதனையும் நிகழ்த்தினார். 2007 இல் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரை 5-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வென்ற பிறகு கிரிக்கெட்டில் இருந்து அவர் ஓய்வுபெற்றார்.

டெஸ்ட் போட்டியில் 708 இலக்குகளையும், ஒரு நாள் போட்டியில் 293 இலக்குகளையும் வோர்ன் விழ்த்தியுள்ளார். (ங-15)




## உளம் கனிந்த இனிய வாழ்த்துக்கள்



17.12.2011 கொழும்பு ஜோன்.டீ.சில்வா ஞாபகார்த்த கலைஅரங்கில் "கலாபூஷணம்" விருது பெற்ற எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய நாடகக் கலைஞர்

கலாபூஷணம்

**இரா. பீதாம்பரம்** (பற்குணம்)

அவர்கள் மேலும் பல சிறப்புகள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோணாந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

கோபாலபிள்ளை குடும்பம்.

## மரண அறிவித்தல்

### செல்வராஜா ரமேஸ்

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி சுவாட்ஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா ரமேஸ் நேற்று (22.12.2011) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.செல்வராஜா (முன்னாள் மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம், வவுனியா) மற்றும் நிற்சலாராணி தம்பதியரின் அன்பு மகனும், பாமினி (லண்டன்), நிரோசன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹரோல்ட் பவளக்கோன் (லண்டன்), அபிராமி (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும், அன்றிக்கா, அஞ்சலிக்கா ஆகியோரின் மாமனும், அஞ்சனா, ஒவியா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரத்தினம்லேன்,
473/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: இ.இரத்தினராசா
(நில அளவையாளர்) சிறியதந்தை.

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற நிர்வாக உறுப்பினர் ஆறுமுகம் யோகேஸ்வரன் அவர்களது பாசமிகு சகோதரன்

**அமரர் திரு ஆறுமுகம் மகேஸ்வரன்**

(உரிமையாளர், அரிசி ஆலை, புதுறோட், காரைநகர்)

அவர்களின் திடீர் மறைவுத் துயர் அறிந்து அதிர்ச்சியடைவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா, எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேர பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.

நிர்வாகசபையினர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்,CANADA, BSc(electrical) திருவோணம், 1975 இல் பிறந்த பாவம் 32 உடைய Network engineer க்கு பட்டதாரி மணமகள் தேவை

தொடர்பு- 0772627890, 0778174907 .
anlingesh@gmail.com

## விற்பனைக்கு

பரந்தன் சந்தியில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் புடைவைக் கடை விற்பனைக்கு (கட்டடம் வாடகை) நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு- 0777711220

## காணி விற்பனைக்கு

சுதுமலை வடக்கு,
மானிப்பாயில் அமைந்திருக்கும்
நிலப்பரப்பு 8½ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0770219252

## விற்பனைக்கு

5Kvடைனமோவுடன் Lister England எஞ்சின் மற்றும் புதிய Nikon 3000 கமரா Prolit 350D ஸ்ராண்ட் உடன் விற்பனைக்கு.

தொடர்பு- 0777711220

## கோழிக்குஞ்சு விநியோகம்

35நாளில் 2KG க்கு மேல்
வளர்ச்சியடையக் கூடிய
BAHIRAHA NO-1 புறோயிலர்
குஞ்சுகள் 23.12.2011
விநியோகிக்கப்படும்.
விலை -110/-
**ராஜீவ்,**
**நவாலி வீதி,**
**ஆனைக்கோட்டை**

## விற்பனைக்கு

H.S-JI xxxx தொடரிலக்கமுடைய ஐஸ்கிறீம் வான் விற்பனைக் குண்டு.

T.P- 0776090926

## மரண அறிவித்தல்கள்



### சின்னையா புவனேந்திரராசா

(பண்டத்தரிப்பு MPCS முன்னாள் பணியாளர்)

விபுலாணந்தர் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா புவனேந்திரராசா (பண்டத்தரிப்பு MPCS முன்னாள் பணியாளர்) 21.12.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணகுமாரியின் அன்புக் கணவரும் பரணீதரன்(யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம்) சுபாஜினி, வித்தியாதரன், மயூதரன்(Uthayan online) ஆகியோரின் தந்தையும் பிரதீபாவின் அன்பு மாமனும் அனுஷாந்தின் பேரனும் நடாராசா, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி நாகராசா, மற்றும் தவராசசிங்கம், கடம்பேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரது அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்றுப் (22.12.2011) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மாதகல் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்தோனியார் வீதி,
மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி சௌந்தரநாயகி அப்பாபிள்ளை

கைதடியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌந்தரநாயகி அப்பாபிள்ளை நேற்று (22.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிதம்பி அப்பாபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் பேரின்பநாயகி (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர், மோகனாம்பிகை, ஆகியோரின் பாசமிகு தாயும் வே.அ. திருஞானசுந்தரம்(முன்னாள் தமிழ் சேவை பணிப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் மாமியும், அபிராமி (துளசி), ஸ்ரீகணேஸ்வரன் ஆகியோரின் பாட்டியும் இ.தணிகாசலம், இ.குழந்தைவடிவேலு, நி.தெய்வநாயகி, காலஞ்சென்ற கா.மனோராம்பிகை ஆகியோரின் பெரிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.12.2011) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மனி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி.பேரின்பநாயகி
திருஞான சுந்தரம்
[இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்]

நாயான்மார்கட்டு.

## காணி,
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் ஒருவர் அவரது சொந்தப் பொலிஸாராலேயே கீழே தள்ளப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார். அத்தகைய சம்பவங்கள் இடம்பெற இடமளிக்கமாட்டோம்'' என்றார் ரம்புக்வெல.

**கூட்டமைப்பின் கருத்து**

ரம்புக்வெலவின் இந்த அறிவிப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த தமித் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அந்த அதிகாரங்கள் வழங்கப்படாத ஒரு தீர்வு தேவையே இல்லை என்று கூறினார்.

எனினும், இந்த விடயத்தைக் கூட்டமைப்புக்கு அரசு உத்தியோகபூர்வமாக இன்னும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். ''கூட்டமைப்புடன் பேச்சில் ஈடுபட அரசு விரும்பவில்லை என்றால் அதனை நேரடியாக, பகிரங்கமாக அரசு அறிவிக்கலாம். அதனை விடுத்து, எம்மைப் பேச்சுக்கு அழைத்துக் கொண்டு ஊடகங்களில் இவ்வாறு அதைத் தர முடியாது; கூட்டமைப்பு புலிகளைப் போன்று நடக்கின்றது என்று கருத்துக் கூறிக் கொண்டிருப்பதை ஏற்க முடியாது'' என்றார் அவர். (உ)

## ஆணைக்குழு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிப்பிராயங்களை அரசுக்கு அறிவிக்கும். இதனையடுத்து, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று மூத்த அமைச்சர் ஒருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ஒ-சி)

தேவை
யாழ். நகரில் வேலை
செய்வதற்கு ஆள் தேவை
தொடர்பு- 0710110678

## மரண அறிவித்தல்கள்



### பொன்னன் நல்லையா(குஞ்சர்)

நவாலியைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் நல்லையா(குஞ்சர்) நேற்று (22.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன்-இலட்சுமி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் முத்துத்தம்பி, சிவபாக்கியம், அரியமலர், இராசமலர், தவமலர், பொன்னுத்துரை (கிளி) ஆகியயோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் தவராசா, சின்னையா, சவுந்தரதேவன், இராசம்மா, குணமணி, றஞ்சினிதேவி, ஆகியோரின் மைத்துனரும் விக்னேஸ், றஜேஸ், மதன், ஞானம், ஜெயா, கமலா, யோகா, காலஞ்சென்ற லவன் மற்றும் குகன், சுபா, பிரியா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் பிரபு, உஷா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் காலஞ்சென்ற காஞ்சனா மற்றும் மனோ, ஜீவா, றஞ்சனா, சுதாகர், மோகனா, குமார், உமா, தீபன், பிறேமா, பிருந்தா, ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரயைகளுக்காக நவாலி ஆரியப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்தச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கட்டுடை, மானிப்பாய். சகோதரர்கள்.



### விஸ்வலிங்கம் சண்முகம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சண்முகம் அவர்கள் நேற்று (22.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பதிவாளர், சாவகச்சேரி நீதிமன்றம்) திசைவீரசிங்கம் (கனடா), காலஞ்சென்ற பரராசசிங்கம்(பரம்ஸ்), யோகேஸ்வரி, காராளசிங்கம்(அமெரிக்கா), நகேஸ்வரி(ஜேர்மனி), பூபாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மகேஸ்வரி(பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 23.12.2011 பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும்.

தகவல்:
சிவன் கோயிலடி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

### கந்தையா பாலசிங்கம் (கார்க்கார பாலசிங்கம்)



கந்தரோடையைச் சேர்ந்த கந்தையா பாலசிங்கம் நேற்று (22.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
''குமாரபதி'' கந்தரோடை, சுன்னாகம். குடும்பத்தினர்.

### மரிசலீன்பிள்ளை மரியதாசன்

(சமாதான நீதிவான், சுகாதார வைத்திய அதிகாரி, யாழ். மாநகரசபை)



ஆவே மரியா, 72, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ம.மரியதாசன் காலமாகிவிட்டார்.

அன்னார் லிமா லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இன்னாசிமுத்து மரிசலீன்பிள்ளை-ஜெயசீலியம்மா (வல்வெட்டித்துறை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மு.கந்தையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், Dr. ம.ஜெரால்ட் ஜீவதாசன் (யாழ்.போதனா வைத்தியசாலை) Dr. ம.ஜெறோம் லோகதாசன் (Medl Emergency Services, இரத்மலானை), திருமதி ஜெம்மா தேவகி றொகான் (இராமநாதன் இந்து மகளிர் தேசிய கல்லூரி, கொழும்பு-4), செல்வி ம.ஜெனிபர் ஜானகி (செலான் வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. அ.றெகான் (தேசிய புற்றுநோய் வைத்தியசாலை, மகரகம), Dr. அறிவழகி (யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி ஆன் ஸ்டரினா (விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனும், றொ.நேசன், யோவான் அருணன், ஆன் கிறிஸ்டா ஆகியோரின் அன்புப் பேரனும், ம.யேசுதாசன், திருமதி மேரி ராஜேஸ்வரி நவரட்ணம், காலஞ்சென்ற பாக்கியநாதர் எலிசபெத் ஆகியோரின் அன்புத் தம்பியும், திருமதி விசாகபூசணி, விசாகரத்தினம், சரவணபவன், திருமதி கோமதி செல்வநாதன், சயலொழிபவன், திருமதி கு.இராமலிங்கம், திருமதி S.குகதாசன், திருமதி கோ.சோமசுந்தரம், திருமதி அல்போன்ஸ், திருமதி கே.சிவபாதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இரங்கல் கூட்டத்தின் பின்னர் சுண்டுக்குளி புனித யோவான் (சுஞ்சுவான்) ஆலயத்தில் பி.ப. 3 மணிக்கு திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஆவே மரியா,
72, கோவில் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## நல்லிணக்க...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் என அரசு அறிவித்துள் ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழு வின் இறுதி அறிக்கை தொடர் பில் சில நிறுவனங்கள் பொய்யான தகவல்களை வெளியிட்டு வருவதாகவும், இவ் வாறு பொய்யான தகவல் களை வெளியிடும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி வெளிவிவகார அமைச் சர் நியோமல் பெரேரா தெரி வித்துள்ளார்.

மேலும், சில நிறுவனங்கள் நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை தொடர்பில் திரிவுபட்ட தகவல்களை சர்வதேச அமைப்புகளுக்கு வழங்கி வருகின்றன என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். தவறான தகவல்களை வழங்கிவரும் இவ்வாறான மனித உரிமை நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் வருந்தத்தக்கவை எனவும், இவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள் ளார். (வ)

## படையினரின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டப்போரின்போது 'கணிசமான' சிவிலியன் பாதிப்புகள் இடம்பெற்றுள்ளன என்ற உண்மையை நிலைநிறுத்தியுள்ளது.

இதன்மூலம் இந்த ஆணைக்குழு 'சிவிலியன் பாதிப்புகள் பூஜ்யம்' என்ற இலங்கை அரசின் முன்னைய நிலைப்பாட்டை ஒருபடி மேல் நோக்கி கடந்துள்ளது. இந்தப் பாதிப்புகளுக்கு இராணுவத்தின் தவறே காரணம் என பழிசுமத்துவதற்கான அதிசிரம சாத்தியமான கடமையிலிருந்து இந்த ஆணைக்குழு அரைகுறை சாட்சியங்களோடு நழுவியுள்ளது.

எனினும், இந்தக் கைவிலங்கு இத்தகைய பெரும்பாலான செயல்களுக்காக விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்த இந்த ஆணைக் குழுவைத் தடுக்கவில்லை.

பயங்கரவாதக் குழுவோடு போராடுவது இலங்கைக்கு ஒரு கடினமான சவாலாகவே இருந்தது. நல்லிணக்க ஆணைக்குழு, 2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையை விமர்சித்துள்ளது. இலங்கை அரசையும், விடுதலைப்புலிகளையும் சமத்துவமான அதிகாரம் படைத்தவையாக இந்த உடன்படிக்கை பேணுகிறது என அது குற்றங்கண்டுள்ளது.

அதேவேளை, கணிப்பீட்டில் அரசு சார்பற்ற ஒரு குழுமத்தை அரசே உயர்நிலைகளை வகிக்கின்றது என்ற கருத்தை அறிக்கை பரிதாபகரமாகத் தவறவிட்டுவிட்டது.

யுத்த சூனிய பிரதேசத்திலுள்ள சிவிலியன்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள் தொடர்பாக இராணுவம் மீது குற்றஞ்சுமத்த இந்த அறிக்கை முயலவில்லை. யுத்த சூன்யப்பிரதேசத்தில் படையினர் திருப்பிச்சுடுவதை 'கொள்கைகள் சமன்பாடு' என அறிக்கை குறிப்பிடுகிறது. வேறுவிதமாகக் கூறுவதாயின், விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கும் இலட்சியத்துக்கு இத்தகைய செயற்பாடு தவிர்க்கமுடியாததொன்றே என்பதாகும்.

சிவிலியன்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக ஐந்து அம்சங்களின் சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து அறியப்படவேண்டும் என நல்லிணக்கக் ஆணைக்குழு அறிக்கை அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

அதேவேளை, பாதுகாப்புப் படையில் ஒருவரின் முறைகேடான நடத்தை நிரூபிக்கப்பட்டால் அவரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தி, குற்றவாளியாயின் தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் கோருகிறது.

இராணுவத்திடம் சரணடைந்த அநேக விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் காணாமற்போயுள்ளனர். இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அளித்துள்ள சாட்சியங்களை அடிப்படையாகக்கொண்டு விசாரணை நடத்துமாறும் ஆணைக்குழு அரசைக் கோரியுள்ளது. 'சிறிலங்கா கொலைக்களம்' ஆவணப்படத்தின் நம்பகத்தன்மை குறித்து, சந்தேகங்கள் கிளப்பியுள்ள ஆணைக்குழு, அதில் இடம்பெறும் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பயங்கர உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துமாறு அரசைக் கோரவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான உண்மை நிலைப்பாட்டையோ, பொய்மையையோ நிலைநாட்டத் தூண்டவில்லை.

சிவிலியன் பாதிப்புகள் சம்பந்தமான குழப்பநிலையைக் குறிப்பிடாமல் தவிர்த்து, மனித நேயத்துக்கமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குமாறே அரசை ஆணைக்குழு இலங்கையின் பல் சமூக அமைப்புகளைச் சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போதுமானவையாக அமையவில்லை.

போர் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொள்ளும் முதல்தரச் சோதனை நடவடிக்கையாக இது இருக்கலாம். அரசு நல்லிணக்கப்பாட்டிலும், கடந்தகால படிப்பினைகளிலும் அக்கறை செலுத்துமானால், அது ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப செயற்பட ஆரம்பிக்க வேண்டும். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

## கடும் மழை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலேயே இந்தக் காலநிலை நிலவும். மேலும் குறித்த மாகாணங்களில் சில மாவட்டங்களில் கடும் மழை வீழ்ச்சி ஏற்படும் சாத்தியம் உள்ளது. அத்துடன் நாடு முழுவதும் கடும் குளிரான காலநிலையே நீடிக்கும். நாடு முழுவதும் உள்ள கடற்கரைப் பிரதேசங்களில் கடும் மழை பெய்யும் வாய்ப்புள்ளது. ஆழ்கடல் பகுதிகளில் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி மணிக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும். சில வேளைகளில் 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வரையில் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் - என்றுள்ளது. (த-15)

## கண்ணீர் அஞ்சலி



*எங்கள் சக ஊழியர் மயூதரனின் அன்புத் தந்தை*

**அமரர் சி.புவனேந்திரராசா**

*அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.*

**Online Uthayan பணியாளர்கள்**

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் மகேஸ்வரன்

(ஸ்ரீமுருகன் இரும்பகம் ஏ- வீதி, கிளிநொச்சி)



**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்பிரார்த்திக்கின்றோம்.**

வர்த்தக சங்கம்,
கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்கள்



### வைரவப்பிள்ளை சிவகுருநாதன்

போலிட்டியை பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வையிரவப்பிள்ளை சிவகுருநாதன் நேற்று (22.12.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செம்மனச்செல்வியின் கணவரும் கெங்காதேவி, குமாரராசாவின் தந்தையும் புவனராசாவின் மாமனும் பாலசுப்பிரமணியம், செல்லையா, நடராசா, செல்வலக்சுமி, காலஞ்சென்ற ஆறுமுகம், முருகையா, ஆகியோரின் சகோதரனும் ராகவனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நடராசா மனோன்மணி


குப்பிளான் தெற்கு வீரமனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மனோன்மணி நேற்று (22.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் பராசக்தி காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பானுமதி, கதிரமலை, லோகநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயும் வீரசிங்கம், நவரத்தினம், காலஞ்சென்ற பத்தமலீலா மற்றும் இராசாத்தி, விக்கினேஸ்வரி (டென்மார்க்) ஆகியயோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வீரமனை, குப்பிளான் தெற்கு,
ஏழாலை. குடும்பத்தினர்.

### பிலோமினா இறப்பியேல்பிள்ளை(மணி)




உயரப்புலம் ஆனைக்கோட்டையைவசிப்பிடமாகக் கொண்ட பிலோமினா இறப்பியேல்பிள்ளை நேற்று (22.12.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் 23.12.2011 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கை தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள்.

## முதலாம் வருட நினைவஞ்சலியும் ஆண்டுத்திவச அழைப்பும்



அமரர்
**சுப்பிரமணியம் சண்முகராசா**

தோற்றம் 16.05.1955 — மறைவு 03.01.2011

பாசத்தின் உறைவிடமே சண்முகம்
நீங்கள் பாதியிலே சென்றதேன் விண்ணகம்
எம் நெஞ்சினிலே என்றுமே உம் முகம்- உமை-இழந்ததினால்
எம் கண்களில் நீர் மட்டும் சங்கமம்
மீண்டும் வந்திடுவீர் எம்மிடம் உமது வரவிற்காய்
ஓராண்டு மட்டுமல்ல ஓராயிரம் ஆண்டு காத்திருப்போம்.

கடந்த 03.01.2011 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சுப்பிரமணியம் சண்முகராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினை வஞ்சலியும் வருடத் திவசமும் இன்று (23.12.2011) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து இந்த நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள்,
தெய்வேந்திரம் சுப்ரா- உணவகம்,
சங்கானை

வட்டு- தெற்கு,
வட்டுக்கோட்டை.
(11946)(7-8-9)

---

வன்னிப் பகுதியில் 'உதயன்' வாசகர்களுக்காகச் சேவையாற்றி வருகிறது வன்னிப் பணிமனை. உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க நாடுங்கள்...

**'உதயன்'** வன்னிப் பணிமனை (புனித தெரேசா பாடசாலை முன்பாக) கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

---

## SPOKEN ENGLISH

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**MyWay English**

182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
சனி : காலை 8-9, 9-10, 10-11, 11-12

இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை
சனி : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

NSB அருகில் நெல்லியடி
ஞாயிறு : காலை 8-9, 9-10, 10-11, 11-12

ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி
ஞாயிறு : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

**077 33 63 456**

---

பாடசாலை உபகரண பொருள்கள் மொத்த விற்பனை

No.-01, No.-02 கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரண பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: **0718617918** (11944)

குறிப்பு: பொருள்கள் உரிய இடங்களுக்குக் கொண்டுவந்து தரப்படும்.

---

## IDM சங்கானையின் ஒருநாள் செயலமர்வு

**Your Future** ........take IT easy

இடம்: IDM Nations Campus
30, Main Street
Chankanai
காலம்: 24-12-2011-Saturday
நேரம்: 9.00 am-3.00pm
Lunch & Refreshments will be provided
கொழும்பு மற்றும் யாழ் வளவாளர்களின் விரிவுரைகள்

பங்குபெற
உங்கள் பெயர் முகவரி தொ.பே இல என்பவற்றைக்குறிப்பிட்டு 0777 885135
075 255 0970
என்ற இலக்கங்களிற்கு இன்றே SMS அனுப்பவும்

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிடுங்கள்

பதிவுக்கட்டணம்: Rs.300/= only
கற்கைநெறி இலவசம்

for whom:

மாணவர்கள் 24ந் திகதியன்றும் நேரடியாக பதிவினை மேற்கொள்ளலாம்

IDM Nations Campus
No:30,Main Street,Chankanai
021 7 429 060 / 021 320 2366

---

- கனடா செல்ல வேண்டுமா?
- பிரான்ஸ், சுவிஸ், நோர்வே செல்ல விருப்பமா?
- IELTS இல்லாமல் லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில வேண்டுமா?
- ஆஸ்திரேலியா குடும்பத்துடன் செல்ல விளைகின்றீர்களா?
- அனைத்து நாடுகளுக்கும் உரிய விசா ஆலோசனைகள்

வாருங்கள் சனி அல்லது ஞாயிறு
உங்கள் முன்மாதிரியான ஆலோசனை நிறுவனத்துக்கு

*விசா வியளம் விளம்பும் பிரிவு*

## திசை காட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016
0214914527
web: www.thisaikaddi.lk
e-mail: thisaikaddi@sltnet.lk



(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

---

## ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி

ஒரு குழந்தை தன் தாய்மொழியைப் பேசப் பழகுவதற்காக இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில்லை. மாறாகத் தன் குடும்பத்தில் உள்ளவர்கள் பலரும் பேசும் வசனங்களை அவதானித்தே தானும் அதுபோலப் பேசப்பழகுகிறது. ஒரு மொழியை பேசப்பழகுவதற்கான சரியான வழி இதுபோன்ற பழக்கப்படுத்தலே.

எமது ஆங்கிலக் கற்பித்தல் முறையும் இதுபோன்றதே. இங்கு இலக்கணப் பயிற்சியோ எழுத்துப் பயிற்சியோ வழங்கப்படுவதில்லை. மாறாக மாணவர்களுக்கு வசன அமைப்பு முறையை விளக்கி ஏனையவர்களுடன் உரையாடல் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலம் 3 மாதத்தில் பழக்கப்படுத்தப்படுகிறது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான இப்பயிற்சி நெறியில் இணைந்த அனைத்து மாணவர்களுமே தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புகிறீர்களா?

பயிற்சியில் இணைய விரும்பும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், கிராமசேவகர்கள் 25.12.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப. 8 - 10 பிரிவு II மு.ப. 10 - 12 பிரிவு III பி.ப. 01 - 03 பிரிவு IV பி.ப. 03 - 05

பயிற்சிநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பித்தருவதற்கான உத்தரவாதம்.

**SAAMSON ENGLISH**
279, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். TEL:0776214567

3 மாத பயிற்சிநெறிக் கட்டணம் 3000/=
(அடுத்த ஆண்டிலிருந்து - 6500/=) (11878) (5-6)

---

# NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.

**2014 A/L** **CHEMISTRY**

By
**S. DIAS**

ஆரம்பம்: 28.12.2011
**Wednesday 3.00 p.m.**

(C/7120)(5,6,7)

---

## 6 இலவச புத்தகம்

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற விரும்பும் அனைவருக்கும் MyWay இன் 6 ஆங்கில புத்தகங்கள் மற்றும் பயிற்சி வகுப்பு இலவசம்.
23.12.2011 இன்று அருகிலுள்ள MyWay கிளையினை அணுகவும்

**MyWay English**
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
NSB அருகில் நெல்லியடி
இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை
ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி
077 33 63 456

---

**COLLEGE OF CHEMISTRY**
Palam Road, Kantharmadam

**PHYSICS**
N.KAPILAN (B.sc)
**A/L 2014**
ஆரம்பம்: 29.12.2011
Thursday 4.00 p.m.
(11958)

அனுமதிக்கு பெற்றோரின் வருகை அவசியம்.

---

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.

**2014 A/L** கணித, உயிரியல் பிரிவு

**பௌதிகவியல்**
திரு. S.சோதிலிங்கம் — திரு. R.குமரன்

**இரசாயனவியல்**
திரு. K.சிவத்திரன் — திரு. M.மகேஸ்வரன்

**உயிரியல்**
திரு. T.கெங்காதரன் — திரு. T.தம்பிராசா
(வழமையான ஆசிரியர்)

**இணைந்த கணிதம்**
திரு. S.செந்தில்ராஜ் — திரு. செந்தில்நாதன்

(C/7121)(5,6,7)

**ஆரம்பம்: 28.12.2011 புதன் 8.30 a.m.**

---

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

*இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப்பரீட்சை* **(LLB)**

P. உமாசங்கர் — கட்டணம்: 1000/=

*இலங்கை நிர்வாக சேவை* **(SLAS)**

P. கமல்தாசன்

- சகல பாடங்களின் கடந்தகால வினா விடைகளுடன் முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள் ஆராயப்படுகின்றன.
- 2012ஜனவரி 7 ஆம் திகதிவரை சனிக்கிழமைகளில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை.

**நாவலர்** கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

---

## D.C.M

வெலிங்டன் சந்தி அருகில்
(BEACON கல்வி நிறுவனத்தில்)

**கணக்கீடு**
AP.பகீரதன் B.B.A(FM.Spl.)

**A/L 2013** Sat, Sun 1-2
**A/L 2012**
பங்குடமை Sat, Sun 2-3
காசுப்பாய்ச்சல்கூற்று Sat, Sun 3-4
(11967)

ஆரம்பம்: 24.12.2011 சனிக்கிழமை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.